
கண்ணன்
வளி மலர்'54.
ரூ.1/-

# கேட்டீர்களா!

## ரேடியோவில் கல்வி ஒலிபரப்பு

இந்தியா முழுவதும் இந்த மாதத்தை ரேடியோ மாதம் என்று வைத்து விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ரேடியோவை நாடெங்கும் பரப்பவே இந்த விழாக்களைத் தயாரித்திருக்கிறார்கள். மற்ற அம்சங்களுடன் குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் கல்வி ஒலிபரப்பும் இதில் சேர்ந்துள்ளன. சாதாரணமாகப் பள்ளிக்கூடங்களுக்கான நிகழ்ச்சிகள் தினமும் நடந்துதான் வருகின்றன. குழந்தைகளுக்குப் பயனுள்ள பல விஷயங்களை இந்த ஒலிபரப்பில் சேர்ந்திருக்கிறார்கள். மாலை இரண்டு மணிக்கும் நாலு மணிக்கும் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் நமக்கு வரும் கடிதங்களிலிருந்து இந்த நிகழ்ச்சிகளைக் கேட்கப் பலருக்கு வாய்ப்பில்லாமலே போவதாகத் தெரிகிறது. கல்வி ஒலிபரப்பைக் கேட்கவே ஆளில்லாமல் போவது ஒரு பரிதாபகரமான விஷயம். இவ்வளவு பயனுள்ள ஓர் அம்சத்தை பள்ளிகள் பயன்படுத்திக்கொள்ள இந்த நேரங்கள் தடையாக இருந்தால் ரேடியோ அதிகாரிகளுக்கு எழுதலாம். எழுதினால்தானே அவர்களுக்கும் தெரியும்? அல்லது பள்ளி நேரத்தில் இந்த ஒலிபரப்புக்கு இசைய மாற்றம் செய்ய முடிந்தாலும் செய்து கொள்ளலாம். மாணவ-மாணவிகள் இந்த ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை உட்கார்ந்து கேட்கவேண்டும். குழந்தைகளுக்குப் பயன்படும் பல விஷயங்களை ரேடியோவில் சிரமப்பட்டுச் சேகரித்து ஒலிபரப்புவது மிக மிக மகிழ்ச்சியான விஷயம்.

## கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

சென்ற இதழ் வெளிவரு முன்பாக, கவிமணி அவர்கள் காலமான செய்தி வந்துவிட்டது. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் பாடல்களை நாம் எல்லாரும் படித்து வருகிறோம். பாரதிக்கு அடுத்தபடி வந்துள்ள கவிஞர்களில் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களை முக்கியமாகக் குறிப்பிடலாம். அவருடைய கவி சாந்தமானது. எளிமையும் உண்மையின் அழகும் நிரம்பியது. பாடப் பாடத் தெவிட்டாதது. பச்சைக் குழந்தைகள்கூடப் பாடக்கூடிய சிறந்த பாட்டுக்களை அவர்கள் பாடியிருக்கிறார்கள். அவருடைய மறைவு தமிழுக்கே ஒரு நஷ்டம்தான். கவிமணியைப் பற்றிய கட்டுரை ஒன்று கண்ணனில் விரைவில் வெளிவரும்.

## தபால் நூற்றாண்டு விழா

தபால் தலை ஒட்டி, கடிதங்களை அனுப்பும் ஏற்பாடு முதல் முதலில் 1854-ஆம் வருஷம் அக்டோபர் மாதத்தில்தான் அமலுக்கு வந்தது. அதற்கு முன்பு தபாலுக்குக் கட்டணமாகப் பணமே வாங்கப்பட்டு வந்தது. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தபால்களை ஆட்களே சுமந்து சென்று கொடுத்து வந்தார்கள். அப்போது நாடு முழுவதும் 700 தபாலாபீஸ்களே ஏற்படுத்தப்பட்டன. இன்று 45,000 தபாலாபீஸ்கள் ஆகிவிட்டன. ரெயில் ஏற்பட்ட சில வருஷங்களில் ரெயில் மூலமாகவும் குதிரை வண்டிகள் மூலமாகவும் ஆள்கள் மூலமாகவும் கப்பல் மூலமாகவும் தபால்கள் அனுப்பப்பட்டு வந்தன. இப்போது விமான மூலமாகவும் அனுப்பப்படுகின்றன. மொத்தம் 36 பாஷைகளில் தினசரி 10 லட்சம் தபால்கள் பட்டுவாடா செய்யப்பட்டு வருகின்றன. உலகத்தின் மிகப் பெரிய ஸ்தாபனங்களுக்குள் இந்தியத் தபால் இலாகாவும் ஒன்று.

# குழந்தைகளே!

5-NOV 1954 MADRAS 18 404 4-54

தீபாவளித் திருநாளாகிய இன்று உங்களுடைய இளம் கரங்களிலே கண்ணன் தவழுகிருன். சென்ற நாலு வருஷங்களாக ஆண்டுதோறும் அவன் உங்களை மகிழ்விக்கத் தவறியதேயில்லை. அந்த உற்சாகத்துடனே இந்த ஐந்தாவது ஆண்டிலும், 'ஜாம் ஜாம்' எனக் குதித்துக்கொண்டு வந்துவிட்டான். மங்கள ஸ்நானம் செய்து, புது ஆடைகள் உடுத்து, மகிழ்ச்சியோடு விளங்கும் உங்கள் முக விலாசத்தை மலர்விக்க வருகிருன்.

உள்ளே பிரித்ததுமே உங்கள் ஆனந்தத்துக்கு ஓர் எல்லை இராது என்பது நிச்சயம். முதலிலேயே நம் அன்புக்குரிய ராஜாஜி அவர்கள் 'கண்ணுமூச்சி' ஆட்டத்தைக் காட்டுகிருர்கள். குழந்தைகள் என்ருல் அவர்களுக்கு எத்தனை அன்பு! இந்த வருஷமும் தம் வேலையெல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு அருமையான ஒரு விஷயத்தை நமக்கெல்லாம் சொல்கிருர்கள். அவர்களுடைய ஆசி நமக்குப் பரிபூரணமாக இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைவோம்.

2/793

இந்த மலரில் பல அறிஞர்களும் பிரபல எழுத்தாளர்களும் எழுதியிருக்கிருர்கள். இளம் கலைஞர்கள் சிலரும் இந்த மலரில் பங்கெடுத்துக்கொண் டிருக்கிருர்கள். தீபாவளி மலர் என்ருல் அது ஒரு கலைக்காட்சிக் கூடமாக அமையவேண்டும் என்பதற்காக எத்தனையோ பேர் சேர்ந்து இந்த மலரை அழகுபடுத்தியிருக்கிருர்கள்.


ஸ்ரீமான் கி. சந்திரசேகரனைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவருடைய கதை உங்களுக்கு ஒரு நல்விருந்தாக அமையும் என்று நம்புகிறேன். கி. வா. ஜகந்நாதன் அவர்களையும் உங்களுக்குத் தெரியும். அவருடைய ஔவையாரின் கதை அழகான புதிய கதை. டாக்டர் மு. வரதராசன் அவர்கள் நமக்கு ஓர் அரிய கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிருர்கள். கி. சரஸ்வதி அம்மாள், ராஜி, கி. ரா., பெ. தூரன், திருச்சி அண்ணு, பெ. நா. அப்புஸ்வாமி, ஸேனு, கா. ஸ்ரீ. ஸ்ரீ., ராஜன் முதலானவர்களும் சிறப்பாக எழுதியிருக்கிருர்கள். அழ. வள்ளியப்பாவும் காட்டூர் கண்ணனும் அழகான பாடல்கள் எழுதியிருக்கிருர்கள்.

'கிரிக்கெட் ஆட்டம்' என்ற மூவர்ணப் படமும், ரெயில்வே நூற்ருண்டு விழாக் காட்சிகளும் உங்கள் கவனத்தைக் கவரக் கூடியவை. இந்த இதழில் மற்ருெரு விசேஷமான பகுதி குமாரி சாருபாலாவின் அபிநயப் படங்கள்.

அட்டைப் படம் வரைந்தவர் ஓவியர் தலால். ஸாமி, சுசி, மகான், சுப்பு, டாலி, சீமா, விஷ்ணு, உமாபதி, திருவேங்கடம் ஆகியோரும் மலரில் பங்கு கொண்டிருக்கிருர்கள். புகைப்படம் உதவியவர்கள்: என். ராமகிருஷ்ணு, டாக்டர் மூர்த்தி, சந்தாமியான், ராமலிங்கம், லஸ் ஸ்டூடியோ தாண்டவமூர்த்தி.

இந்த மலரைச் சிறப்பாக ஆக்கிய அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருேம். —ஆசிரியர்.






# பொருள் அடக்கம்



மலர்: 5 இதழ்: 20


| | பக்கம் |
|---|---|
| குழந்தைகளே! | 1 |
| கண்ணாமூச்சி - ராஜாஜி | 4 |
| பண்பாடு - கி. சந்திரசேகரன் | 6 |
| இளநீர்ப் பாட்டு - கி. வா. ஜகந்நாதன் | 11 |
| தேர் கொடுத்தவர் - அழ. வள்ளியப்பா | 15 |
| பதினாலு மரக்கால் - ஜாஜலி | 16 |
| சமுத்திர ராஜகுமாரி - சரஸ்வதி அம்மாள் | 17 |
| இதுவும் ஒரு பாவம் - டாக்டர் மு. வ. | 22 |
| நிலாப்பாட்டி ஏரி - பெ. தூரன் | 24 |
| சூரப் புலி - திருச்சி அண்ணா | 29 |
| ரெயில்வே நூற்றாண்டு விழா | 33 |
| கண்ணன் பிறந்தான் - கி. ரா. | 38 |
| பாலர் கவி அரங்கம் | 41 |
| வாசுவின் தீவலி - பூவாளூர் சுந்தரராமன் | 43 |
| துளசி பூஜை | 44 |
| கண்ணன் - என் சேவகன் | 48 |
| குமாரி சாருபாலா - புகைப்படங்கள் | |
| பொழுது போக்கு - புத்தகத் தட்டு | 49 |
| சித்திரக் கட்டம் - எஸ். சுந்தரம் | 50 |
| ஜோடி சேருங்கள் | 51 |
| விடுகதைப் பாடல்கள் - ஜோதிமாமா | 52 |
| பாப்பாட்டி | 54 |
| கண்ணாமூச்சி ரே! ரே! - டாலி | 56 |
| திருடனும் ஜவானும் | 57 |
| எங்கள் ஜாதி | 58 |
| சைனா எழுத்து - ரகமி | 60 |



சென்னை-600 008

குழந்தைகள் எத்தனை? பக்கம் ... 61
போட்டோ க்விஸ் - என். ராமகிருஷ்ணா .. 62
அம்புக் குறி .. 64
கத்தியும் கடிதமும் - ராஜன் .. 65
தூங்கும் அழகி - ஆர்வி .. 71
ஓடிப் போனவன் - ஜோதிர்லதா கிரிஜா .. 73
கிரிக்கெட் ஆட்டம் - வெட்டி ஒட்டும் படம் ..
சந்திரகிரிக் கோட்டை - ஜனு .. 81
சக்குவும் நானும் - காட்டூர் கண்ணன் .. 84
பச்சைப் பாவாடை - ராஜி .. 86
அதிரூபனை மணந்த அரசகுமாரி - ச. சுப்பு .. 92
அகத்தியர் சாபம் - ச. கு. கணபதி ஐயர் .. 97
தாய்க்கு ஒரு பிள்ளை - தங்கமணி .. 100
வாணாசுரர் வலை - நீலம் .. 105
பலூன் வெடித்தது - கனகசபை .. 108
நீதிபதி சாங்கோ - பெ. நா. அப்புஸ்வாமி .. 113
நல்ல வேளை - கா. ஸ்ரீ. ஸ்ரீ. .. 116
லீடர் மணி - ஆர்வி .. 120
பட்டு ரோஜா - 'ஸேனு' .. 123
டாக்டர் நாடகம் - கீதா .. 126

**புகைப்படங்கள்:** டாக்டர் வி. ஆர் மூர்த்தி, என். ராமகிருஷ்ணா, லஸ் ஸ்டுடியோ, சந்தாமியான், E. ராமலிங்கம்.

**அபிநயம்:** குமாரி சாருபாலா, கும்பகோணம்.

**ஓவியர்கள்:** ஸாமி, சுசி, மகான், சுப்பு, டாலி, உமாபதி, விஷ்ணு, சீமா, திருவேங்கடம்.

**அட்டைப்படம்:** தீனுநாத் தலால்.






# கண்ணாமூச்சி

கடவுள் அப்பா மாதிரியா? அம்மா மாதிரியா? நமக்கெல்லாம் அவர் தகப்பனா? அல்லது தாயாரா?

நான் சொல்லுகிறேன் கேளுங்கள். பகவான் இஷ்டம் போல் தாயும் ஆய்விடுவார், தகப்பனும் ஆய்விடுவார். குழந்தையும் ஆகி விளையாடுவார். நாம் எல்லாம் அந்தக் குழந்தைக்கு விளையாட்டுச் சாமான்கள்.

குழந்தாய்! நீ உன் விளையாட்டுச் சாமான்களை விரும்புகிறாயா, இல்லையா? அவற்றின் பேரில உனக்கு எவ்வளவு அன்பு? அப்படியே பகவானுக்கு நம் எல்லார் பேரிலும் அன்பு.

நீ சிலசமயம் விளையாட்டுச் சாமான்களை உடைப்பது உண்டா? கடவுள்கூடச் சில சமயம் அவருடைய விளையாட்டுச் சாமான்களை உடைப்பது உண்டு. அவருக்கு எல்லாம் வேடிக்கையே.

உன் விளையாட்டுச் சாமான்களை நீ பத்திரமாக வைத்துக்கொள். விளையாடி முடிந்தபின் சரியாக எடுத்து வைக்க வேண்டும். இங்குமங்கும் போட்டுவிடக் கூடாது.

உனக்குக் குழந்தைக் கடவுளின் பெயர் தெரியுமா? அந்தக் குழந்தைக்குத்தான் 'கண்ணன்' என்று பெயர். நல்ல கெட்டிக்காரக் குழந்தை. பெரியவன் ஆனபின் அருச்சுனனுக்குத் தேர் ஓட்டினான். தேர் ஓட்டும் கடவுளுக்குப் பெயர் 'பார்த்தசாரதி.'

கடவுள் எங்கே இருக்கிறார்? எங்கேயும் இருக்கிறார். அவர் நம்மோடு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடுகிறார். "பிடித்தேன்" என்கிறோம். "இல்லை!" என்கிறார் ஒளிந்துகொண்டு. சிரித்துக்கொண்டு எங்கெங்கோ ஒளிந்துகொள்கிறார். விடாமல் இந்த ஆட்டம் ஆடுகிறார்.

ராமாயணம், மகாபாரதம், பாகவதம், உபநிஷத்து, பகவத்கீதை இவையெல்லாம் இந்தக் கண்ணாமூச்சி

ஆட்டத்தைப்பற்றிச் சொல்லும் நூல்கள். நீ படிக்க வேண்டிய நூல்கள். கோயிலில் நடக்கும் பூஜையும் இந்தக் கண்ணமூச்சியே. நீயும் கலந்துகொள். நமக்கு எல்லாம் சிக்காதவர் உனக்குச் சிக்கிவிடுவார். நல்லவர்களுக்குத் தான் சிக்குவார்.

ஆழ்வார்கள் வேறு விதமாகவும் சொல்லுவார்கள். கண்ணன் அல்ல மறைந்துகொண்டு நம்மைத் தேடச் சொல்லுவது; அவன் நம்மைத் தேடுகிறான் என்று ஆழ்வார்கள் சொல்லுகிறார்கள். நாம் அவனுக்குச் சிக்காமல் ஓடி ஒளிந்து, அவனுக்கு ஆட்டம் தருகிறோம். அதாவது நம்முடைய ஆசைகள், சுயநலங்கள் இவற்றை வைத்து நாம் மறைந்துகொண்டு அவனுக்குச் சிக்காமல் ஏமாற்றப் பார்க்கிறோம். நம்முடைய பொய், பாபங்கள் இவற்றிற்குப் பின் ஒளிந்துகொண்டு பகவானுக்குச் சிக்காமல் தப்பப் பார்க்கிறோம். ஆனாலும் கண்ணன் விடமாட்டான். நம்மைப் பிடித்தே தீருவான்!






'தாம்தித்தா தைத்தித்தா
தாம்தித்தா தைத்தித்தா' என்று சௌக்க காலத்தில் வாயால் சொல்லிக்கொண் டிருந்த ஸ்ரீகாந்த், துரித காலத்தில் தொடங்கினான். உள்ளே ஆபீஸ் அறையில் எதையோ ஆராய்ந்துகொண் டிருந்த அவன் அப்பா சங்கர் ஐ. ஏ. எஸ். ஸுக்கு வேலையில் ஊக்கம் கலைந்துவிட்டது.

அடுத்த விநாடி நாற்காலியை 'டர்'ரென்று பின்னால் தள்ளி, வேகமாய் அறையின் வெளியே எட்டிப் பார்த்தார்:

"என்னடா சதா உளறிண் டிருக்கே! பாடம், கணக்கு ஒண்ணையும் செய்யாமே, இதென்னடா பேத்தல்?"

பெட்டிப் பாம்பாய் ஸ்ரீகாந்த் அடங்கிவிட்டான். போதாததற்கு அவன் ட்யூஷன் வாத்தியாரும் அதே சமயம் அவனைச் சனி பிடிப்பதுபோல் பிடித்துக்கொண்டார்.

ஸ்ரீகாந்துக்கு வயசு பன்னிரண்டு முடியவில்லை. கண்கள் இரண்டும் குறு குறுவென்று பிரகாசித்தன. அவன் முகம் நல்ல லட்சணமாயிருந்தது. கிராப்பின் சுருட்டை மயிர் சீவியும் படியாது அவனுக்குத் தனிக் கவர்ச்சியை அளித்தது. அவன் நிறம் பளிச்சென்றிருந்ததால் பார்க்கும் பொழுதே யாரும் அவனிடம் பிரியம் காட்டுவார்கள்.

"ஏண்டா, கணக்கேபோடலையே! அப்படியே நோட்டுப் புஸ்தகம்

காலியாயிருக்கே! கணக்கு வரல லேன்னு கூத்தாடறதா?'' என்று வாத்தியாரும் அவனைக் கண்டிக்கத் தொடங்கினர்.

'உஸ்' என்று அவன் ஜாடையாய்த் தன் வாயைப் பொத்தி அவரை இரைய வேண்டாமெனத் தடுத்தான். குசு குசு வென்ற குரலில், ''சார்! நேத்திக்கு இப்படித்தான் அப்பாவும் ஆபீசு 'பைல்'லே ஏதோ கணக்கு வராமே தவிச்சார். அப்போ அம்மா அப்பாவைக் கூப்பிட்டு, 'இங்கே பாருங்கோ, மூளையைப் போட்டுக் குழப்பிக்காதேங்கோ. சாப்பிட எழுந்திருங்கோ; அப்புறம் கணக்குப் பாத்தேள்னு சரியா வரும்' என்ருள். நானும் கணக்கு வரல்லேன்னுதான் நாட்டியப் பாட்டைச் சித்தே சொல்லிண்டிருந்தேன். அதுக்குள்ளே அப்பா ஒரு விச்வ ரூபமும், நீங்க ஒரு ராட்சஸ ரூபமும் எடுத்துட்டேள்!'' என்ருன்.

உபாத்தியாயர், ''சரிதான், கெட்டிக்காரன். முதல்லே கணக்கைப் போடு'' என்று சொல்லி அவனை அதிகம் வருத்தாமல் பாடம் சொல்லி வைத்தார்.

இரண்டு நாட்களாயின. ரங்கு ஐயங்காரும் அவர் பிள்ளை கோபுவும் ஸ்ரீகாந்தன் அப்பாவிடம் சிபாரிசு வேண்டி வந்தார்கள். கோபு பி. ஏ. பாஸ் பண்ணின பிறகு வேலை கிடைக்காமல் சங்கர் இருந்த ரெயில்வே ஆபீசில் ஒரு குமாஸ்தா வேலைக்கு மனுப்போட்டிருந்தான். நேரிலும் சங்கரைக் கண்டு மனுவைத் தகுந்தபடி சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்க வந்திருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீகாந்த் அடுத்த வராந்தாவில் இருந்தபடி அவர்கள் பேச்சைக் கவனித்து வந்தான்.

''என்ன, ரங்கு! உன் பிள்ளை நல்ல போட்டோ ஸ்பெஷலிஸ்டாச்சே. அவனை ஏதுக்கு இந்த மாதிரி கிளார்க்கு வேலைக்கு மனுப்போடச் சொல்றே? வேண்டாம். அவனுக்கு இயல்பாக உள்ளதைச் செய்யவிடு. அவனைத் தடுத்து வேறு எதையாவது செய்யச் சொன்னல் அவன் குட்டிச் சுவராயிடுவான். அவன் அவன் இயல்புக்குத் தகுந்தபடி விடவேண்டும். சுயேச்சையாகப் போட்டோப் பயிற்சி செய்தால் இந்த நாளிலே பணம் வாரிவிடலாம். குமஸ்தாவாக அவன் என்ன வாழறது? கிடந்தும் கிடந்தும் நூறு நூத்தைம்பதுக்கு மேல் சாகறச்சே கூடக் கிடைக்காது. நான் சொல்றேன், உன் மனசைத் தைரியப் படுத்திண்டு, அவனிஷ்டம் போல் விட்டு விடு'' என்ருர் அவன் அப்பா சங்கர்.

இதைக் கேட்ட ஸ்ரீகாந்துக்கு ஏதோ ஒரு நம்பிக்கை உண்டாயிற்று. தன் அப்பாவின் உண்மையான சுபாவம் தெரிந்தமாதிரி இருந்தது. அன்று சாயங்காலம் அவன், பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் சேர்ந்து நடிக்கும் நாடகத்தைக் கவனித்து விட்டுவர உற்சாகமாக நடந்தான்.



மணி ஏழடித்த பிறகுதான் அவனால் வீடுதிரும்ப முடிந்தது. சங்கர் அதற்குள் நூறு தடவை மனைவி விசாலத்தினிடம், ''எங்கே அவன்? சாயங்காலமான பிறகு எங்கே இருட்டிலே சுத்துகிறான்?'' என்று விடாமல் கேட்கத் தொடங்கினார். ஸ்ரீகாந்தின் ஆசைகளைப்பற்றி. விசாலத்துக்குத் தெரியும், அவள் மெதுவாய், ''எங்கேயும் போயிருக்கமாட்டான். அடுத்தகத்து சுதா நாட்டியம் கத்துக்கறா, அவளோடு கூடப் போயிருப்பான். வந்துடுவான்!'' என்று சமாதானப்படுத்தினாள்.


ஸ்ரீகாந்த் மிக்க எக்களிப்புடன் உள்ளே நுழைவதைக் கண்ட சங்கர், ''என்னடா, எங்கே சவாரி? பசங்கள்ளாம் இருட்டிலே கொம்மாளம் போடறேளா?'' என்று கோபித்தார்.

''இல்லே, அப்பா! எங்க பள்ளிக்கூட ஆண்டு விழாவுக்கு நாடகம் போடப் போறோம். நான்தான் கிருஷ்ண வேஷம். கொஞ்சம் பாடிண்டு ஆடணும். நன்னா இருக்கும். அப்போ நீ, அம்மா ரெண்டு பேரும் வரலாம், வாத்தியார் கூப்பிடுவார் உங்களை.''

''டிராமாவா, கழுதே! அதெல்லாம் கூடவே கூடாது. நாங்க படிக்கறப்போ, இப்படி யெல்லாம் கிடையவே கிடையாது. படிக்கிற நாளிலே ஆட்டமும் கூத்தும் எதுக்கு? பொம்மனாட்டியா நீ ஆடறதுக்கு? ஊஹும், இப்பவே சொல்லிபிட்டேன்! விசாலம், இவனைச் செல்லம் கொடுத்துக் கொடுத்துக் கெடுத்தாச்சு; இனிமே குட்டிச் சுவர்தான். ஹெட்மாஸ்டருக்கு எழுதறேன், இவனை மட்டும் டிராமாவிலிருந்து விலக்கிடுங்கோன்னு. நம்மகத்துலே இந்த வழக்கமே கிடையாது.''

விசாலம் ஜாடையாய் ஸ்ரீகாந்தை அழாமல் அடக்கிவிட்டு, ''போறுமே, நீங்க பாட்டுக்கு ஏதேதோ சொல்றேளே. அவா பள்ளியிலே ஒண்ணும் செய்ய மாட்டா. சும்மா இன்னிக்கு ஒத்திகேம்பா, நாளைக்குத் தள்ளிப்போட்டாச்சும்பா. நீங்க வேண்டாத்துக்கெல்லாம் கடிதாசு எழுதாதேங்கோ'' என்று கூறி அவர்கள் இருவரையும் சாப்பிட அழைத்துச் சென்றாள்.

சில நாட்கள் ஓடின. சங்கர் ஊரைவிட்டு அடிக்கடி உத்தியோக முறையில் வெளி இடங்களுக்கு முகாம் போய் வரவேண்டி இருந்தது. ஸ்ரீகாந்தின் நாட்டிய நாடக ஒத்திகைகளுக்குத் தடையாக ஒன்றும் நேராமல் அவன் அம்மா பார்த்துக்கொண்டாள். ஆனால் விழா



நெருங்க நெருங்க ஸ்ரீகாந்துக்குப் பயம் அதிகமாகியது. திடீரென்று அப்பாவுக்குத் தெரிந்தால் கிருஷ்ண வேஷம் போட முடியாதே!


கடைசியில் பள்ளி விழாவுக்கு அழைப்பு வந்தது. நிகழ்ச்சி நிரலில், ''கிருஷ்ண லீலா ஒரு **நாட்டிய-நாடகம்**'' என்ற குறிப்பைப் பார்த்ததும், சங்கர் மனைவியிடம் விசாரித்தார். ''அவன் வாத்தியார் அவன்தான் கண்ணுக்கு நன்னா இருக்கான்னு அவனை விட மாட்டேங்கறாராம்'' என்று மழுப்பிவிட்டாள் விசாலம்.

விழாவுக்குத் தலைமை தாங்கியவர் கவர்னர். விழாவுக்கு எல்லாப் பெரிய உத்தியோகஸ்தர்களும் மனைவி குழந்தைகளுடன் வந்திருந்தார்கள். சங்கரும் விசாலத்துடன் வந்து முன்னால் ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்தார்.

திரை தூக்கப்பட்டு, கிருஷ்ண லீலா **நாட்டிய-நாடகம்** தொடங்கியது. ஸ்ரீகாந்துக்கு வேஷப் பொருத்தம் ரொம்ப ரொம்ப அழகாய் அமைந்திருந்தது. மயில் தோகைக் கொண்டையும், பீதாம்பரமும் அவனுடைய இயற்கையான உடல் அமைப்பும் கண்ணைக் கவர்ந்தன. வேஷம் திருஷ்டிப்பட்டு விடும்போல் இருந்தது. பார்க்க வந்தவர்கள் கசுமிசுவென்று கிருஷ்ணனுடைய அழகிய தோற்றத்தைப்பற்றியே பேசலானார்கள்.

பின்னணி சங்கீதம் ஆரம்பித்தது. ''தீராத விளையாட்டுப்பிள்ளை-கண்ணன்—தீராத விளையாட்டுப் பிள்ளை'' என்ற பல்லவியைப் பெண்கள் பின்னின்று இசைக்கவும், கழுத்தில் வனமாலை ஊசலாட, கையில் வேய்ங்குழலைப் பிடித்தபடியே கிருஷ்ணன் ஆடிக்கொண்டு வந்தான். அவனைச் சுற்றி ஆயர் பாடியில் உள்ள கோபியர் சூழ்ந்துகொண்டு பலவித நடனங்கள் செய்தனர்.

''தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை'' என்ற அநுபல்லவியைத் தொடங்கியதுமே, கிருஷ்ணன் தனி நடிப்புச் செய்து, கோபியரை ஆடிச் சுற்றி வந்தான். அவன் செய்த சேஷ்டைகள் ஒவ்வொன்றும் பிரமாதம். பெண்களின் தலைப் பின்னலைப் பின்னின்று இழுத்தான். அவர்கள் திரும்பு முன்னே ஓடி மறைந்தான். திடீரென்று வாயில் குழலை வைத்து இடது காலை மடக்கிப் பின்னால் குத்திட்டு நின்றபடியே ஊதுவது போல் பாவனை செய்தான். கோபியர் கண்ணிமைகளை மூடிக்கொண்டே வாய் திறந்தனர். மெல்ல மெல்ல நடந்து வந்து, அவர்கள் திறந்த வாய்களிலே





கட்டெறும்புகளைப் பொறுக்கிப் போடுவதுபோல் நடித்தான். கரகோஷம் ஒரே அடியாய் எழுந்தது. கவர்னர் நாட்டிய - நடிப்பை மிகவும் பாராட்டிக்கொண்டிருந்தார். லீலைகள் எல்லாம் ஆன பிறகு **நாட்டிய-நாடகம்** முடிவடைந்தது.

கவர்னர் தாம் சொன்ன சில வார்த்தைகளில் ஸ்ரீகாந்தின் நடிப்பைப் பற்றியும் தனியாய்க் குறிப்பிட்டார்.

''இவ்வளவு ரமணீயமாகப் பாடி, ஆடிய குழந்தைகளுக்கு நம் ஆசிகள். கிருஷ்ண வேஷம் தரித்த பையன் மிகப் பிரமாதம்! அவனுடைய வேஷப் பொருத்தம் இருக்கட்டும், பாலகிருஷ்ணனுடைய லீலைகளைச் சுய அறிவினுலேயே அவன் அறிந்திருக்க வேண்டும். குழந்தைக்குச் சிரமமே தெரியவில்லை!

''இந்த மாதிரியான கலையுணர்ச்சி, சாதாரணமாய்ப் பள்ளிகளில் உண்டாவதில்லை. வீட்டுப் பண்பாடும் கலந்தால்தான் இது போன்ற கலை வாசனை குழந்தைகளுக்கு வாய்க்கும். இவன் வீட்டில் பெற்றேர்கள் கரிசனையுடன் இவனுடைய கலை அபிருசிகளை வளம்பட வைத்திருக்கவேண்டும். இந்தப் பையனுடைய பெற்றேர்களுக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்'' என்று கவர்னர் பேசிக்கொண்டிருந்தபோதே சங்கர் தம் ஞாபகமாகவே எழுந்திருந்து, தானே குழந்தையின் தகப்பன் என்பதை அந்தக் கூட்டத்திலுள்ளவர் அனைவருக்கும் வெளியிட்டுக்கொண்டார்.

அதனுடன் நிறுத்திக் கொள்ளாமல், முகத்தில் பெருமிதம் தாண்டவமாட கவர்னருக்கும் நன்றி செலுத்த ஆரம்பித்தார் சங்கர். ''என் சார்பிலும், என் மனைவியின் சார்பிலும், என் மகன் ஸ்ரீகாந்தின் சார்பிலும் கவர்னருடைய ஆசிகளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், அவருடைய பாராட்டு, என் குமாரனுடைய கலை அபிருசிகளை மேலும் மேலும் ஊக்கி, இன்னும் இம்மாதிரியான காரியங்களில் புகத் தகுந்த உற்சாகத்தை அளிக்கும் என்றே கருதுகிறேன்'' என்ருர்.

கவர்னர் அவருக்கு வந்தனம் செய்யும் பாவனையாகக் கை கூப்பி வணங்கினுர்.

கடைசி நிகழ்ச்சி தேசிய கீதம். அதைப் பாடுவதற்காகத் தன் சகாக்களுடன் மேடையில் சேர்ந்து தயாராய் நின்ற ஸ்ரீகாந்த், தான் ஆரம்பிக்க வேண்டியதையும் மறந்தான். அவன் அப்பா பேசியதைக் கேட்டதில் அவனுக்குண்டான ஆச்சரியம் எல்லை கடந்தது. 'நம்ம அப்பாவா இப்படிச் சொல்ருர்!' என்று பிரமித்துவிட்டான். தன் காதுகளையே அவன் நம்பாததால், அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அவன் தாயைப் பார்த்தான். அவள் அச்சமயம் ஏனே குனிந்த தலையை நிமிர்த்தவேயில்லை!

# இளநீர்ப் பாட்டு

## கி. வா. ஜகந்நாதன்

ஔவையார் பெரிய புலமை படைத்தவராக இருந்தாலும் அவருக்குப் பணக்காரரைக் காட்டிலும் ஏழைகளிடத்தில்தான் அதிகப் பிரியம். எந்த ஊருக்குப் போனாலும் ஏழைகள் வீட்டுக்குப் போய்த் தங்குவார். அவர்கள் கூழைக் குடிப்பவர்களாக இருந்தாலும், தாமும் அந்தக் கூழில் ஒரு கை வாங்கிக் குடித்து மகிழ்ச்சி அடைவார். அருமையான கவிகளைப் பாடுவார்.

ஒரு நாள் ஒரு சிறிய ஊருக்குப் போயிருந்தார். அங்கே ஓர் உழவன் வீட்டில் தங்கினார். அந்த உழவன் சுறு சுறுப்புள்ளவன். சோம்பலே இல்லாதவன். ஔவையார் போன அன்று அந்த வீட்டில் விருந்து செய்தார்கள்.

''என்ன அப்பா விருந்து? நான் வந்தேன் என்ற சந்தோஷத்தாலா?'' என்று ஔவையார் கேட்டார்.

''நீங்கள் வந்தது சந்தோஷந்தான். ஆனால் அந்தச் சந்தோஷத்தை இவ்வளவு நன்றாக விருந்து வைத்துக் கொண்டாட எங்களுக்கு முடியாது. இன்று ஒரு நண்பரால் உங்களோடு இந்த விருந்தை உண்ணும் பாக்கியம் கிடைத்தது.''

''யார் அந்த நண்பர்?''

''அது ஒரு சின்னக் கதை. கேட்பதாக இருந்தால் சொல்கிறேன்'' என்றான் உழவன்.

''தாராளமாகச் சொல் அப்பா, கேட்கிறேன்'' என்று ஔவையார் கூறவே, உழவன் கதையை ஆரம்பித்தான்.

* * *

என்னுடைய தகப்பனார் நன்றாகப் படித்தவர். அவருக்கு இலக்கணம் இலக்கியம் எல்லாம் வரும். எனக்கு அவர் பாடம் சொல்லித் தந்தார். இந்த ஊரில் மிகவும் ஏழை ஒருவர் இருந்தார். அவருக்குக் கண் இரண்டும் தெரியாமையால் வெளியிலே சென்று வேலை எதுவும் செய்ய முடியாது. வீட்டில் இருந்தபடியே நூல் நூற்று வந்தார்.

அவருக்கு ஒரு பையன்; என்னை விட ஐந்து வயசு சிறியவன். அவன் வயலுக்குப் போய்க் கூலிவேலை செய்தான், அவனுக்கு இரண்டு நாழி நெல்தான் கிடைத்தது. அந்தப் பையனுக்குப் படிக்க வேண்டும் என்ற ஆசை. ஆனால் நேரம் இல்லை. இரவு வேளைகளில் வந்து என் தகப்பனாரிடம் பாடம் சொல்லிக் கொண்டான்.

இரண்டு வருஷங்கள் சிரமப்பட்டுக் கற்றுக் கொண்டான். ஒரு நாள் ஒரு குறுணி நெல்லைக் கொண்டு வந்து என் தகப்பனார் முன் வைத்து வணங்கினான்.

''இது எதற்கு அப்பா?'' என்று அவர் கேட்டார்.

''எனக்கு இவ்வளவு அன்புடன் பாடம் சொல்லித் தருவதற்கு நான்

என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! என்னால் இயன்ற காணிக்கை இது'' என்று அவன் சொன்னான்.

''வேண்டாம் அப்பா. நீ நன்றாகப் படித்து முன்னுக்கு வந்தால் அதுவே போதும். உன்னுடைய அறிவுக்கு நீ நிச்சயம் பெரிய புலவனாக வருவாய். இந்தா, இந்த நெல்லைக் கொண்டு போ. நான் கொஞ்சம் வெல்லம் தருகிறேன். அதையும் கொண்டுபோய் உங்கள் வீட்டில் சர்க்கரைப் பொங்கல் வைத்துக் கடவுளுக்கு நிவேதனம் செய்யச் சொல்'' என்று ஓர் உருண்டை வெல்லத்தையும் சேர்த்துக் கொடுத்தார்.

அவன் கண்ணில் நீர்வார அதை வாங்கிக்கொண்டான். என் தந்தையார் சொன்னபடியே செய்து, அந்தப் பொங்கல் பிரசாதத்தில் கொஞ்சம் கொண்டு வந்து கொடுத்தான்.

அவன் நான்கு ஐந்து வருஷங்கள் பாடம் கேட்டான். அவனுடைய தகப்பனாருக்கு வரவர வயசாகி வந்தது. அவர் நோய்வாய்ப் பட்டார். அவருடைய தம்பி ஒருவர் ஒரு காதத்துக்கு அப்பால் ஓர் ஊரில் வாழ்கிறார். அவர் தமையனாரைக் குடும்பத்துடன் அழைத்துப்போய்த் தம் அருகிலே வைத்துக் கொண்டார்.

அந்தப் பையன் நல்ல புலமையை உடையவனானான். அடிக்கடி இங்கே வந்து என் தந்தையாரை வணங்கி விட்டுப் போவான். நாளடைவில் அவனுக்கு அரசசபையில் பெருமதிப்பு உண்டாயிற்று.

என்னுடைய தந்தையார் இறந்து போனபோது அந்தப் புலவர், என் தகப்பனாரிடம் வாசித்தவர், வந்திருந்தார். அப்போது அவர் துடித்த துடிப்பைப் பார்க்க வேண்டுமே! என் தகப்பனார் காலத்துக்குப் பிறகும் அவர் அவ்வப்போது இங்கே வருவதுண்டு. இப்போதெல்லாம் அவர் வந்தால் வெறுங் கையோடு வருவதில்லை. காயோ, பழமோ, நெல்லோ, நெய்யோ கொண்டு வருவார். என்னை அண்ணா என்றுதான் அழைப்பார்; நானும் தம்பி என்றே முறைவைத்துப் பேசுவேன்.

இரண்டு நாட்களுக்கு முன் அவர் வந்திருந்தார். சம்பாநெல் இரண்டு கோட்டையும், வெல்லம் ஆறு உருண்டையும், வாழைப்பழம் இரண்டு தாறும், காய்கறிகளும் வண்டியில் போட்டுக்கொண்டு வந்தார்.

''எனக்கு ஒரு செல்வர் நிறைய அனுப்பினார். 'அண்ணன் வீட்டுக்கும் கொண்டு போய்க் கொடுத்து வாருங்கள்' என்று என் மனைவி நினைப்பூட்டினாள். நான் இத்தகைய



லாபங்களைப் பெறுவதற் கெல்லாம் காரணம் இந்த வீடுதானே?'' என்று சொல்லும் போதே அவர் கண்ணில் நீர் துளும்பியது.

நீங்கள் சரியான சமயத்தில் வந்தீர்கள். அவர் கொடுத்த பண்டங்களை வைத்துக்கொண்டே இந்த விருந்தைச் செய்தோம்.

* * *

இப்படி அந்த உழவன் சொல்லி அளவற்ற மகிழ்ச்சியை அடைந்தான்.

''உனக்கு இலக்கண இலக்கியப் பயிற்சி உண்டா?'' என்று ஔவையார் கேட்டாள்.


''ஓரளவு உண்டு. அது பரம்பரைச் சொத்து ஆயிற்றே! ஆனாலும் என் தம்பி இருக்கிறாரே, அவரைப் போல ஆக முடியுமா? அதெல்லாம் முற்பிறப்பில் செய்த புண்ணியம்'' என்றான் உழவன்.

பிற்பகல் அந்த வீட்டின்பின்னே உள்ள தென்னந்தோப்பில் நிழலாக இருக்குமென்று, ஔவையாரை அங்கே அழைத்துக் கொண்டு சென்றான் உழவன். அவ்விடத்தில் ஒரு கட்டிலைப் போட்டு அமரச் செய்தான். ''இதோ வந்து விட்டேன்'' என்று சொல்லி விறு விறு என்றுபோய் ஒரு மரத்தில் ஏறி நான்கு இளநீர்களைப் பறித்து வந்தான். ஒன்றைச் சீவி ஔவையாருக்குக் கொடுத்தான்.

அதைக் குடித்த புலமைப் பிராட்டியார், ''மிகவும் இனிப்பாக இருக்கிறதே!'' என்றார். உண்மையில் அது எல்லா இளநீரையும் போல இல்லாமல் மிகவும் தித்திப்பாக இருந்தது.

''இந்தத் தோப்பில் இரண்டு மரத்தில்தான் இப்படி மிகச் சுவையான இளநீர் உண்டு. அந்த

## எங்களைத் தெரிகிறதா?






இரண்டு மரமும் என் தகப்பனார் கையாலே வைத்தவை. நான் கூடச் சிறுபிள்ளையாக இருக்கும்போது செம்பினால் தண்ணீர் மொண்டு ஊற்றியிருக்கிறேன்.''

''அந்தத் தண்ணீரில் வெல்லத்தைக் கலந்து ஊற்றினாயோ?'' என்று ஔவையார் சிரித்துக்கொண்டே கேட்டார்.

''வெல்லத்தைக் கலப்பார்களா? வெறும் தண்ணீரை ஊற்றினேன்.''

''எவ்வளவு காலம் இருக்கும்?''

''ஆறு ஏழு வருஷங்களுக்குமேல் இருக்கும்.''

''அந்தத் தண்ணீரை அது இப்போது இளநீராகக் கொடுக்கிறது!''

''ஆம். நான் அதன் வேரிலே ஊற்றினேன்; இப்போது அதைத் தலையாலே தாங்கித் தருகிறது.''

''உன்னுடைய தம்பி என்று ஒருவரைச் சொன்னாயே; அவரும் இப்படித்தானே இருக்கிறார்?''

''ஆ ஆ! எவ்வளவு பொருத்தம்! நன்றாகச் சொன்னீர்கள்! அழகு, அழகு! ஒன்றுக்கு ஒன்று சரியான உபமானம்'' என்று களிப்பால் குதித்தான் உழவன்.

''அப்படியானால் இந்தப் பாட்டைக் கேள்'' என்று பாட்டி ஒரு கவியைச் சொல்லத் தொடங்கினார்:

**நன்றி ஒருவற்குச்**
**செய்தக்கால் 'அந்நன்றி**
**என்று தருங்கொல்?'**
**என வேண்டா—நின்று**
**தளரா வளர்தெங்கு**
**தாள்உண்ட நீரைத்**
**தலையாலே தான்தருத லால்.**


''நல்ல பாட்டு! என் வாழ்க்கையோடு ஒட்டிய பாட்டு! அமுதப் பாட்டு! இளநீர்ப்பாட்டு!'' என்று கொண்டாடிக் கூத்தாடினான் உழவன். அவன் ஒரு புலவருடைய மகன் அல்லவா?

# தேர் கொடுத்தவர்

அழ. வள்ளியப்பா

முத்துப் பவளம் மணி இழைத்த தேரைப் பாரடி—அதில்
முடுக்குடனே செல்லும் அந்த மனிதர் யாரடி?
எத்தி சையும் புகழ் மணக்கும் பாரி தானடி—அவர்
'இல்லே' யென்றே சொல்லி டாத வள்ள லாமடி.
சாலே யோரம் அந்தத் தேரும் நிற்ப தேனடி?—அங்கே
சட்டென் றவரும் கீழி றங்கிப் பார்ப்ப தென்னடி?
மாலேக் காற்றில் ஆடி அசையும் முல்லேக் கொடியடி—அதை
வழியில் பார்த்தே வேக மாக இறங்கி ஞரடி.
உற்றே அந்தக் கொடியை அவரும் பார்ப்ப தேனடி?—அவர்
உள்ளம் நொந்து, முகமும் வாடி நிற்ப தேனடி?
பற்றிப் படரக் கொம்பில் லாமல் முல்லேப் பூங் கொடி--காற்றில்
சுற்றிச் சுழன்று தவிக்கும் காட்சி கண்டு தானடி.
தேரைக் கொடியின் அருகில் இழுத்துச் செல்வ தேனடி?—அங்கே
சென்று கொடியைக் கையில் அவர் எடுப்ப தேனடி?
தேரின் மீது கொடியைப் படர விடுகி ருரடி—அதன்
சிரமம் தீர்த்து மகிழ்ச்சி யோடு நடக்கி ருரடி.
முல்லே படரத் தேரைக் கொடுத்த வள்ளல் பாரிபோல்—அடியே!
முழுதும் நல்ல மனிதர் ஒருவர் உண்டோ? சொல்லடி.
'இல்லே, இல்லே, இல்லே' என்றே சொல்கி றேனடி—நாம்
எங்கே தேடிப் பார்த்திட் டாலும் கிடைத்தி டாரடி!





# பதினாலு மரக்கால்

*ஜாஜலி*

கலத்துக்குப் பன்னிரண்டு மரக்கால்தான். "தம்பி, போடரு இன்னும் இரண்டு மரக்கால்" என்றார் பங்காரு. இன்னும் இரண்டு மரக்கால் நெல்லை அளந்தான் ஆள். எவ்வளவு தர்மசிந்தை!

அவர் வீட்டுக்கு வந்து தங்கியிருந்த பரமானந்த சுவாமிகளுக்குக் கடவுளின் மேல் ஆத்திரமும் கோபமும் வந்தன. பங்காரு கட்டிய பிள்ளையார் கோயிலுக்கே போனார்.

"சுவாமி, இந்தக் கோயிலையே உனக்குக் கட்டிக் கொடுத்தவர் பங்காருதானே! ஆனால் அவருடைய பிள்ளைகள் எல்லாரையும் இப்படி உருப்படாத பதராக அடித்திருக்கிறாயே. முதல் பிள்ளை குருடு; இரண்டாவது பைத்தியம். மூன்றாவதுக்கு இழுப்பு. நாலாவது நொண்டி. இதுதான் நீதியா?" என்று ஏங்கினார்.

"எது நீதியில்லை?" என்று கர்ப்பக்கிருகத்தின் இருளிலிருந்து குரல் வந்தது.

பரமானந்தர் பிரமித்துப் போய்விட்டார்.

"பேசும் தெய்வமே, கலத்துக்குப் பதினாலு மரக்கால் அளக்கும் மனிதனுடைய நாலு பிள்ளைகளையும் உருப்படாப் பதராக அடித்திருப்பது அநீதியில்லையா?" என்று சீற்றத்துடன் பொங்கினார்.

"தலையை மொட்டையடித்து உன் மூளையும் மொட்டையாகி விட்டது. முண்டமே, நாளை பிடாரிகோயில் களத்தில் அறுப்பு. போய்ப் பார்" என்றது குரல்.

பரமானந்தர் மறுநாள் போனார்.

அரிக்காய்ச்சல் காய்ந்த தாளை அடித்து நெல் குவிந்தது. நெல்லை மூட்டை மூட்டையாக ஆட்களின் தலையில் வைத்து அனுப்பினார் பங்காரு. தூற்றிய பதர் ஒரு பக்கமாகக் குவிந்திருந்தது. அதையும் நாலு மூட்டையாகக் கட்டினார்கள்.

"இது எதற்கு? பதரை என்ன செய்கிறது?" என்றார் சுவாமிகள்.

"விபூதி முட்டான் போடலாம். வரட்டி தட்டக் கலக்கலாம். துரும்புகூட வீணாகலாமா?"

பரமானந்தருக்குச் சுருக்கென்றது. பங்காரு முதலில் சொன்னது பொய். ஊரில் எல்லாரும் வைஷ்ணவச் செட்டியார்கள். விபூதி போட மாட்டார்கள். பிள்ளையாருக்குக் கோயில் கட்டின பங்காருவும் நாமம் போடுகிறவர்தான். இரண்டாவதுதான் மெய்யாக இருக்கவேண்டும்.

பதர்மூட்டை கனக்குமா? ஆட்கள் அநாயாசமாகத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள்.

வீட்டுக்குப் போய்ப் பார்த்ததும் முற்றத்தில் நெல் பெரிய குவியலாகக் குவித்திருந்தது. பரமானந்தர் வீட்டின் கொல்லை, வாசல், கொட்டில், இண்டு, இடுக்கு எங்கும் பார்த்தார். பதர் மூட்டைகளைக் காணவில்லை.

"என்னா, பாக்கிறீங்க? சாப்பிடக் கூப்பிடறாங்க. வாங்க, இலை போட்டாச்சு" என்று நாலு பிள்ளைப் பதர்களும் வந்து அவரைச் சாப்பிடக் கூப்பிட்டார்கள்.

"வறேன்" என்று முற்றத்து நெல்லை அள்ளி எடுத்தார். பதர் எல்லாம் நெல்லோடு கலந்திருந்ததைக் கண்டு, "அட பாவி!" என்று சாப்பிடாமலே நடையைக் கட்டினார் பரமானந்தர்.

# சமுத்திர ராஜகுமாரி



கி. சரஸ்வதி அம்மாள்

அம்மா கதை சொன்னால்தான் தூங்குகிறது என்று கமலா ஒரு பழக்கத்தை வைத்துக் கொண்டுவிட்டாள். அவளுக்குக் கதை கேட்காவிட்டால் தூக்கம் வருவதில்லை. அதற்கு அவள் என்ன செய்வாள்? அம்மாவும் சின்ன வயதிலே பாட்டியிடம் கேட்ட கதைகள், மற்றும் புராணங்களிலே படித்த கதைகள், இவ்விதம் பல கதைகளை நினைவுக்கு வரவழைத்துக்கொண்டு, கமலாவுக்குச் சொல்லி வந்தாள். ஆனாலும் அன்றாடம் ஒரு புதுக் கதையல்லவா கமலா கேட்கிறாள்? அதற்கு அருவி நீர்போலக் கதைகள் வற்றாமல் வந்துகொண்டே இருக்க வேண்டாமா? ''என்ன பெண்ணடீ, நீ?'' என்று அம்மா அலுத்துக் கொண்டாள்.

''அம்மா! நீ நிறைய இங்கிலீஷ் புத்தகங்கள் படிக்கிறாயே, அவைகளிலிருந்து ஒன்று சொல்லேன்'' என்று கெஞ்சிக் கேட்டாள் கமலா. அம்மா அப்படியானால் சரி என்று ஒரு கதை சொல்லத் தொடங்கினாள்.

* * *

வெகு தூரத்திற்கு அப்பால், கடலினுடைய நடுவிலே, அதாவது ஆகாயமும், கடலும் சேர்ந்து ஒரே நீலமாகக் காண்கிறதே அந்த இடத்திலே, கீழே ஆழத்தில் நாகலோகம் இருந்தது. அந்த உலகத்திற்கு ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஆறு பெண் குழந்தைகள் பிறந்தார்கள். ஒவ்வொரு குழந்தையும் ஒன்றை விட ஒன்று ரொம்பவும் அழகாக இருந்தது. அதிலும் கடைசி ராஜகுமாரியின் அழகு சொல்லவே முடியவில்லை. அவளுடைய ரோஜாப் புஷ்பம்போன்ற மிருதுவான மேனியையும் கடல் போன்ற விசாலமான நீலக் கண்களையும் யாரால்தான் வர்ணிக்க முடியும்? பாவம், அந்தக் குழந்தைகளின் தாய் கடைசி ராஜகுமாரியைப் பெற்றதுமே இறந்து போனாள். பாட்டிதான் அவர்களை அருமையாக வளர்த்து வந்தாள். அவர்களுடைய மாளிகை எப்படி இருந்தது என்று நினைக்கிறாய்? நம்ம வீடுகளைப்போலச் செங்கல்லும் சுண்ணாம்பும் வைத்துக் கட்டி இருந்ததா? இல்லை. தங்கத்திலே முத்தும் பவழமுமாக வைத்து இழைத்து, பார்ப்பவர்கள் கண்களைப் பறிக்கும்படி இருந்தது. தோட்டத்திலுள்ள மரங்களிலெல்லாம் பச்சை மரகதத்தால் ஆன இலையும் ரத்தினமிழைத்த பழங்களுமாகக் குலுங்கின. இந்த விதம் அந்த ஊரினுடைய விசேஷம் எவ்வளவோ! அந்தக் குழந்தைகள் இந்த அழகான ஊரிலே வெகு உற்சாகமாக ஓடியாடி வளர்ந்து வந்தார்கள். அவர்களுக்குப் பதினைந்து வயது நிரம்புகிறவரையில் அவர்கள் அந்த உலகத்தை விட்டு வெளியே வரவில்லை. பிறகு

தான் அந்த ஆழத்திலிருந்து மேலே வந்து திறந்த வெளியான ஆகாயத்தையும் பெரிதான சூரியனையும் சந்திரனையும் மற்றும் நக்ஷத்திரங்களையும் பார்த்தார்கள். அவர்களுக்கு இவைகளின் பிரகாசத்தையும் அழகையும் கண்டு ஆச்சரியம் தாங்கவே இல்லை. கடற்கரையிலே இருக்கும் பட்டணங்களையும், அங்கு விளையாட வரும் குழந்தைகளையும், மற்றும் பெரியவர்களையும் பார்த்தபொழுது ஒருவகை அதிசயமே ஏற்பட்டது அவர்களுக்கு. ஏனென்றால் அவர்களுக்கும் தங்களுக்கும் ரூபத்தில் ஒரே ஒரு வித்தியாசம்தான் இருந்தது. அதாவது மீதி அவயங்களெல்லாம் ஒன்றுபோலிருந்தாலும் மனிதர்களுக்குக் கால்கள் இருந்தன. அதற்குப் பதிலாக இவர்களுக்கு மீனினுடையதுபோல நீண்ட உடல் இருந்தது. இவர்கள் நீரிலே வாழ்கிறார்கள், இல்லையா? இந்த மாறுதல் இருந்துதானே தீரும்? இதில்லாவிட்டால் நீரிலே மிதப்பது எப்படி? முழுகி இறந்து போகமாட்டார்களா?

இந்த உலகமும், இதிலுள்ள மனுஷ்யர்களும் அவர்களுக்கு அதிசயமாகத் தோன்றினாலும், அவர்களுக்குத் தங்கள் உலகந்தான் உயர்ந்ததாகப் பட்டது! அதனால் உடனே திரும்பிப் போய்விட்டார்கள். ஆனால் கடைசி ராஜகுமாரிக்கு மட்டும் அவ்விதமில்லை. அவளுக்கு ஏதோ ஒருவிதமாக நம்மையும் நமது ஊரையும் ரொம்பவும் பிடித்திருந்தது. இதைப் பார்த்துக்கொண்டு இரவு பகல் செல்வதையே மறந்து போனாள் அவள். ஜலத்தின் மேல் மிதந்துகொண்டே நாள் கணக்கில் இருந்தாள். அன்று பௌர்ணமி. சந்திரன் பெரிய தோசைக் கல்லைப்போல வட்ட வடிவமாக ஆகாயத்திலே வெளி வந்தான். அவனுடைய நிலவிலே ஆகாயம்மட்டுமா, அந்தத் தண்ணீரும் அல்லவா, உருக்கிவிடப் பட்ட வெள்ளிபோல் 'தகதக' வென்று மின்னிற்று! இந்த நிலவில் கரை அருகிலே கப்பல் ஒன்று வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டு நின்றது. தண்ணீரிலே மிதந்த வண்ணம் அரசகுமாரி அதைப் பார்த்தாள். அதன் ஜாஜ்வல்யமான விளக்குகள் அவள் கண்களைக் கூசவைத்தன. அடே அப்பா, எவ்வளவு வெளிச்சம்! அதன் நடுவிலே இருந்த சிம்மாசனத்தில் அந்த ஊர் அரசகுமாரன் வீற்றிருந்தான். அவனுக்கு அன்று பதினாறுவது பிறந்த நாள். அந்த நாளைப் பாட்டும் கூத்துமாக அந்தக் கப்பலில் உள்ளவர்கள் கொண்டாடினார்கள். ராஜகுமாரனுடைய அழகு நமது கடல் அரசகுமாரியை அப்படியே பிரமிக்க வைத்தது. அவனுடைய கறுத்த விழிகளும் விசாலமான நெற்றியும் கம்பீரமான முகமும் அவளை அவனிடம் ஆசைகொள்ளச் செய்தன. அவனை மணந்துகொள்ள ரொம்பவும் விரும்பினாள். என்ன செய்வாள்! அவளுக்கோ கால்கள் இல்லை; கரையிலே வந்து அவனைப் பார்த்துப் பேசி ஒன்றும் செய்ய முடியாது. மிகவும் கஷ்டப்பட்டாள்.

அப்பொழுது தன்னுடைய ஊரிலே ஒரு மந்திரவாதி இருப்பது அவள் நினைவுக்கு வந்தது. அவனிடம் சென்று தனது உடலை மாற்றி அமைத்துக்கொண்டு விட்டால்? இந்த யோசனை உதித்த பிறகு அவள் சும்மா இருக்கவில்லை. அவளிடம் விரைந்து சென்றாள். தன் விருப்பத்தைச் சொன்னாள். "இதனால் உனக்கு நல்லது வராது. இருந்தாலும் நீ ஆசைப்படுவதால் செய்கிறேன். ஆனால் இதற்குப் பதிலாக உன் நுனி நாக்கை எனக்கு நீ கொடுத்துவிட


வேண்டும்'' என்று கூசாமல் கூறிவிட்டான் அந்த மந்திரவாதி. ராஜகுமாரி என்ன செய்வாள்? தன்னுடைய அழகான பேச்சும் இனிமையான பாட்டும் - எல்லாம் போய்விடுமே என்று வருந்தினாள். இருந்தாலும் ராஜகுமாரனிடத்திலிருந்த ஆசையால் அதற்குச் சம்மதித்துவிட்டாள். பிறகு மந்திரவாதி அவள் நாக்கின் நுனியை அறுத்து எடுத்துக்கொண்டு அவளுக்கு நம்மைப் போலவே கால்கள் வளரச் செய்துவிட்டான். மீனினுடைய உடல் மறைந்து போயிற்று. முதலில் நடக்கவே முடியவில்லை. வலித்தது. அதை அவள் பொருட் படுத்தினாளா? இல்லை. ராஜகுமாரனை அடையவேண்டுமே! அதற்காகப் பொறுத்துக்கொண்டு ராஜகுமாரன் இருக்குமிடம் வந்து சேர்ந்தாள். அவனும் அவள் சௌந்தரியத்தைக் கண்டு அப்படியே மயங்கிப் போனான். அவள் பேசாதது அவனுக்குக் குறையாகவே தோன்றவில்லை. அவள் சௌந்தரியத்தைக் கண்டு



அவள் உள்ளத்தை அவனுக்குத் தெரிவிப்பதுபோல இருந்தது. ராஜகுமாரன் அவள் ரூபத்திலே மதிமயங்கிப் போனாலும் அவளை மணந்து கொள்வதாக மட்டும் சொல்லவில்லை. ராஜகுமாரி அதை எதிர்பார்த்துப் பார்த்து ஏங்கித் தவித்தாள். கடைசியில் அவள் முழுதும் ஏமாறும்படி ஆயிற்று. அவன் ஒரு நாள் வேறொரு தேசத்து அரசனுடைய பெண்ணை நிஜமாகவே மணந்துகொண்டு விட்டான். கடல் ராஜகுமாரியின் மனம் உடைந்தே போயிற்று. அவளுக்குத் துக்கம் தாங்கவே இல்லை.

அவளுடைய சகோதரிகள் இருக்கிறார்களே, அவர்களுக்கு விஷயம் தெரியவே தங்கைக்காக வருந்தினார்கள். அவள் எப்படியாவது சுகப்பட வேண்டும் என்று எண்ணினார்கள். ஒரு கத்தியைக் கொண்டு வந்து தங்கள் அருமைத் தங்கையிடம் ரகசியத்தில் கொடுத்தார்கள். அரசகுமாரன் தன்னுடைய கல்யாண வைபவத்தையும் மனைவியுடன் கப்பலிலே தான் கொண்டாடினான். நமது கடல் ராஜகுமாரியும் அவனுடன் அந்தக் கப்பலில்தான் இருந்தாள். அப்பொழுதுதான் அவர்கள் கத்தியை அவளிடம் கொடுத்து ராஜகுமாரனையும் அவன் மனைவியையும் கொன்றுவிட்டுத் தங்களிடம் வந்து சேர்ந்து விடும்படி சொல்லிப் போனார்கள். கடல் ராஜகுமாரி அவ்விதம் செய்தாளா? இல்லை. இரவு அவர்கள் தூங்கும் பொழுது அவள் அருகில் சென்று பார்த்தாள். அவன் தன் மனைவியின் பெயரைத்தான் முணுமுணுத்துக்கொண் டிருந்தான். இருந்தாலும் என்ன? அவனைக் கொல்ல அவளுக்கு மனம் வரவில்லை. கத்தியைக் கடலிலே வீசி எறிந்துவிட்டாள். இதையெல்லாம் மேலே இருந்த தேவதைகள் பார்த்தார்கள். அவளுடைய அந்த நல்ல மனத்தை மெச்சினார்கள். அவளைத்

## அம்பி ஐஸ் விழுங்குகிறான்!





தங்களில் ஒருத்தியாகச் சேர்த்துக் கொண்டார்கள். உயர ஆகாயத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

* * *

இவ்விதம் கதை சொல்லி அம்மா நிறுத்தினாள். கமலா 'ஊம்' கொட்டுவதை நிறுத்தி விட்டாள். அதனால் அவள் நன்றாகத் தூங்கி விட்டாள் என்றே அம்மா நினைத்தாள். கமலா நிஜமாகவே தூங்கிவிட்டாளா? அது தான் இல்லை. அவள் எப்படித்தூங்குவாள்? அவளுக்குத்தான் கடல் ராஜகுமாரியைக் குறித்து ஒரே வருத்தமாக இருந்ததே! அவள் தேவ கன்னிகையாக மாறியதில் கமலாவுக்குச் சிறிதும் திருப்தி ஏற்படவில்லை. அவள் கஷ்டப்பட்டுத் தியாகங்கள் செய்தும் அவள் ஆசைப்பட்ட ராஜகுமாரனை மணந்துகொள்ள முடியாமல் போயிற்றே என்றுதான் துக்கப்பட்டாள். தேவலோகத்திலிருந்தாலும் அவளுக்குச் சந்தோஷம் இராது என்று நினைத்துக் கதையைத் தன் விருப்பம் போல மாற்றி அமைத்துக்கொண்டாள்.

ராஜகுமாரன் அவளைப் பார்த்தது முதல் ஒரே பைத்தியம் பிடித்தவன்போலானான். அவனுக்கு வேறொரு பெண்ணைக் கண்ணாலும் பார்க்கப் பிடிக்கவில்லை. அவளைத் தான் மணந்துகொள்வேன் என்று பிடிவாதமாக இருந்தான். யார் சொல்லியும் அவன் கேட்பதாக இல்லை. அவள் தன்னை அடையவே ஊமையாகப் போயிருப்பதையும், அவளிடம் ஜாடையிலே பேசித் தெரிந்துகொண்டான். சமுத்திரத்தின் அடியிலே செல்வதற்கென்று கவசம் இருக்கிறதே அதை அணிந்துகொண்டு, ராஜகுமாரியின் மாளிகைக்குச் சென்று அங்கு அவள் தமக்கைகளுடைய உதவியினால் மந்திரவாதி இருக்கும் இடத்தையும் கண்டு பிடித்துக் கொண்டான். மந்திரவாதியைக் கொல்வது எளிதில்லையானாலும், தந்திரமாக எப்படியோ கொன்று விட்டான். ராஜகுமாரியின் நுனி நாக்கையும் அவனிடமிருந்து கண்டு பிடித்துக் கொணர்ந்து ராஜகுமாரியின் நாக்கோடு பொருத்தி விட்டான். அது ஒட்டிக்கொண்டு விட்டது. பிறகு கேட்கவேண்டுமா? அவள் சந்தோஷத்தில் கலகல வென்று வெள்ளி மணிபோலப் பேசமாட்டாளா? அவர்கள் மணம் புரிந்துகொண்டு ஆடிப்பாடி, சந்தோஷமாக இருந்தார்கள். ராஜகுமாரியின் சகோதரிகளுக்கும் தாங்காத ஆனந்தம்தான்.

இவ்விதம் கதையை மனத் திருப்தியாக அமைத்துக்கொண்ட பிறகு, கமலா தானாகவே தூங்கி விட்டாள்.

# இதுவும் ஒரு பாவம்

டாக்டர் மு. வரதராசன்

முதல் முதலில் மனிதரில் ஒவ்வொரு கூட்டத்தாரும் ஒவ்வொரு தொழில் செய்து வந்தார்கள். அதனால் நாட்டுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் உண்டாயின. எல்லா மக்களும் சேர்ந்து ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழ முடிந்தது. நாட்டில் நல்ல அமைதி இருந்தது. வாழ்க்கையில் போட்டியும் பொருமையும் இல்லாமல், உதவியும் ஒத்துழைப்பும் இருந்தன. இப்படி இருந்த காலத்தில், இந்தத் தொழிலைச் செய்வது உயர்ந்தது, அந்தத் தொழிலைச் செய்வது தாழ்ந்தது என்று யாரும் எண்ணவில்லை.

பிற்காலத்தில் இந்தத் தவறான எண்ணம் எப்படியோ ஏற்பட்டு விட்டது. அதனால் ஒரு தொழிலைச் செய்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும், இன்னொரு தொழிலைச் செய்தவர்கள் உயர்ந்தவர்கள் என்றும் மக்கள் பேசிக்கொண்டார்கள். அப்போதுதான் சாதி ஏற்பட்டது. சாதிகளுக்குள் உயர்ந்த சாதி என்றும், தாழ்ந்த சாதி என்றும் பிரிவுகள் ஏற்பட்டன. நல்ல நோக்கத்தோடு தொடங்கிய ஒன்று இப்படித் தீமையாய் முடிந்தது.

இப்படி ஏற்பட்ட சாதி வேற்றுமைகளால் நம் நாட்டுக்கு ஏற்பட்ட தொல்லைகள் கொஞ்சம் அல்ல. நாட்டு மக்கள் எல்லாரும் ஒற்றுமையாகச் சேர்ந்து வாழ முடியாமற் போயிற்று. ஒற்றுமை இல்லாத கூட்டமாக இருந்தபடியால், வெளி நாட்டிலிருந்து வந்தவர்கள் இவர்களை எளிதில் வென்று அடிமைப்படுத்தவும் முடிந்தது. நாட்டிற்குப் பொதுவான கடமைகளில் மக்களுக்கு ஊக்கமில்லாமற் போயிற்று. பல தலைமுறைகளை இப்படிக் கழிக்கவேண்டி ஏற்பட்டது.

அறிவுச் செல்வம் நிறைந்த நாடு இது. இங்கே வளர்ந்த கலைகள் எல்லாம் உயர்ந்த கலைகள். இந்த நாட்டின் வளம் மக்களின் வாழ்க்கைக்குப் போதுமானது. எளிய வாழ்க்கை நடத்தி, எளிய உடை உடுத்துத் திறந்த வெளியில் காலம் கழிப்பதற்கு ஏற்ற வகையில் இயற்கை இங்கே துணையாக இருக்கிறது. இவ்வளவு எல்லாம் இருந்தும், இந்த நாட்டு மக்கள் தலை நிமிர்ந்து வாழ முடியாமற் போயிற்று; அமைதியாக வாழ்க்கையை நடத்த முடியாமற் போயிற்று. காரணம் என்ன? மக்களுக்குள் ஒற்றுமை இல்லை; எல்லோரும் ஒரு குடும்பம் என்ற உணர்ச்சி இல்லை; சாதிப் பிரிவுகள் இப்படிப் பிரிவினை வளர்த்துக் கெடுத்துவிட்டன.

இதைப் பல பெரியோர்கள் உணர்ந்தார்கள். நிலைமையை மாற்றிச் சீர்ப்படுத்துவதற்காகப் பல முயற்சிகள் செய்தார்கள். உயர்ந்த கவிஞராகிய சுப்பிரமணிய பாரதியாரும் உணர்ந்தார்; தம்மால் ஆன முயற்சிகள் செய்தார். தொண்டு செய்வதற்கு அவருக்குக் கிடைத்த கருவி ஒன்று; அதுதான் பாட்டு. அந்த உயர்ந்த கருவியைக் கொண்டு அவரும் மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டார்.

சாதிகள் ஒழியவேண்டும் என்று பாரதியார் பாடினார். பழைய இந்தியா போய் மறைகிறது; புதிய இந்தியா வரப்போகிறது; பழைய இந்தியாவில் சாதிக் கொடுமைகள் இருந்தன; புதிய இந்தியாவில் அந்தக் கொடுமைகள் இருக்கப் போவதில்லை என்று பாடினார்.

போகின்ற இந்தியாவை- போகின்ற இந்துஸ்தானத்தைப் - பார்த்து, "ஓ! மாசுகள் நிறைந்த

இந்தியாவே! நீ போ! உன்னிடம் சாதிகள் பல இருந்தன; சீர்குலைந் தாய்! நீ போ, போ'' என்றார்.

''சாதி நூறு சொல்லுவாய் - போ போ போ!'' என்று பாடினார்.

இன்னும் பல பாட்டுக்களில் இவ்வாறு பாடினார். அவைகள் எல்லாம் வளர்ந்தவர்களுக்காகப் பாடிய பாட்டுக்கள்.

பாரதியாருக்கு வளர்ந்த ஆட்களிடத்தில் கொஞ்சம் நம்பிக்கை குறைவுபோல் தோன்றுகிறது. பழைய மாசுகளிலேயே இவர்களுடைய மனம் ஊறிப்போன காரணத்தால் இவர்கள் திருந்துவது அருமை என்று அவர் எண்ணியிருக்கலாம். அவர் எண்ணியது போல்தான், இன்றைய நிலைமையும் இருக்கிறது. சாதிக் கொடுமைகள் இன்றைக்கும் புதிய புதிய வடிவத்தில் நாட்டில் இருந்து வருகின்றன. புதிய புதிய பெயரோடு மக்களிடையே பிளவுகள் இருந்து வருகின்றன. இன்னும் நாட்டு மக்கள் போதுமான ஒற்றுமை பெறவில்லை. பொதுக் கடமைகளில் போதுமான ஊக்கம் கொண்டு உழைக்கவில்லை. சாதியின் தொல்லை இன்னும் நம்மை விடவில்லை. வளர்ந்தவர்கள் மனத்தில் இன்னும் அது நீங்கவில்லை. அவர்களால் நல்லபடி திருந்தி நடக்க முடியவில்லை. அதனால் பாரதியார் வளர்ந்தவர்களிடம் அவ்வளவாக நம்பிக்கை வைக்காமல், குழந்தைகளை நோக்கிப் பாடினார். குழந்தைகள் மனத்தில் நல்ல எண்ணங்கள் பதிந்துவிட்டால், இரண்டொரு தலைமுறையில் நாடு சீர்ப்பட்டு விடும் என்ற நம்பிக்கையோடு 'பாப்பாப் பாட்டு' பாடினார்.

சாதிகள் இல்லையடி பாப்பா -
குலத் தாழ்ச்சி
உயர்ச்சி சொலல் பாவம்

என்று பாடினார்.



தாழ்ந்த சாதி என்று பழிப்பதும் உயர்ந்த சாதி என்று புகழ்வதும் ஒருவரை ஒருவர் ஒதுக்குவதற்கும் பிரிப்பதற்கும் காரணம் ஆகின்றன. ஆகையால் பாவம் என்றார். பாவம் என்றால் மற்றவரை அடிப்பதும் குத்துவதும் வதைப்பதும் மட்டும் அல்ல; மற்றவர்கள் அமைதியாக வாழ முடியாமல் வீணான குழப்பங்களை ஏற்படுத்துவதும் பாவம்தான். ஆகையால் அவர் 'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்' என்றார்.

எல்லாவற்றையும்விட முக்கியமானது, வாழ்க்கையின் அடிப்படையான உண்மை. அது என்ன? எல்லா மனிதரும் ஒரு குடும்பம்; கடவுள் இந்தக் குடும்பத்திற்குப் பொதுவான தலைவன். இந்த உண்மையை மறுப்பது சாதி முறை. உண்மைக்கு மாறானது பாவம்தானே?

# நிலாப் பாட்டி


பெ. தூரன்

வயதான கிழவி ஒருத்தி தனியாக ஒரு சின்னக் குடிசையிலே வசித்துக்கொண்டிருந்தாள். அதைச் சுற்றியுள்ள கொஞ்சம் காலியிடத்திலே ஒரு முருங்கை மரமிருந்தது.

அருகிலுள்ள வீட்டுக் குழந்தைகளெல்லாம் அந்தக் கிழவியை 'நிலாப் பாட்டி' என்று கூப்பிடுவார்கள். நிலாவுக்குள்ளே யாரோ ஒரு கிழவி நூல் நூற்றுக்கொண்டிருக்கிறது போலத் தெரிகிறதோ, இல்லையோ? அதேபோல இந்தக் கிழவியும் சதா ராட்டையிலே நூல் நூற்றுக்கொண்டிருப்பதால் குழந்தைகள் அவளை நிலாப் பாட்டி என்று கூப்பிட்டார்கள்.

அவளுடைய உண்மையான பெயர் யாருக்குமே தெரியாது. ஏனென்றால் அவளுக்குச் சொந்தக்காரர்கள் ஒருவரும் இல்லை. அவள் யாரிடமும் அதிகமாகப் பழகுவதும் இல்லை; நூல் நூற்று அதை விற்று அதில் கிடைக்கும் கொஞ்சம் பணத்தைக் கொண்டு வயிறு வளர்த்து வந்தாள்.

ஒரு நாள் மாலையிலே பாட்டி குடிசையை விட்டு வெளியே வந்தபோது அழகான குருவி ஒன்று பயந்து அலறிக்கொண்டு அவள் பாதத்தின் அருகில் வந்து விழுந்தது. அதன் மேலே பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய மூன்று நிற



த 11793
சென்னை-600 008



மும் அழகாக விளங்கின. தலையின் உச்சியில் பட்டுப் போலச் சின்னக் கொண்டையிருந்தது.

நிலாப்பாட்டி குருவியை அன்போடு கையிலெடுத்தாள். குருவியின் காலொன்று ஒடிந்து, அதிலிருந்து ரத்தம் வடிந்தது.

''பாட்டி, என்னைக் காப்பாற்று'' என்று சொல்வது போலக் குருவி பார்த்தது.

நிலாப்பாட்டி, பச்சாதாபத்துடன் சில பச்சிலைகளைப் பிடுங்கி வந்து சாற்றைப் பிழிந்து, காயத்தின் மீது ஊற்றினுள். ஒடிந்த காலையும் நேராக வைத்துக் கட்டுப் போட்டாள்.


பிறகு அந்தக் குருவிக்குக் கொஞ்சம் கம்பஞ்சாதம் கொடுத்தாள். அதைச் சாப்பிட்டதும் குருவி படுத்துத் தூங்கிவிட்டது.

நிலாப்பாட்டி அதைத் தன் குழந்தையைப் போலக் கவனித்து வந்தாள். சில நாட்களிலேயே சரியாகி, அதனுல் பறந்து போகவும் முடிந்தது, போய்த் தனக்கு வேண்டிய இரையைத் தானே தேடிக்கொண்டது.

குருவி காலையில் இனிமையாகப் பாடும். பாட்டைக் கேட்டுக் கொண்டே கிழவி எழுந்திருப்பாள். இரவிலேயும் பாட்டைக் கேட்டுக் கொண்டே தூங்கப் போவாள்.

இப்படிச் சிலகாலம் சென்றது.

---





முதுமையினாலே கிழவியின் கைகால்கள் ஓய்ந்துவிட்டன. ராட்டை சுற்ற முடியவில்லை. அதனால் பணம் இல்லாமல் கஷ்டப்பட்டாள். குடிசையைச் சுற்றியுள்ள கீரைகளையும் முருங்க மரத்திலுள்ள காயையும் பறித்து வேக வைத்துச் சாப்பிட்டு ஒருவாறு பசியைத் தணித்துக் கொள்ளுவாள்.

குருவிக்கு இதைப் பார்த்து மனம் பொறுக்காமல் அழுகையாக வந்தது. ஆனால் அதற்கு வழி தெரியவில்லை. கிழவி பசியோடு இருந்தால் அதுவும் இரைதேடப் போகாது. கிழவி அதை அன்போடு நீவிக் கொடுத்து, ''நீ போய் இரை தேடிச் சாப்பிட்டு வாடா, கண்ணு. எனக்காக நீ பட்டினியாகக் கிடக்காதே; உன்னைப் பார்த்தும் உன்னுடைய பாட்டைக் கேட்டும்தான் நான் இப்போது சந்தோஷப்படுகிறேன், உன் உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே'' என்று குழந்தையைச் சொல்லுவதுபோலச் சொல்வாள்,

நிலாப்பாட்டிக்கு எப்படியாவது உணவு கண்டுபிடிக்கக் குருவி துடியாய்த் துடித்தது. என்ன என்னவோ யோசனை செய்து பார்த்தது. பணம் கிடைத்தால் நிலாப் பாட்டியின் கவலையெல்லாம் தீர்ந்து போகும். அதைக் கண்டு பிடிக்கக் குருவி பெரிய முயற்சி எடுத்துக்கொண்டது. எங்கெங்கோ சுற்றி அலைந்தது.

கடைசியிலே ஒரு நாள் அந்தக் குருவி தன் மூக்கிலே ஒரு தங்கக் காசை வைத்துக்கொண்டு நிலாப் பாட்டியிடம் பறந்தோடி வந்தது. அந்தக் காசை அவளுடைய பாதத்தருகில் போட்டுவிட்டுச் சந்தோஷமாகத் துள்ளித் துள்ளிக் குதித்தது. ஆனந்தமாகப் பாடிக்கொண்டே நிலாப்பாட்டியைப் பார்த்தது.

நிலாப்பாட்டிக்கு அந்தக் குருவியின் அன்பெல்லாம் புரிந்துவிட்டது. அதைக் கொண்டுபோய் கடையில் மாற்றி உணவுப்பொருள்கள் வாங்கிக் கொள்ளவேண்டும் என்பது குருவியின் ஆசை என்பதையும் தெரிந்துகொண்டாள். அவளுக்குக் குருவியின் மேல் இன்னும் அன்பு அதிகமாய்விட்டது.

ஆனால் நிலாப்பாட்டி அந்தத் தங்கக் காசைத் தனக்காக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. ''இது யாருடைய சொத்தோ? இதை நான் உபயோகப்படுத்தினால் கடவுளே சம்மதிக்க மாட்டார். இதுவரையில் நான் யாருடைய சொத்தையும் எனக்காக உபயோகிப்பதில்லை. சாகப்போகிற சமயத்திலே அப்படிச் செய்யலாமா?'' என்று அவள் எண்ணினாள்.

அந்தக் காசை என்ன செய்வது? அதற்காக மறுபடியும் யோசனை செய்ய ஆரம்பித்தாள். அந்த ஊர் அரசன் மிகவும் நல்ல ஏற்பாடு ஒன்று செய்திருந்தான். ஏழைகளுக்குச் சோறுபோட ஒரு

பெரிய ஏரியுண்டாக்கி, அதிலிருந்து தண்ணீரை நிலங்களுக்குப் பாய்ச்சப் பணம் நிறைய வேண்டியிருக்கிறது என்றும் செல்வமிருப்பவர்கள் தாராளமாகப் பண உதவி செய்ய முன் வரவேண்டுமென்றும் தண்டோராப்போடச் செய்திருந்தான். இந்த விஷயம் கிழவியின் நினைவுக்கு வந்தது. அரசன் ஒரு பெரிய உண்டிப்பெட்டியை அந்த ஊர்க் கோவிலிலே வைத்திருந்தான். இஷ்டப்பட்டவர்கள் கோவிலுக்குச் சென்று அதிலே பணம் போடலாம்.

குருவி கொண்டு வந்த தங்கக் காசை அந்த உண்டியிலே போட்டால் எத்தனையோ ஏழைகளுக்கு உணவு கிடைக்கும். ஏரி வெட்டி நாட்டைச் செழிப்புள்ளதாகச் செய்யவும் அது உதவியாக இருக்கும் என்று நிலாப் பாட்டி கருதினாள். அதனால் தள்ளாடித் தள்ளாடி மெதுவாக நடந்து கோவிலுக்குச் சென்று அந்தத் தங்கக் காசை உண்டியில் போட்டுவிட்டு வந்தாள்.

குருவிக்குத் தனது எண்ணம் நிறைவேறவில்லையே என்று வருத்தம் உண்டாயிற்று. இருந்தாலும் மறுநாளும் ஒரு தங்கக் காசைக் கொண்டு வந்து நிலாப்பாட்டியின் முன்னால் போட்டது. நிலாப்பாட்டி அதையும் உண்டியில் போட்டு விட்டாள்.

சில நாட்கள் தினமும் இப்படியே நடந்து வந்தது. ஒரு நாளைக்காவது அவள் ஒரு தங்கக் காசைத் தனக்காக வைத்துக்கொள்ள மாட்டாளா என்று அந்தக் குருவி துடிதுடித்தது. அதனுடைய பாஷையிலே என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்தது. நிலாப்பாட்டிக்கு அதன் கருத்துப் புலப்படாமலில்லை. இருந்தாலும் தங்கக்காசைத் தனக்காக எடுத்துக்கொள்ள அவள் விரும்பவில்லை. ''கண்ணு, நீ எனக்காக வருத்தப் படவேண்டாம். ஏழை மக்களெல்லாம் சுகப்பட்டால் அதுவே போதும். இந்த உலகத்துக்குப் பாரமாய் நான் இன்னும் இந்த உடம்பைச் சுமந்துகொண்டிருக்க வேணும்?'' என்று அதனிடம் கூறினாள். குருவி விசனத்தோடு அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டது.

இப்படியிருக்க உண்டியைத் தினமும் திறந்து பார்க்கும்போது அதில் ஒரு தங்கக்காசு இருப்பதைப்



பார்த்த அரசன் ஆச்சரியமடைந்தான். "யார் தினமும் இப்படித் தங்கக் காசு போடுகிறார்கள்?" என்று கண்டு பிடிக்க வேண்டும் என்று அரசனுக்கு ஆசையுண்டாயிற்று. அதற்காகச் சிலரை நியமித்துமறைவாக இருந்து உண்டியில் பணம் போடுகிறவர்களைக் கவனிக்கும்படி ஏற்பாடு செய்தான்.

நிலாப்பாட்டி தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்று கடவுளைக் கும்பிட்டு உண்டியில் தங்கக் காசைப் போட்டாள். இதைக் கண்ட ஆட்கள் உடனே அரசனிடம் தெரிவித்தார்கள்.

மறு நாள் காலையில் அரசன் நிலாப்பாட்டியைத் தேடிக் கொண்டு வந்தான். குருவி அவளுக்குத் தங்கக்காசு கொண்டுவந்து கொடுக்கிறதையும், அதை அவள் தனக்காக உபயோகப்படுத்தாமல் உண்டியில் போடுவதையும் தெளிவாகத் தெரிந்துகொண்டான்.

அரசனுக்கு உண்டான ஆச்சரியத்தைச் சொல்லிமுடியாது. அவன் நிலாப்பாட்டியை மரியாதையோடும் அன்போடும் பார்த்துக் கொண்டு நின்றான். அதே சமயத்திலே குருவி இன்னும் ஒரு தங்கக் காசைக் கொண்டுவந்து நிலாப் பாட்டியின் முன்னால் வைப்பதையும் அவன் பார்த்தான்.


பிறகு அவன் இந்தக் குருவி எங்கிருந்து தங்கக்காசு கொண்டு வருகிறது என்று கண்டு பிடிக்க ஏற்பாடு செய்தான்.

அந்த ஊரிலே பழைய கோட்டைச் சுவர் ஒன்று இருந்தது. இப்பொழுது அது இடிந்து கிடந்தது. அந்தச் சுவரிலே யிருந்த ஒரு பொந்தில் குருவி நுழைவதையும், வெளியில் வரும்போது தங்கக் காசு ஒன்றை மூக்கில் வைத்திருப்பதையும் ஒருவன் மூன்று நாட்களிலே கண்டுபிடித்து விட்டான். அவன் அதை அரசனுக்குத் தெரிவிக்கவே, அரசன் வேலைக்காரர்களை விட்டு அந்தச்சுவரை இடிக்கும்படி உத்தரவிட்டான். அதற்குள்ளே ஒரு பெரிய பித்தளைப் பாத்திரத்தில் நிறையத் தங்கக் காசும் மற்ற நகைகளும் இருந்தன. அந்தக் கோட்டையை முன்னொரு காலத்தில் பகைவர்கள் பிடிக்க முயற்சி செய்தபோது அரண்மனையிலிருந்த பொருள்களையெல்லாம் இப்படி எங்கேயோ மறைத்து வைத்து விட்டதாகப் பல பேர் சொல்லிக் கொள்வார்கள். அரசனும் அதைக் கேட்டிருக்கிறான். குருவியினால் இப்போது அது வெளிப்பட்டுவிட்டது.

அரசன் அதைக் கொண்டு ஏரியுண்டாக்கி அதற்கு 'நிலாப்பாட்டி ஏரி' என்று பெயரிட்டான்.

நிலாப்பாட்டியை அரசன் வெகுவாகப் புகழ்ந்ததோடு அவளை அரண்மனையிலேயே தங்கும்படியாகக்கேட்டுக்கொண்டான். ஆனால் நிலாப் பாட்டி தனது குடிசையிலேயே குருவியுடன் சந்தோஷமாக இருந்தாள். அரசன் எல்லா ஏற்பாடுகளையும் அங்கேயே செய்து வைத்தான். குருவிக்கு இப்பொழுது ஒரே ஆனந்தம். இனிமை இனிமையாகப் பாடிக்கொண்டே இருந்தது.

---



"ஹலோ, ஆடலாமா?"




பாத்திரங்கள்:

- வீரன் - சூரப்புலி
- மருதை - நண்பன்
- வள்ளி - வீரனின் அக்கா
- மூக்கன் - தலையாரி

### காட்சி - 1.

[மருதை வீடு - மருதை. வீரன்.]

மருதை: வா, தம்பி சூரப்புலி. என்ன சங்கதி?

வீரன்: இங்கே வந்தாலுமா சூரப்புலிப் பட்டம்? அண்ணே! நீங்களே இப்படிக் கேலி செய்யலாமா? யார் கிட்டே இதைச் சொல்லி அழுவேன்?

மருதை: அழாதே, தம்பி! சும்மா விளையாட்டு வார்த்தைதான். எங்கே புறப்பட்டு வந்தே?

வீரன்: உங்களைத்தான் ஒரு யோசனை கேட்கலாமின்னு வந்தேன்.

மருதை; என்ன யோசனை? எதுக்கு யோசனை?

வீரன்: வீட்டிலே அக்கா என்னைக் கேலி செய்யுது. நான் பயந்தாங்கொள்ளியாம். சதா என்னைச் சூரப்புலின்னு சொல்லி நையாண்டி பண்ணுது. எனக்கு அவமானமா இருக்கு. இதுக்கு என்ன செய்யலாமின்னு யோசனை பண்ணிப் பண்ணி, என் மூளை கெட்டுப் போச்சு.

மருதை: அட பாவி, இருந்த துளி மூளையும் போச்சா?

வீரன்: விளையாடாதே அண்ணே. மூளையே குழம்பிக் கிடக்கு. ஆமா; இந்தச் சூரப்புலி என்கிற பட்டம் பறந்து போக, என்ன வழி செய்யலாம்?

மருதை: ஒரு காரியம் செய். அக்கா உன்னைச் சூரப்புலின்னு கூப்பிடறதா வச்சுக்கோ.

வீரன்: புதிசு இல்லையே, அண்ணே, கூப்பிட்டுக்கிட்டுத் தானே இருக்கு!

மருதை: இருக்கட்டும். அந்த வேளையிலே, நீ கோவம் வந்த மாதிரி முகத்தைச் சுளிச்சுப் பாரேன்.

வீரன்: கோவம் வராதே, அண்ணே.

மருதை: அப்போ, அழுது பாரேன்.

வீரன்: கேலி செய்யாதிங்க, அண்ணே.

மருதை: அப்போ, என்னதான் யோசனே?

வீரன்: நான் சொல்லட்டுமா? சதாரம் நாடகத்திலே நீங்க திருடன் வேஷம் போடுவிங்க, இல்லேயா? அந்தத் திருடன் வேஷத்தோடே என் வீட்டுக் கொல்லேப் பக்கம் வந்து கலாட்டா பண்ணுங்க. நான் கதவைத் திறந்து வச்சிருக்கேன்.

மருதை: இரையாதே, தம்பி. பக்கம் பார்த்துப் பேசவேணும், அதோ பாரு..

வீரன்: அடேடே..அது யார் அண்ணே பதுங்கி ஓடறவன்? ஒரு வேளே நாம் பேசினது அவன் காதிலே விழுந்திருக்குமோ?

மருதை: இருக்காது. அவன் மாட்டை விரட்டிக்கிட்டுப் போறுன். அது கிடக்கு; நீ சொல்லு.

வீரன்: நீங்க வர சமயம், நான் தூங்கிட்டு இருப்பேன். கதவு திறந்திருக்கும். உள்ளே வந்து பாத்திரம் பண்டங்களே உருட்டுங்க. அக்கா எழுந்து, என்னேக் கூப்பிடும். நான் எழுந்து பாய்வேன் உங்க மேலே. ரெண்டு பேருக்கும் கைகலக்கும். சண்டை போடற மாதிரி பாசாங்கு செய்வோம்; வெறும் பாசாங்கு தான்! நினேவில்லாமெ என்னே அமுக்கிடாதீங்க!

மருதை: சரி, நீ மேலே சொல்லு.

வீரன்: கடைசியிலே, நீங்க ஓட்டம் எடுக்க, நான் நிமிர்ந்து வீரனேப்போல நிப்பேன். அக்கா என்னேப் பார்த்து ஆச்சரியப்படும். பிறகு சூரப்புலி என்கிற பேரு பறந்து போவும். எப்படி யோசனே?

மருதை: நல்ல யோசனேதான். அப்படியே செய்வோம்.

## காட்சி - 2

[சூரப்புலி வீடு - வீரன். வள்ளி.]

வள்ளி: அம்மாடியோவ்! என்ன இருட்டு, என்ன இருட்டு!

வீரன்: பயப்படாதே அக்கா. நான் இருக்கப் பயமேன்?

வள்ளி: ஆமா. சூரப்புலிதான்!

வீரன்: அக்கா, இன்னிக்குப் பாரு. என் கைவரிசையை.

வள்ளி: இன்னிக்கு மட்டும் என்ன? தினமும் பாக்கறேனே.

வீரன்: இன்னிக்கு அப்படி எல்லாம் இருக்காது, அக்கா. வரட்டும் அந்தத் திருடன்.



வள்ளி: திருடனா? எந்தத் திருடன்?

வீரன்: (கலவரத்துடன்) அதான் திருடன் இல்லையா, அக்கா.. திருடன்! இருட்டுக் காலமாச்சே. திருடன் நடமாட்டம் இருக்குமேன்னு சொல்ல வந்தேன்.

வள்ளி: ஓகோ.. திருடன் வந்தா நீ என்ன செய்வே? பெரிய சூரப்புலி! (கதவு அடித்துக்கொள்ளும் ஓசை கேட்டு) அது என்ன தம்பி! கொல்லைக் கதவா அடிக்குது? சரியாக் கொக்கிப் போடலியோ?

வீரன்: சரியாத்தான் போட்டேன், சந்தேகம் இருந்தா, போய்ப் பாரு.

வள்ளி: என் சூரப்புலியே, தனியாப் போக உனக்குப் பயம்!.. அது கிடக்கு. நீ சொன்னால் சரி. (கொட்டாவி விட்டு) அப்பாடீ! தூக்கம் கண்ணைச் சுழட்டுது.

வீரன்: நான் காவல் இருக்கேன் அக்கா. நீ கவலைப்படாமல் தூங்கு.

(நள்ளிரவு நேரம். பாத்திரம் உருளும் ஓசை)

வீரன்: சரிதான். மருதை வந்துட்டான். நாம் தூங்கறது போலப் படுத்திருக்கணும்.

(மீண்டும் பாத்திரங்கள் பலமாக உருளும் ஓசை)


வள்ளி: இதென்ன சப்தம்? தம்பி ..தம்பி, எழுந்திரு. ஏதோ சத்தம் கேக்குது.

வீரன்: என்ன அக்கா .. நான் தூங்கவில்லை!..இப்பதான் கண்ணை மூடினேன்; ஏன், எதுக்கு?

வள்ளி: உன் காது செவிடா? உள்ளே யாரோ ஆள் வந்திருக்கு. போய்ப் பாரு, தம்பி.

வீரன்: என்ன..அப்படியா சமாசாரம்? (பிரமாத நடிப்புடன்) எலே திருட்டுப் பயலே!.. இந்த வீட்டுலே நுழைய உனக்கு என்ன தைரியம்டா! வா வெளியே.. இருட்டிலே போய்ப் பதுங்காதேடா வா வெளியே! வரமாட்டியா? சரி, நீ வர வாண்டாம்; நானே அங்கே வறேன். (தலையில் படார் என்று அடி விழுகிறது) ஆ!..ஐயோ அக்கா, தலை போச்சு!.. படுபாவி, தலையை உடைச்சுட்டானே!

(தரையில் விழுகிறான்)




காட்சி-3.

[மருதை வீடு - மருதை; வீரன்: மூக்கன்]

மருதை: என்ன வீரப்பா! இப்பதான் கோழி கூவிச்சு. அதுக்குள்ளே எங்கே கிளம்பி வந்தே?

வீரன்: எல்லாம் உன்னைப் பாக்கத்தான்.

மருதை: (வியப்புடன்) அடேடே இதென்ன தலையிலே கட்டு!

வீரன்: எல்லாம் நீ இடிச்ச இடிதான். தலையே திறந்து போச்சு.

மருதை: என்ன தம்பி! விளையாடறியா? நானாவது, இடிக்கறதாவது? நேத்து நான் உன் வீட்டுப் பக்கமே வரலையே. இன்னிக்குக் கட்டாயம் வறேன்.

வீரன்: வாண்டாம், ஐயா. இன்னிக்கும் தலை கொடுக்க, இன்னொரு தலை எங்கிட்டே இல்லை. ஏதோ நடந்தவரையிலே சரி. ஆனா வெந்நீர் அண்டாவை மட்டும் கொடு. அது போதும்.

மருதை: (கோபமாக) என்ன விளையாட்டு இது! எனக்குக்கோவம் வந்தா, தெரியுமா சங்கதி!

வீரன்: கோவப்பட்டுப் புண்ணியமில்லை, அண்ணே. அண்டாவைக் கொண்டா.

மருதை: நிஜமா நான் வரலை, தம்பி. நம்ம திட்டப்படி வேஷம் போட்டுக்கிட்டுக் கிளம்பினேன். அது வாஸ்தவம். ஆனா தலையாரி மூக்கன் வந்து, "இந்த வேஷமெல்லாம் இன்னொரு நாளைக்கு வச்சுக்கோ. இன்னிக்கி என்கூட ரோந்து சுத்த வா, காத்தாடப் போகலாம்" அப்படின்னு சொன்னாரு. நான் அவர்கூடப் போயிட்டேன். கோவப்படாதே, தம்பி. நாளை வேஷம் போட்டுக்கிட்டு, கட்டாயமா வறேன்.

(தலையாரி மூக்கன் வருகிறான்)

மூக்கன்: என்ன மருதை, நாளைக்கே மறுபடி வேஷமா? பலே நடக்கட்டும்! நேத்துப் போட்டதே ஒண்ணாங் கிளாஸ்!

மருதை: வாங்க அண்ணே. நல்ல சமயம் நீங்க வந்தது. நேத்து உங்ககூட நான் வந்தேனா, இல்லையா? தம்பி நம்ப மாட்டேங்குது.

மூக்கன்: ஆமா, தம்பி. நேத்து அவர் உன் வீட்டுக்கு வரலையே. என் கூடவே ரோந்து சுத்தி வந்தார். விடிய விடியச் சுத்திட்டு, வீட்டுக்குப் போனோம்.

வீரன்: என்னது நிசமாவா? அப்போ என் வீட்டுலே திருட்டுப் போனது எப்படி?

மூக்கன்: ஒருவேளை நீங்க பிளான் போட்டதை, எவனாவது கேட்டு வந்திருப்பானோ?

வீரன்: ஆமா, அண்ணே. இப்பதான் நினைவு வருது. யாரோ ஒரு பயல் நாங்க பேசும்போது, பதுங்கிப் பதுங்கி ஓடினான். இப்ப என்ன செய்வேன்? அண்டா இல்லாம வீட்டுக்குப் போனா, அக்கா சண்டை பிடிக்குமே. உள்ளே நுழைய விட்டாதே, அண்ணே.

(கண்ணீர் வடிக்கிறான்)


மூக்கன்: தம்பி, உன் வீட்டிலே ஒண்ணுமே திருட்டுப் போகலே. அழாதே.

வீரன்: என்னது களவு போகலையா? நிசமாவா?

மூக்கன்: நிசமாத்தான், தம்பி. உன் வீட்டிலே களவு நடக்கலே. நம்பு! நீ மயங்கி விழுந்ததுமே, எல்லாரும் திருடனை விரட்ட ஆரம்பிச்சாங்களே. அவன் தப்பிச்சேன் பிழைச்சேன்னு ஓடினான். அப்போ அவன் எந்தச் சாமானை எடுத்துக்கிட்டு ஓடுவான்?

வீரன்: அப்போ அக்கா சொன்னது பொய்யா?


மூக்கன்: நீ செய்த குறும்புக்கு இங்கே வந்து இடிபட வாண்டாமா? அதுக்காகத்தான் உன்னை இங்கே அலைய வச்சிருக்கு. அக்காவுக்கு உன் திட்டம் எல்லாம் தெரியும், தம்பி. வரும்போது உன் வீட்டுக்கு வந்துட்டுத்தான் இங்கே வறேன். வீட்டுக்குப் போ, தம்பி. இனிமேலாவது இந்தமாதிரி குறும்பு பண்ணாதே. நேரமாவுது போ, தம்பி போய், பழையமுது சாப்பிடு. அட என் சூரப்புலியே, போ! (திரை)




செ ன்னையிலுள்ள பீச் ரெயில்வேஸ்டேஷன் எப்போது கோயிலாக மாறிற்று? யார் இதைக் கட்டினார்கள்? இப்படித்தான் இந்தக் கோபுரவாசலைப் பார்த்தால் யாருமே மலைத்துப் போவார்கள்.


ரெயில்வே நூற்றாண்டு விழாக் கண்காட்சி ரெயில்களை, பீச் ஸ்டேஷனில்தான் பார்க்கும்படி ஏற்பாடு


# ரெயில்வே நூற்றாண்டு விழா




*1853-ஆம் வருஷம் முதல் முதல் ஓடிய எஞ்ஜினும் 1953-ஆம் வருஷ மாடலான எஞ்ஜினும் இந்தப் படத்தில் காணப்படுகின்றன. அடேயப்பா, இரண்டுக்கும்தான் எத்தனை வித்தியாசம்!*







செய்திருந்தார்கள். இந்தக் காட்சியை நமது ராஜ்ய கவர்னர் அவர்கள் இங்கே துவக்கிவைத்தார்கள்.

இந்தியாவில் ரெயில்வே ஏற்பட்டு ஒரு நூற்றுண்டு ஆகிறது. சென்ற வருஷம் அந்த நூற்றுண்டு விழாவை டில்லியில் நடத்தினர்கள். எல்லா ரெயில்வேக்களிலும் உள்ள அரிய காட்சிகளே மாடல்களாக அமைத்து, அதைப் பொது மக்களும் குழந்தைகளும் பார்த்துத் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்தார்கள். பிராட்கேஜ் ரெயில் ஒன்றையும் மீட்டர்கேஜ் ரெயில் ஒன்றையும் இதற்காகப் பிரத்தியேகமாக அமைத்து, இந்த மாடல்களைத் தேசத்தின் எல்லாப் பாகங்களுக்கும் அனுப்பி வைத்தார்கள். அந்தக் கண்காட்சி ரெயில்கள் இப்போதுதான் தமிழ் நாட்டுக்கு வந்திருக்கின்றன. சமீபத்தில் சென்னைக்கு வந்தபோது எடுத்த படங்களே இவை. நேரில் போய் இந்தக் காட்சிகளைப் பார்க்க முடியாத கண்ணன் குழந்தைகள் இதையாவது பார்த்து ஓரளவு நமது ரெயில்வேக்களைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம், அல்லவா?

இந்த நாட்டில் 1853-ஆம் வருஷத்தில்தான் முதன் முதலாக ரெயில்பாதை அமைத்தார்கள். பம்பாயிலிருந்து கல்யாண் என்ற ஊர் வரையில் அந்த இருப்புப் பாதை அமைந்தது, 32 மைல் தூரம் உள்ள அந்தப் பாதை நூறு வருஷங்களில் சுமார் 34,500

---


மேல்: மூரதாபாத்திலுள்ள மிகப் பெரிய டர்ன் டேபிள். எஞ்ஜினைத் திருப்பும் இந்த மேடை இந்தியாவிலேயே மிகப் பெரியது.


நடு: தொழிற்சாலையில் பதினைந்து நாட்களில் கோத்து ஓடத் தயாராகும் எஞ்ஜின்கள்.


கீழ்: சித்தரஞ்ஜன் தொழிற்சாலையில் கட்டப்பட்ட எஞ்ஜின் புறப்படத் தயாராக நிற்கிறது.

மைல் நீளமாக ஆகியிருக்கிறது. போக்குவரத்துக்கு உள்ள நாலு வித வழிகளில் ரெயில்பாதை மிக முக்கியமாகிவிட்டது. சாலை, ஆகாயம், கடல் ஆகிய மற்ற மூன்று மார்க்கங்களை விட ரெயில்வே நமக்கு இன்றியமையாததாகிவிட்டது என்று கூடச் சொல்லலாம்.

இதனால்தான் எத்தனையோ இன்னல்களையும் சட்டைசெய்யாமல் இத்தனை ஆயிரம் மைல் நீளமுள்ள பாதை அமைந்திருக்கிறது. உலகத்திலேயே நாலாவது ஸ்தானத்தை இந்திய ரெயில்வே பெற்றிருக்கிறது. மலையைக் குடைந்து பாதையை அமைத்திருக்கிறார்கள். மலைமேல் ஏறப் பாதை இருக்கிறது. ஐந்து மைல் அகலமுள்ள ஆற்றைக் கடக்கவும் பாலம் இருக்கிறது. வெறும் பாதை அமைத்துவிட்டால் போதுமா? அதற்குமேல் ரெயில் ஓட வேண்டுமே. ரெயில்கள் ஓடுவதற்கும் அவற்றை ஓட்டுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டாமா? அவற்றையும் செய்திருக்கிறார்கள். இப்போது இந்தியாவிலேயே எஞ்ஜின் கட்டும் தொழிற்சாலை ஒன்றை, சித்தரஞ்ஜன் என்ற இடத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ரெயில் வண்டிப் பெட்டிகள் செய்யும் தொழிற்சாலை ஒன்றையும் பெரம்பூரில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். எஞ்ஜின்களைப் பிரிப்பது, கோப்பது,









மேல்: கண்காட்சி வண்டியை நாடெங்கும் சுற்றி இழுத்துவரும் புது மாடல் ரெயில் எஞ்ஜின்.


நடு: எஞ்ஜினுக்குள்ளே நீராவி பிரியும் உறுப்புக்களையும் புது மாதிரியான சக்கரங்களையும் காட்டும் பகுதி.

கீழ்: எஞ்ஜினில் டிரைவர் நிற்கும் இடம். குகைபோல் தெரிவது நிலக்கரி எரியும் இடம். மற்றவை எஞ்ஜினை இயக்கும் விசைகள்.

உத்திர ரெயில்வேயில் பரோக் என்ற இடத்தில் மலையைக் குடைந்து கொண்டு செல்லும் ரெயில் பாதை.




பரிசோதிப்பது இவற்றிற்காகவும் பல தொழிற்சாலைகள் அமைத்திருக்கிருர்கள். மின்சாரத்தாலேயே இயங்கும் ரெயில்களும் சிக்னல்களும் இருக்கின்றன. ஏர் கண்டிஷண்ட் பிரயாணப் பெட்டிகளையும் சில ரெயில்களில் அமைத்திருக்கிருர்கள். இன்னும் இதுபோல் எத்தனை எத்தனையோ புதுமைகள் வளர்ந்திருக்கின்றன.




சுருங்கச் சொன்னுல் இந்தியாவில் உள்ள ஆறு ரெயில்வேக்களிலும் உள்ள முக்கியமான காட்சிகளை இந்தக் கண்காட்சி வண்டிகளில் வைத்திருக்கிருர்கள். இதையெல்லாம் பார்க்கும்போது நமக்குப் பெருமூச்சுத்தான் வருகிறது. இதை எல்லாம் எப்போது நேரில் போய் நாம் பார்க்கப் போகிருேம்? அவர்கள் இந்தக் காட்சிகளை மாடல்களாகக் காட்டியிருப்பது போல் நாம் புகைப்படங்களாகச் சிலவற்றை இங்கே பார்த்துவிடுவோமே! இதற்கு உதவிய தக்ஷிண ரெயில்வே பி. ஆர். ஓ. வுக்கு நம் நன்றி உரியது.

துக்ளகாபாத் ஹம்ப் யார்டு. பெட்டிகளைப் பிரித்து இணைக்கும் இந்தப் புதிய யார்டை டில்லிக்கு அருகே கட்டப் போகிருர்கள்.



பலவகை சிக்னல்களும் எப்படி மின்சாரத்தால் இயங்குகின்றன என்பதைக் காட்டும் படம்.

போட்டோக்கள்:
லஸ் ஸ்டூடியோ




பொன்மலை தொழிற்சாலையிலிருந்து பரிசோதனை முடிந்து வெளி வரும் எஞ்ஜின். இங்கே வண்டிகளைப் பிரித்துக் கோத்துப் பரிசோதனை செய்து அனுப்புகிறார்கள்.

# கண்ணன் பிறந்தான்!

கி. ரா.

சூரியன் அஸ்தமித்துப் பத்து நாழிகைக்குமேல் இருக்கும். மதுராபுரியில் எங்கும் நிச்சப்தம் நிலவியது. நகருக்கு வெளியில் ஒரு தனியான அரண்மனை இருந்தது. அந்த அரண்மனையைச் சுற்றிக் காவல் நின்ற காவலர்கள் தூங்கி வழிந்தனர்.

அரண்மனைக்குள்ளே ஒரு விசாலமான அறையில் தன்னந்தனியாக விழித்துக்கொண்டிருந்தாள் தேவகி அரசி. அவளுக்கு உடல் எல்லாம் ஒரே வேதனையாயிருந்தது. எழுந்து அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்தாள். அங்கிருந்த தீபத்தில் எண்ணெய் வற்றிவிட்டது. அடுத்த அறையில் பணிப் பெண் மதனிகா குறட்டைவிடும் சத்தம் கேட்டது.

''மதனிகா! மதனிகா!'' என்று இருமுறை கூப்பிட்டாள். அதற்கு மேல் தேவகியால் பேச முடியவில்லை.

தலைவலி பிளந்தது. கண் இரண்டும் எரிந்தன. உடம்பு முழுவதும் வலியால் துடித்தது. அவளுக்குத் தெரியும். அதுதான் பத்தாவது மாதம். இன்னும் சற்று நேரத்தில் அவளுடைய எட்டாவது குழந்தை பிறந்துவிடும். தன்னுடைய தமையனை கம்ஸ மகாராஜா வந்து விடுவான். இதற்கு முன் பிறந்த ஏழு குழந்தைகளையும் செய்ததைப் போலவே, அந்த எட்டாவது குழந்தையையும் பலியிட்டு விடுவான்! அதை நினைத்ததுமே அவளுடைய உள்ளம் நடுங்கிற்று. உடல் வியர்த்தது. அப்படியே நினைவு இழந்து கீழே சாய்ந்தாள்.

தேவகி மீண்டும் கண் விழித்ததும் உடலும் மனமும் மிகவும் லேசாக இருப்பதை உணர்ந்தாள். மனத்தில் ஒரே ஆனந்தம் நிரம்பியிருந்தது. இருண்டிருந்த அந்த அறை முழுவதும் பட்டப் பகலைப் போல் ஒரே ஒளி வீசிற்று.

தனக்குப் பக்கத்தில் பார்த்தாள். சொர்ண விக்கிரகம்போல் ஓர் ஆண் குழந்தை கிடந்தது. அதன் முகத்திலிருந்து வீசிய தேஜஸை அவள் அதற்குமுன் எங்கும் கண்டதில்லை. கால் கட்டைவிரலை எடுத்து வாயில் வைத்துச் சப்பிக்கொண்டிருந்தது குழந்தை. அவளைப் பார்த்துச் சிரித்தது. ஆகா, என்ன சிரிப்பு! தேவகி மெய்ம்மறந்தாள். தன் துக்கத்தையெல்லாம் மறந்தாள். அப்படியே இரு கைகளாலும் அந்த அபூர்வமான குழந்தையை எடுத்து வாரி அணைக்கவேண்டும் என்று விரும்பினாள். அவளால் முடியவில்லை. உடம்பில் பலம் இல்லை.

அப்போதுதான் நிமிர்ந்து பார்த்தாள். எதிரில் ஒரு பெண் உருவம் நின்றிருந்தது. உயரமான உருவம். கடைந்து எடுத்ததைப்போன்ற அழகு. முகத்தில் தவழ்ந்த களையும் அன்பும் அவளை ஆட்கொண்டன.

''அம்மா! நீங்கள் யார்?'' என்றாள் தேவகி.

''தேவகி! என்னைத் தெரியவில்லையா? நான்தான் உனக்கு மருத்துவம் பார்த்தேன்! என் பெயர் மகாலட்சுமி! நீ பிறக்கும்போது நான்தான் மருத்துவம் பார்த்தேன். உன் தாயார் பிறக்

கும்போதும் நான்தான் மருத்துவம் பார்த்தேன்'' என்றாள் அந்தப் பெண்மணி.

தேவகிக்கு ஆச்சரியமாயிருந்தது. அவளை இதற்குமுன் அவள் பார்த்ததில்லை; இருந்தாலும் அவளுடைய முகமும் குரலும் அவளுடைய மனத்தைக் கவர்ந்தன.

''எனக்குக் குழந்தை பிறக்கப் போகிறது என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள் தேவகி.

''ஆகா! எனக்கு மட்டும் அல்ல தேவகி; உலகம் முழுவதும் உள்ள உத்தமர்கள் எல்லோரும் இந்தக் குழந்தை பிறக்கப்போவதை எதிர் நோக்கிக் காத்துக்கொண்டிருக்கிறார்கள், அம்மா!'' என்று மகாலட்சுமி அந்தக் குழந்தையைத் தூக்கி எடுத்தாள்.

குழந்தை 'விலுக்கு விலுக்கு' என்று காலால் மகாலட்சுமியை உதைத்தது.

''நன்றாக உதை! முகத்தைப் பாரு! போக்கிரி!'' என்று அவள் அதைத் தூக்கி முத்தமிட்டாள்.

குழந்தை அவளைப் பார்த்துக் குறும்புத்தனமாய் சிரித்தது. அவர்கள் இருவரையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள் தேவகி.

''தேவகி! நீ பாக்கியசாலி! உன் வயிற்றில் பிறந்த பிள்ளை உலகம் முழுவதும் கட்டி ஆளப் போகிறான்!'' என்று குழந்தையை அவள் தேவகியின் கையில் கொடுத்தாள்.

அப்போதுதான் தேவகிக்கு அவளுடைய சுய நினைவு வந்தது. தனக்குப் பிறந்த ஏழு குழந்தைகளுக்கும் நேர்ந்த கதியை நினைத்தாள். அவள் முகம் இருண்டது. பிறகு அந்த அதிசய மருத்துவச்சியைப் பார்த்துக் கேட்டாள்:

''அம்மா! நீங்கள் யார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் உங்களைப் பார்த்ததும் என் பெற்ற தாயைப் பார்த்தது போல் மனம் மகிழ்ச்சியை அடைகிறது. இந்தக் குழந்தையையும் என் அண்ணன் கம்ஸ மகாராஜாவுக்குத் தெரிந்து விட்டால் என்ன செய்வேன்?''

''தேவகி! நீ கலங்காதே! இந்தக் குழந்தை பிறந்தது உனக்கும் எனக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. உன் பணிப்பெண்கள் குறட்டை விட்டுக்கொண்டு தூங்குகிறார்கள். பொழுது விடியும் வரையில் அவர்கள் எழுந்திருக்க மாட்டார்கள். உன்னுடைய கணவரை எழுப்பி இந்தக் குழந்தையை ஒரு கூடையில் வைத்து யமுனையைக் கடந்து அக்கரையில் உள்ள ஆயர்பாடிக்குப் போகச் சொல்லு. அங்கே நந்தகோபனுக்கு ஒரு பெண்





குழந்தை பிறந்திருக்கிறது. இந்தக் குழந்தையை அங்கே போட்டு விட்டு அந்தப் பெண் குழந்தையை இங்கே எடுத்து வரச் சொல்லு. இவ்வளவும் பொழுது விடிவதற்குள் நடக்கவேண்டும்'' என்ருள் மாகலட்சுமி.

''அம்மணி! என் குழந்தையை விட்டு நான் எப்படிப் பிரிவேன்?''

''தேவகி! அதுதான் தெய்வத்தின் கட்டளை. இந்தக் குழந்தை உலகம் முழுவதும் ஒரு குடையின் கீழ் ஆளப் பிறந்தவன். உனக்கு மட்டும் சொந்தம் அல்ல. துஷ்டர்களையெல்லாம் சிட்சிக்கப் பிறந்தவன். ஆகையினுல் நான் சொன்னபடி செய்.''

கண்ணீர், பார்வையை மறைக்கத் தன் அருமைக் குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள் தேவகி. அவளைப் பார்த்துப் பொக்கைச் சிரிப்புச் சிரித்தது குழந்தை. ஆகா! அவள் நெஞ்சில் அமுதத்தை வார்த்ததைப் போல் இருந்தது அந்தச் சிரிப்பு!

அவள் நிமிர்ந்து பார்த்தபோது எதிரில் நின்ற ஸ்திரீயைக் காணவில்லை. மாயமாய் மறைந்து விட்டாள்.

வெளியில் பெரும் காற்று வீசியது. தெய்வக் குழந்தை பிறந்து விட்டதற்காக உலகமே உள்ளங் குளிர்ந்ததைப் போல் 'சோ' வென்று மழை கொட்டிற்று.



# பாலர் கவி அரங்கம்

## தபால்காரர்

'செம்மல்'

கையில் கடிதம் எடுத்து வருவார்
காலை மாலை வந்து போவார்
பையைத் தோளில் மாட்டி யிருப்பார்
பணமும் நமக்குக் கொண்டு வருவார்
அன்புச் சேதி கொண்டு வருவார்
அச்சச் சேதி கொண்டு வருவார்
இன்பச் சேதி கொண்டு வருவார்
இழவுச் சேதி கொண்டு வருவார்
செய்தித் தாளைக் கொண்டு வருவார்
சிப்பக் கட்டு கொண்டு வருவார்
வெய்யில் மழையைப் பார்க்க மாட்டார்
வேலை ஒன்றே கண்ணா யிருப்பார்
முண்டாசு தலையில் கட்டி யிருப்பார்
முத்திரைப் பட்டை போட்டி ருப்பார்
கண்டால் நம்மை வணங்கி நிற்பார்
கண்ணிய மாகத் தொண்டு செய்வார்.

## எங்கள் கண்ணன்

கிருஷ்ணகுமாரி

குழலெடுத்து ஊதியே
கோபியுடன் ஆடுவான்
சுழல்தண்டை குலுங்கவே
கண்ணபிரான் ஓடுவான்
ஆயர்வீட்டில் கள்ளனாய்
அண்டிஒண்டி வெண்ணெயை
மாயமாக உறியுடன்
மறைத்தெடுத்துச் செல்லுவான்
கண்ணான கண்ணனும்
கரியநிறக் கண்ணனும்
மண்ணை உண்ட கண்ணனும்
மாயம்செய்யும் கண்ணனும்.

## கண்ணனும் கமலியும்

ஷண்முகவல்லி

கமலி: கண்ணு கண்ணு, இங்கேவா
கண்ணு டியில் பெண்ணைப்பார்
கண்ணுடி வளையல் கையில்பார்
கன்னத்தில் விழும் குழியைப்பார்
கனகாம் பரப்பூக் கொண்டையில்பார்
கறுப்புக் கவுனில் பூவைப்பார்
கறுப்புச் சாந்தை நெற்றியில்பார்
கழுத்தில் கருமணி தொங்குதுபார்
காதில் ஜிமிக்கி ஜொலிக்குதுபார்
காலில் கறுப்புச் செருப்பைப்பார் (கண்ணு)


கண்ணன்: கண்ணுடியில் காணும் பெண்ணே
காய்தான் உன்னோ டேஇனிமேல்.

கமலி: கல்கத்தா மாமா வந்தாரே
கல்கண்டு எனக்குத் தந்தாரே]
கல்கண்டு எல்லாம் எனக்குத்தான்
காய்விட்ட உனக்கு இல்லைபோ!

## ஊஞ்சல்

குயில்வண்ணன்

மேலே வானம் நோக்கி எழுவேன்!
கீழே தரையை நோக்கி விழுவேன்!
அங்கே பறவைபோல் நான் பறப்பேன்!
இங்கே பூச்சிபோல் நான் நகர்வேன்!
அங்கும் இங்கும் எங்கும் நில்லேன்!
பொங்கி ஓங்கி இறங்கி ஆடுவேன்!
காலை முதலாய் மாலை மட்டும்
நூலை ஓதும் காலம் தவிர,
வானம் மட்டும் சென்று வந்து,
ஆனந்த மாய்ப் பொழுதைப் போக்கி
ஊஞ்சல், ஊஞ்சல் ஆடு வேனே!
உரக்கக் கூவிப் பாடு வேனே!





# வாசுவின் தீவலி

பூவாளூர்
சுந்தரராமன்

"வாசு, வாசு!.."

பதில் இல்லை.

"சாந்தா! அந்தத் தடியன் எங்கே? பாரு."

சாந்தா வாசல் பக்கம் வாசுவைக் காணுமல் மாடிக்கு வந்தாள்.

அவனுடைய தாயாரும் அங்கே வந்துவிட்டாள்.

"என்னடாது?.."

"அம்மா! அவனுக்கு வயித்து வலியாம்! அரை மணியா அழுதுண்டு இங்கேயே இருக்கானும்!"

"ஐயோ....பொறுக்க முடியல்லையே!"

"அந்தப் பச்சைக் கடலைக் காய்களை வைத்துக்கொண்டு தின்னுதேடான்னு சொன்னு, கேட்டயா? இப்ப யார் அவஸ்தைப்படறு?.."

"அப்பா கிட்டமட்டும் சொல்லாதே, அம்மா.. வயித்து வலியோடேயே பள்ளிக்கூடம் போய் விடுகிறேன்."

"சரிதாண்டா; நீ சும்மாப் படுத்திண்டிரு; நான் அப்பா கிட்டச் சொல்லி வாத்தியார் இடத்திலே 'லீவ்' சொல்லச் சொல்றேன்!"

வாசுவின் தகப்பனுர் சாப்பிட்டு விட்டு 'டிரஸ்' செய்துகொள்ள மாடிக்கு வந்தார்.

"என்னடாது, ஏன் அழுதுண்டிருக்கே! .. கணக்கு கிணக்கு போடல்லியா?.."

"இவனுக்கு வயித்து வலியாம், அப்பா!"—சாந்தா சொன்னுள்.

"சும்மாச் சொல்லுவானடி; இன்னிக்கு மாப்பிள்ளை வரப்போருரோன்னே, அதுக்காக இப்படி வேஷம் போடருன்."

"இந்தாங்கோ, நீங்க சும்மா இருங்கோ; அவனுன்னு வயித்து வலின்னு அழருன்; நீங்க விரட்டறேளே!..நீ சும்மாப் படுத்துக்கோடா!.." அம்மா சமாதானப் படுத்திவிட்டாள்.

## 2

உண்மையில் வாசுவுக்கு வயிற்று வலியே இல்லை! அந்த வருஷம்தான் அவன் தமக்கை சாந்தாவுக்குத் தலை தீபாவளி. அத்திம்பேர் வரப்போகிருர் என்று வீடு அமர்க்களப்பட்டுக்கொண்டிருந்தது. இதை விட்டு விட்டு யார் பள்ளிக்கூடம் போவதாம்? அத்திம்பேர் ரொம்ப நல்லவர். அவனிடத்தில் எவ்வளவு பிரியமாக இருக்கிருர்! ஆடிப் பண்டிகைக்கு வந்திருக்கும்போது 'சினிமா'வுக்குச் சாந்தாவையும் அவனையும் கூட்டிக்கொண்டு போனுர். அது மட்டுமா! அவர் தீபாவளிக்கு வரும்போது வாசுவுக்கு என்ன வாங்கி வர வேண்டும் என்றும் கேட்டிருந்தார். அத்திம்பேர் வருகிறபோது அவனும் வீட்டில் இருந்தால்தானே அதை வாங்கி வைத்துக்கொள்ள

முடியும்? அதனுல்தான் அன்று அவனுக்குப் பள்ளிக்கூடம் வேப்பங் காயாகக் கசந்தது.

இதே நினைவாக இரண்டு மூன்று நாள் யோசித்து யோசித்துப் பார்த்தான். எந்த யுக்தி செய்தால் அன்று பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் தப்பித்துக் கொள்ள லாம் என்று மண்டையை உடைத் துக் கொண்டான். கடைசியில் கோடியகத்துக் குப்பன்தான் இந்த அழகான யோசனையை அவனுக்குச் சொல்லி வைத்தான்! குப்பனுக்கு எல்லோரையும் ஏமாற்றத் தெரியும்! ரொம்பக் கெட்டிக் காரன்!

## 3


அப்பா ஆபீசுக்குப் புறப்படும் போது வாசுவின் காதில் படும் படியாக, ''அவனுக்குச் சாதமே போடாதே. வெறும் பார்லி கஞ்சி மட்டும் கொஞ்சம் கொடு!'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அதைக் கேட்ட வாசுவுக்குத் திகில் பிடித்துக் கொண்டது!

அம்மா வரும் சத்தம் கேட்ட தும், ''உம் .. அம்மா .. வலி பொறுக்க முடியவில்லையே!'' என்று பாசாங்கு செய்தான்.

''வாசு, கொஞ்சம் கஞ்சி சாப் பிடறயாடா?''

## துளசி பூஜை



கம்பிக் கோலமிட்டு...



கையில் தட்டேந்தி...

போட்டோ: சந்தாமியான்

''இப்ப வேண்டாம், அம்மா!''

''எழுந்திரு; டாக்டர் கிட்டே போய் உடம்பைக் காண்பிச்சிண்டு மருந்து வாங்கிண்டு வா! கீழே வா, பணம் தறேன்!..''

வாசு மெதுவாகக் கீழே வந்து ஒரு ரூபாய் பணத்தை வாங்கிக் கொண்டு வீட்டைவிட்டு இறங்கு கிறவரையிலும் வயிற்றைப் பிடித்துக்கொண்டு நிதானமாக நடந்தான். பிறகு வெகு வேகமாகக் குளத்து மூலையில் இருந்த ஹோட்டலுக்குள் நுழைந்தான். முதலில் ஒரு பிளேட் பூரி-கிழங்கு, ஒரு மசால் தோசை, அடுத்ததாக 'கம்கம்' என்ற மணத்துடன் ஆடைத் தயிர்வடை வந்தது. எல்லாவற்றையும் ஒருகை பார்த்தான். கடைசியில் ஓரணவுக்கு ரோஸ்கலர் சூடப் பப்பிரமிட்டை வாங்கிப் பாட்டிலில் போட்டு, கொஞ்சம் தண்ணீரை ஊற்றிக் கலக்கிக்கொண்டான். 'மிக்சர்' ஆகிவிட்டது.

வீட்டிற்கு வந்ததும் அவனுடைய தாயார் ஒரு 'டோஸ்' மருந்தைக் கொடுத்தாள். சிறிதுநேரம் கழித்து, தாயார் கொடுத்த கஞ்சியையும் குடித்துவைத்தான்.

வாசு தன் திட்டம் வெற்றிகரமாக நடப்பதை நினைத்து மனத்திற்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டான். அத்திம்பேர் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தான்.



கற்பூரம் காட்டி...



தேங்காய் உடைத்து...

## 4

**ஆ**யிற்று; மணி இரண்டு இருக்கும். வாசுவுக்கு உண்மையாகவே லேசாக வயிறு வலிக்க ஆரம்பித்து விட்டது! வாசு பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக்கொண்டிருந்தான். நேரம் ஆக ஆக உயிரே போய் விடும்போல வலித்தது! மூன்று மணி அடித்தது. கீழே கூடத்தில் அத்திம்பேரும் வந்த சத்தம் கேட்டது! பாவம், வாசு! துடி துடித்துக்கொண்டிருந்தான்.

அத்திம்பேர், ''வாசு, வாசு!..'' என்று கூப்பிட்டுக் கொண்டே மாடிக்கு வந்தார்.

கண்களைத் திறந்து பார்த்தான். ஆகா! அழகான சிவப்பு கிரிக்கெட் பந்து! மழமழவென்ற வெள்ளை நிற மட்டை!.. ஆனால் எழுந்திருக்க முடியாமல் வலி வயிற்றைக் கிள்ளிக்கொண்டேயிருந்தது!

அவனுடைய அத்திம்பேர், ''வாசு! என்ன செய்கிறது?'' என்று அன்புடன் கேட்டார்.

''வயித்துவலி, அத்திம்பேரே.''

சாந்தாவின் புருஷனும் டாக்டர்! ஆகையால் அவர் அவன் வயிற்றை அழுத்திப் பார்த்துவிட்டு, சாந்தா காண்பித்த மருந்தையும் மோந்து



வழிபட்டு..



வணங்குகிறுள்.



பார்த்தார். அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது!

அத்திம்பேர் அந்த மருந்தில் ஒரு துளியைத் தம் நாக்கில் விட்டுக் கொண்டு ருசி பார்த்தார்.

வாசு திருதிருவென்று விழித்தான், ஆடு திருடின கள்ளனைப் போல.

‘‘சொல்லுகிறாயா, இல்லையா?.. அம்மா, அப்பா கிட்டே சொல்லி விடுவேன்; நிஜத்தைச் சொல்லி விடு’’ என்று அதட்டல் போட்டார் அத்திம்பேர்.

வாசு நடந்ததைச் சொன்னான். அதைக் கேட்டதும் அத்திம்பேர் விழுந்து விழுந்து சிரித்தார்.

‘‘ஹோட்டலில் சாப்பிட்டதுதான் வயிற்றுவலிக்குக் காரணம். தெரிகிறதா, வாசு!..’’ என்று சொன்னார்.

அருகிலிருந்த சாந்தா, ‘‘இரு, இரு. இத்தனூண்டு வாண்டு நீ; இவ்வளவு காரியம் செய்கிறாயா! அப்பா வரட்டும்!..’’ என்று மிரட்டினாள்.

‘‘நான் ஒரு மருந்து கொடுக்கிறேன்; அதைச் சாப்பிடு; ராத்திரிக்குள் சரியாகப் போய்விடும்!’’ என்று அத்திம்பேர் வாசுவுக்குக் கசப்பான மருந்து ஒன்றை கொடுத்தார்.

வாசு முகத்தில் அசடுவழிய அதைச் சாப்பிட்டான்!



# கண்ணன் - என் சேவகன்

**மகாகவி பாரதியார்**

கூலி மிகக்கேட்பார் கொடுத்தவெலாம் தாம்மறப்பார்;
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்.
''ஏனடா, நீநேற்றைக் கிங்குவர வில்லை'' என்றால்
பானையிலே தேளிருந்து பல்லாற் கடித்ததென்பார்.
வீட்டிலே பெண்டாட்டி மேற்பூதம் வந்ததென்பார்.
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாள்என்பார்.
ஓயாமற் பொய் உரைப்பார்; ஒன்றுரைக்க வேறுசெய்வார்.
தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார்.
உள்வீட்டுச் செய்தியெல்லாம் ஊர்அம் பலத்துரைப்பார்.
எள்வீட்டில் இல்லைஎன்றால் எங்கும் முரசறைவார்.
சேவகராற் பட்ட சிரமம்மிக உண்டு, கண்டீர்.
சேவகர்இல் லாவிடிலோ, செய்கை நடக்கவில்லை.
இங்கிதனால் யானும் இடர்மிகுந்து வாடுகையில்
எங்கிருந்தோ வந்தான்; இடைச்சாதி நான்என்றான்.
''மாடுகன்று மேய்த்திடுவேன்; மக்களைநான் காத்திடுவேன்;
வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்.
சொன்னபடி கேட்பேன்; துணிமணிகள் காத்திடுவேன்.
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்.
காட்டுவழி ஆனாலும், கள்ளர்பயம் ஆனாலும்,
இரவிற் பகலிலே எந்நேர மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை; தேவரீர் தம்முடனே
சுற்றுவேன்; தங்களுக்கோர் துன்பமுறா மற்காப்பேன்.
கற்றவித்தை ஏதும்இல்லை; காட்டு மனிதன்ஐயே!
ஆனபொழு துங்கோல் அடிகுத்துப் போர்மல்போர்
நானறிவேன் சற்றும் நயவஞ் சனைபுரியேன்''
என்றுபல சொல்லிநின்றான். ''ஏதுபெயர்? சொல்'' என்றேன்.
''ஒன்றுமில்லைகண்ணனென்பார்ஊரிலுள்ளோர்என்னை'' என்றான்.



வீட்டிலே
தங்கிடுவார்
கூலி
மிகக் கேட்பார்
கண்ணன்-என் சேவகன்



ாங்கும் முரசறைவார்



செய்கை நடக்கவில்லை



இடைச்சாதி நான்



கன்று மேய்த்திடுவேன்



[illegible] காய்த்திடுவேன்



விளக்கேற்றி



சின்னக் குழந்தைக்கு சிங்காரப் பாட்டிசைத்தே ஆட்டங்கள் காட்டி




காட்டு மனிதன் ஐயே
குத்துப் போர்
கண்ணன் என்பார்
அபிநயம்:

# பொழுது போக்கு

இந்தப் பகுதி உங்கள் மண்டையைக் குழப்பவோ உங்களைத் திக்கு முக்காடச் செய்யவோ ஏற்பட்டதல்ல. இந்தப் பதினாறு பக்கங்களும் உங்களுக்குச் சிறந்த பொழுதுபோக்காக இருக்கும்படி தயாரித்திருக்கிறோம். ஆகவே நீங்கள் மூளையைக் குடைந்து கொண்டு விழிக்கலாம்; வயிறு வலிக்கும்படி சிரிக்கலாம். பிறர் அறிவை அளந்து சோதிக்கலாம். ஆனந்தப் படலாம்.

---

# புத்தகத் தட்டு





இந்த அலமாரியில் பத்தொன்பது புத்தகங்கள் இருக்கின்றன. மேல் வரிசையில் ஒன்பது புத்தகங்களை அடுக்கினால் ஒரு சிறந்த தமிழ் நூலின் பெயராக இருக்கும். அடுத்த கீழ் வரிசையில் பத்துப் புத்தகங்களை அடுக்கினால் அந்தத் தமிழ் நூலின் ஆசிரியர் பெயராக இருக்கும். யாரோ கலைத்து வைத்திருக்கிறார்கள். நீங்கள் சரியாக அடுக்கி வையுங்களேன், பிறரும் தெரிந்து கொள்ளட்டும்.

விடை 64-ஆம் பக்கம்.

# சித்திரக் கட்டம்

எஸ். சுந்தரம்

படத்தைப் பார்த்து, கட்டங்களைப் பூர்த்தி செய்யுங்கள்




விடை 64-ஆம் பக்கம்.

# ஜோடி சேருங்கள்

41793





படத்தை ஒரு முறை நன்ருகப் பார்த்துக்கொண்டு, மூடிவிடுங்கள். பிறகு நீங்கள் பார்த்தவற்றை நினைவு படுத்திக்கொண்டு ஜோடி ஜோடியாகச் சொல்லவேண்டும். சரியாகச் சொல்லும் விடை ஒன்றுக்குப் பத்து மார்க்குகள்.

விடை 64-ஆம் பக்கம்.


# விடுகதைப் பாடல்கள்

'ஜோதிமாமா'

1





அடிக்கின்ற மணியுண்டு
கோயிலல்ல
து நன்றாய் ஓடிடினும்
கால்கள் இல்லை
படிக்கின்ற எண்ணுண்டு
கணக்குமல்ல
பார்க்குங்கால் முள்ளுண்டு
கருவேல் அல்ல.



2

இரு பக்கத்தும் சிறகுண்டு
எழும்பிப் பறக்க
முடியாது
வருவோர் போவோர்
மிதிப்பார்கள்.
வலிசற் றேனும்
எனக்கில்லை.



3


பொட்டு வைக்க வந்து
நின்றால் நானிருக்க வேணும்
புதிய நகை பூண்டு நின்றால்
நானிருக்க வேணும்
சட்டமுடன் உள்ளபடி
சாட்சி சொல்ல வேணும்
சல்லாப உல்லாச ரஸம்
எனக்கு வேணும்

4

டாக்டர் வந்தார்
ஊசி போட்டார்
காசு வாங்காமல்
ஓடி விட்டார்




5




துளிப்பாட்ட இரண்டு
மாடுகூட்டிக்கொண்டு
போனேன்
கறுப்பு மாடு ஒன்று,
வெள்ளை மாடு ஒன்று
கறுப்பு மாடு ஆற்றோடு
போச்சு
வெள்ளை மாடு
வீட்டோடு வந்தது.



விடை 64-ஆம் பக்கம்.

# பாம்பாட்டி




கண்ணன்
தீபாவளி மலர், 1954.

D

# செய்யும் விதம்

எதிர்ப் பக்கத்தில் உள்ள பாம்பாட்டி மகுடி ஊதும்போது பாம்பு, ‘உஸ்’ என்று படமெடுத்துக் கொண்டு சீறும். அது உங்கள் கையில்தான் இருக்கிறது. ஆனல் நீங்கள் கீழேயுள்ளபடி சரியாகச் செய்ய வேண்டும்.

வலது பக்கத்திலுள்ள நீண்ட படத்தைக் கோடிட்டபடி வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள்.


ஆயிற்ரு? பிறகு இடது பக்கத்துக்கு வாருங்கள். கோடிட்ட இடங்களை மட்டும் கச்சிதமாகக் கத்தியால் கிழித்துக் கொள்ளுங்கள்.

இப்பொழுது வலது பக்கத்திலிருந்து வெட்டிய பகுதி, கிழித்த கோட்டுக்குச் சரியாகப் பொருந்தும். வலப் பக்கத்தின் மேல் பாகத்தை இடது பக்கத்துப் படத்தின் பின்புறமாக C என்பதன் வழியாக விட்டு வெளியே இழுத்துக் கொள்ளுங்கள். மறுபடியும் B வழியே அதைச் செலுத்தி A வழியாக இழுத்துக் கொள்ளுங்கள்.


கீழ்ப் பகுதி இருக்கிறதே அது பின்புறம் நிற்கும். அதை D என்ற கோட்டின் வழியாக மேலே கொண்டு வாருங்கள்.

கீழ்ப்பகுதியை மேலும் கீழுமாக இழுத்தால் பெட்டியிலிருந்து பாம்பு ‘உஸ்’ என்று வருகிறதா, இல்லையா பாருங்கள்!


இந்தப் பக்கத்தை வெட்டிக் கொஞ்சம் கனமுள்ள அட்டையில் ஒட்டிக் கொள்ளலாம்.



# கண்ணாமூச்சி! ரே! ரே!



# திருடனும் ஜவானும்




திருடன் இந்தச் சிக்கலான நகரத்துக்குள் நுழைந்து ஓடிவிட்டான். அவனை மூன்று போலீஸ் ஜவான்கள் மூன்று இடத்திலிருந்து பிடிக்கப் புறப்படுகிறார்கள். இதில் ஒருவன்தான் வழி குறுக்கிடாதபடி திருடன் போன வழியாகப் போய்ப் பிடிக்கிறான். அந்த ஜவான் யார் என்று கண்டு பிடிக்க முடியுமா?

விடை 64-ஆம் பக்கம்.

# எங்கள் ஜாதி

காக்   எங்கள் ஜாதி என்ற 
பாட்  க்  ணன்  த்தான். 1 ம்
புரிய  ூல. நண்  க்கேட்டான். அவனும்
 த்தான். 2  யன்களும் 
பக்கம் போ  கள்.   த்திலே 
க்கள் இருந்தன.  ச்  களிலே  கள்
சுற்றின.  களிலே  கள்  ன. கிரே
 கள்  விரித்து ஆடின. 1000 
 த்தில்  கள் தொங்கின.  க்
 த்திலே  1 கடுந்  புரிவது
போல்  மீது உட்  ந்திருந்தது. 
கொத்திக்   ல்  ந்தது.  இன்



மேலே காயத்திலே 1
இட்டது. கொட்டப் ஒன்று மண்
டலம் வரையில் பறந்தது. இதைக் ட
ணன் நண் ப் பார்த்து, "7 ,
வாக்கு உண் தானா?" என்றான். 7
தெரிய லே என்று விரித்தான். க்
ஒரு யும் யுமாய்
னைப் பார்த்துக் க் கொண்டிருந்தார்.
ணனது கேள்வியைக் கேட்டு, " யா! ஏன்
? எல்லா உயிர்களும் 1 தான். கள்
தான் பற்பல 1,00,00,000 !" என்றார். அப்போது
சொன்னது உண் என்று வதுபோல
டாண் டாண் என்று த்தது.

# சைனா எழுத்து




தீபாவளிக்கு வாங்கவேண்டிய வாண வகைகளைக் கண்ணன் போர்டில் எழுதியிருந்தான். திரும்பி வந்து பார்த்தால் சைனா எழுத்துப் போல, எல்லாம் பாதி அழிந்திருக்கிறது. எங்கே, அவனுக்கு நீங்களாவது சரியாகப் படித்துச் சொல்லுங்கள்,

விடை 64-ஆம் பக்கம்.

# குழந்தைகள் எத்தனை?


இந்தப் படத்திலே சில குழந்தைகள் மறைந்திருக்கிறார்கள். மொத்தம் எத்தனை குழந்தைகளுடைய முகம் மறைந்திருக்கின்றன என்று கண்டு பிடியுங்கள், பார்க்கலாம்.



விடை 64-ஆம் பக்கம்.

# போட்டோ க்விஸ்

என். ராமகிருஷ்ணு




இது என்ன படம்?

1) கோலம்
2) பூ நூல் வேலை
3) வெள்ளியில் பூ வேலை

இந்தப் படகின் பெயர் என்ன?

1) பரிசல் 2) தெப்பம் 3) தோணி






இவர்கள் யார்?

1) அழகர் விழா பஜனைக் குழு
2) காஞ்சீபுரம் கோமாளிகள்
3) நாடக மேடை பக்தர்கள்


இந்த விளையாட்டின் பெயர் என்ன?


1) டிராப்ட்ஸ்
2) கேரம்ஸ்
3) சதுரங்கம்



இது எந்த ஊரில் உள்ள மலை?

1) பழனி
2) திருச்சி
3) மேல்கோட்டை





இது என்ன மிருகம்?

1) காட்டு ஆடு
2) காட்டு எருமை
3) காட்டு மான்

உலகிலேயே. இது தான் பெரிய மசூதி.

1) ஜம்மா மசூதி
2) முத்து மசூதி
3) ஔரங்கசீப்பின் மசூதி






இவர்கள் யார்?

1) மத்திய இந்தியாவில் வாழும் ஆதிவாசிகள்
2) நீலகிரித் தோடர்கள்
3) தென்னாட்டுக் குறவர்

விடைகள் 64-ஆம் பக்கம்.




# அம்புக் குறி

இந்தப் போர்டில் உள்ள வட்டங்களுக்குள் மூன்று பேர் அம்பு எய்கிறார்கள். அம்பு எந்த வட்டத்தில் குத்திக்கொள்கிறதோ அந்த வட்டத்தின் எண்ணிக்கைகளைக் கூட்டிக்கொள்ள வேண்டும். மூவரும் தலைக்கு நாலு நாலு தடவை வீதம் 12 இடங்களில் அம்பு எய்தார்கள். கூட்டிப் பார்த்தால் மூவருடைய எண்ணிக்கைகளும் சமமாகவே இருந்தன. ஒவ்வொருவனுக்கும் வந்த எண்ணிக்கை என்ன?

விடை: கீழே

## விடைகள்

**புத்தகத் தட்டு:**
மேல் வரிசை: சிலப்பதிகாரம்.
கீழ் வரிசை: இளங்கோ அடிகள்.

**சித்திரக் கட்டம்:**
இடமிருந்து வலம்: 1. மண்டபம். 4. பெட்டி. 5. சல்லடை. 6. பல்லி. 7. படி. 8. குடம். 10. பலகை. 11, டமாரம். 12. கம்பம். மேலிருந்து கீழ்: 1. மணி. 2. பல்லக்கு. 3. கட்டில். 5. சட்டி. 6. பம்பரம். 7. பட்டம். 9. அரம்.

**ஜோடி சேருங்கள்:**
9. ஜோடிகள், 90 மார்க்குகள்.

**விடுகதைப் பாடல்கள்:**
1. கடிகாரம். 2. வீதி. 3. நிலைக் கண்ணாடி. 4. தேள். 5. உளுந்து.

**திருடனும் ஜவானும்:**
3-ஆவது ஜவான்.

**போட்டோ க்விஸ்:**
1. வெள்ளியில் பூ வேலை. 2. பரிசல் (கோவை, திருச்சி ஜில்லாக்களில் காணலாம்) 3. மதுரை அழகர் விழாவில் பஜனைக் கோஷ்டி. 4. சதுரங்கம். 5. மேல்கோட்டை. 6. காட்டு எருமை. 7. ஜம்மா மசூதி. 8. நீலகிரித் தோடர்கள்

**சைனா எழுத்து**
ஊசிப்பட்டாசு, ஆனை வெடி, கம்பி மத்தாப்பு, விஷ்ணு சக்கரம், ஆடம் பாம், சைனா பட்டாசு.

**குழந்தைகள் எத்தனை?**
13. குழந்தைகள்.

**அம்புக் குறி:**
ஒவ்வொருவனுக்கும் கிடைத்த எண்ணிக்கை 50. முதல் ஆள்: 25+5+10+10. இரண்டாவது ஆள்: 15+5+15+15. மூன்றாவது ஆள்: 20+10+10+10.

# கத்தியும் கடிதமும்

பங்களாவின் பின்னால் தோட்டத்தில் குத்துக் கத்தியுடன் நின்றிருந்தான் ராஜசேகரன். சிறிது தூரத்திலிருந்த மாமரத்தின் மீது, சாக்கினால் ஒரு வட்டம் போட்டுவிட்டு விலகி நின்றான், தோட்டக்காரப் பொன்னுசாமி.

''காட்டுங்கள்! உங்கள் கை வரிசையை!..'' என்று பொன்னுசாமி சொல்லி முடிப்பதற்குள், ராஜசேகரன் மின்னல் வேகத்தில் கத்தியை விட்டெறிந்தான். அந்தக் கத்தி 'சர்' என்று பறந்துபோய், சரக்கென்று அந்த வட்டத்தின் மத்தியில் குத்திட்டு நேராக நின்றது. பொன்னுசாமி ஆச்சரியத்துடன் ராஜசேகரனைப் பார்த்துக் கொண்டு நின்றான். ''இவ்வளவு குறியாக அடிப்பீர்களென்று நான் எதிர்பார்க்கவே யில்லை!'' என்று வாய்விட்டுச் சொன்னான் அவன்.

''எல்லாம் கைப்பழக்கம்தான். கத்தியைப் பிடுங்கு!'' என்றான் ராஜசேகரன்.

பொன்னுசாமியால் கத்தியை ஒரே மூச்சில் இழுக்க முடியவில்லை. அது அவ்வளவு ஆழப் பதிந்திருந்தது. கத்தியை இப்படியும் அப்படியும் அசைத்து அசைத்துத்தான் வெளியே எடுக்க முடிந்தது.

ராஜசேகரன் சிரித்துக்கொண்டே திரும்பினான். ''எசமான்'' என்று கத்திக்கொண்டே ஓடி வந்தாள், வேலைக்காரப் பெண் பத்மினி.

''என்ன?'' என்று கேட்டான் ராஜசேகரன்.

''அம்மா கூப்பிடுகிறார்கள்.''

ராஜசேகரன் தலையை ஆட்டிப் பங்களாவை நோக்கி நடந்தான்.

பங்களாவின் முதல் மாடியில் அம்மாவின் அறை இருந்தது. ராஜசேகரன், மூடியிருந்த கதவுகளை மெல்லத் திறந்துகொண்டு உள்ளே சென்றான்.

கட்டிலின் மீது அம்மா உட்கார்ந்திருந்தாள். அவளுடைய கண்கள் சிவந்திருந்தன. தலை குஞ்சம் போல் கலைந்து கிடந்தது.

ராஜசேகரன் அம்மாவுக்கு அருகில் சென்று, ''என்னம்மா?



அழுது கொண்டிருந்தாயா? எதற்கு?'' என்று கேட்டான். அவனுடைய அம்மா அழுது, அவன் இதுவரையில் பார்த்ததே கிடையாது. ஆகையால், அழுது சிவந்திருந்த அவளுடைய கண்களைக் கண்டதும், அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

''ஒன்றும் இல்லையடா, ராஜா. நான் ஏன் அழப்போகிறேன்?'' என்று மழுப்பினாள் அம்மா.

''எதற்குக் கூப்பிட்டாய்? அதை யாவது சொல்லு!'' என்று கெஞ்சிக் கேட்டான் ராஜசேகரன்.

''அப்பா வேட்டையாடப் போய், நான்கு நாட்கள் ஆகின்றன. நேற்று வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார். இதுவரையில் காணோமே!'' என்றாள் அம்மா.

ராஜசேகரன் ஆச்சரியத்துடன் அம்மாவைப் பார்த்தான். ''என்ன? வேட்டையாடப் போனாரா? பெங்களூருக்கு ஏதோ வேலையாகப் போவதாக அல்லவா சொல்லிவிட்டுப் போனார்?'' என்று கேட்டான்.

''வேட்டைக்குப் போவதாகச் சொன்னால், நீயும் போகவேண்டும் என்று பிடிவாதம் செய்வாய் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் நானே அப்படிச் சொல்லச் சொன்னேன்!''

''நல்ல அம்மா நீ! அது போகட்டும். அப்பா சொன்னால் சொன்னபடி வந்து விடுவாரே. ஏன் இன்னும் வரவில்லை?'' என்று கேட்டான் ராஜசேகரன்.

''அதுதான் நானும் புரியாமல் தவிக்கிறேன். யாரையாவது ஆட்களை விட்டுத் தேடி வரச் சொல்லேன்!''

''நானே போய் வருகிறேன், அம்மா. காட்டில், அப்பா போகுமிடமெல்லாம் எனக்குத் தெரியும்!'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான், ராஜசேகரன்.

''வேண்டாம்'' என்று சொல்ல வாயெடுத்தாள் அம்மா. அதற்குள் தடாலென்று கதவைச் சாத்திவிட்டு ஓடிவிட்டான், ராஜசேகரன்.

அம்மா, அறையின் ஜன்னல் வழியாகத் தோட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். வேட்டைத் துப்பாக்கி, குத்துக் கத்தி, உணவு வகைகள் அடங்கிய 'பை' இவைகளுடன் குதிரைமீது தாவினான், ராஜசேகரன்.

குதிரை காற்ருய்ப் பறந்து மறைந்தது!



மணி நான்குக்கு மேல் ஆகிவிட்டது. குதிரையால் ஓட முடியவில்லை. அது மெல்ல நடந்து கொண்டிருந்தது.

ஒரு பெரிய மண்மேட்டின் மீது குதிரையை நிறுத்தி, குதிரை மீதிருந்தபடியே சுற்று முற்றும் பார்த்தான். சுமார் அரைமைல் தூரத்தில், ஒரு சிறிய கூடாரம் தெரிந்தது. குதிரையை மெல்லக் கூடாரத்தை நோக்கி ஓட்டினான்.

கூடாரத்தை நெருங்க நெருங்க, அவன் மனச் சோர்வு நீங்கியது. அந்தக் கூடாரம் அவனுடைய அப்பாவுடையதுதான்! ஆனால் அங்கே ஒருவரையும் காணோம்! ஆனால் காலடி மட்டும் தெரிந்தது. அப்பாவின் காலடியுடன் வேறு ஒருவரின் காலடியும் தெரிந்தது.

ராஜசேகரன் குதிரையை விட்டுக் கீழே குதித்து, கூடாரத்திற்குள் நுழைந்தான். உள்ளே—

அவனுடைய அப்பாவைக் காணோம். மடிப்பு மேஜையின் மேல் பிளேட்டுகளும் டம்ளர்களும் உருண்டு கிடந்தன. பிளேட்டில் இருந்த சாப்பாடு அப்படியே கிடந்தது. ஆனால், பாதிச் சாப்பாடு பிளேட்டிலும், பாதிச் சாப்பாடு மேஜையின் மீதும் விழுந்து கிடந்தது. மற்றொரு பிளேட் காலியாகக் கிடந்தது. மேஜைக்குப் பக்கத்தில் இருந்த இரண்டு நாற்காலிகளும் உருண்டு கிடந்தன. கீழே ஒரு பக்கத்தில், மாசிலாமணி அசைவற்று விழுந்து கிடந்தான். அப்பாவுடன் எப்பொழுதும் வேட்டையாடச் செல்பவன் அவன் ஒருவன் தான். ராஜசேகரன் அவனைப் புரட்டிப் பார்த்தான்.



அவன் செத்துக்கிடந்தான். அவனுடைய மார்பில் பாய்ந்த குண்டு, முதுகின் வழியாக வெளியே பறந்து போயிருக்கவேண்டும். அவனுடைய கையில் வேட்டைத் துப்பாக்கி ஒன்று இருந்தது.

அப்பாவின் துப்பாக்கியைக் காணோம்! அப்பாவைக் காணோம்! குதிரைகளையும் காணோம்!

ராஜசேகரன் வெளியே வந்து பார்த்தான். கண்ணுக்கெட்டிய வரையில் காட்டின் பயங்கரம் தான்!

என்ன நடந்தது என்று கற்பனை செய்து பார்த்தான், ராஜசேகரன். "அப்பாவும் மாசிலாமணியும் கூடாரம் போட்டுத் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, யாரோ திருடர்கள் ஓடிவந்து அப்பாவைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள். திருடர்கள் புகுந்தபோது, சாப்பிட்டு முடித்துவிட்டு அப்போதுதான் எழுந்த மாசிலாமணி, ஓடிப்போய் மூலையிலிருந்த துப்பாக்கியை எடுத்திருக்கிறான். ஆனால் அதற்குள் திருடர்களில் ஒருவன், அவனைச் சுட்டுவிட்டு, மூலையில் கிடந்த அப்பாவின் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு போய்விட்டான். இரண்டு குதிரைகளையும் அவர்கள்தான் ஓட்டிச் சென்றிருக்க வேண்டும்!"



"திருடர்கள் ஏன் அப்பாவைக் கடத்திச் செல்லவேண்டும்? இப்போது அப்பா எங்கே இருக்கிறார்?" இந்தக் கேள்விகளுக்கு அவனால் ஒன்றும் சரியாக ஊகம் செய்ய முடியவில்லை.

பக்கத்தில் ஒரு குளம் இருந்தது. ராஜசேகரன் குதிரையைக் குளத்தருகில் ஓட்டிச் சென்றான். குதிரை தண்ணீர் குடித்துவிட்டுக் கனைத்தது.

ராஜசேகரன் குதிரையைத் தட்டிவிட்டான். இப்போது அது கொஞ்சம் வேகமாக ஓடியது.

மணி ஐந்துக்கு மேல் ஆகிவிட்டது. இப்போது அவன், கூடாரத்திலிருந்து வெகு தூரம் வந்துவிட்டான்.

சூரியன் மறைய இன்னும் ஒரு மணி நேரமே இருந்தது.

தூரத்தில், மலையடிவாரத்தில் ஒரு சிறிய வீடுபோல் காணப்பட்டது. அந்த வீடு முழுவதும் ஜாதிக்காய் மரப் பலகையினால் கட்டப்பட்டிருந்தது. ராஜசேகரன் குதிரையை ஓட்டிச் சென்று, அந்த வீட்டுக்கு எதிரே நிறுத்தினான். அங்கேயும் அந்தக் காலடிகள் தெரிந்தன. அந்த வீட்டின் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன.

ராஜசேகரன் குதிரையை விட்டுக் கீழே குதித்தான். அந்த வீட்டின் எதிரே நின்றுகொண்டு, கதவைத் தட்டினான். பதில் இல்லை.

கதவுகளைக் கையால் தள்ளினான். கதவுகள் திறந்துகொண்டன. உள்ளே—

ஒருவரும் இல்லை! மூலையில், ஒரு துப்பாக்கி சாத்தியிருந்தது. ராஜசேகரன் ஓடிப்போய் அதை எடுத்துப் பார்த்தான். அது அவன் அப்பாவுடைய துப்பாக்கிதான்!

''யாரது, உள்ளே?'' என்று அதிகாரக் குரல் ஒன்று பின்னுலிருந்து வந்தது. ராஜசேகரன் திரும்பிப் பார்த்தான்.

வாயிற்படியில் பத்து வயதுப் பெண் ஒருத்தி நின்றிருந்தாள்!

ராஜசேகரன் அவளை நோக்கி வந்தான். அவள் கொஞ்சங்கூடப் பயப்படவில்லை. அவனையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

''நீ யார் ?'' என்று கேட்டான் ராஜசேகரன்.

அவள் மெல்லச் சிரித்தாள். ''நல்ல கேள்வி! நான்தான் இந்த வீட்டுக்குச் சொந்தக்காரி. என்னையே யார் என்று திருப்பிக் கேட்கிருயே?'' என்ருள்.

''இந்தத் துப்பாக்கி ஏது?'' என்று அதட்டிக் கேட்டான், ராஜசேகரன்.

''எனக்குத் தெரியாது. அப்பா கொண்டு வந்தார்.''

''யார் உன் அப்பா?''

''மாரிசாமி. அவர் எங்கேயோ வெளியே போயிருக்கிருர்!''

''எப்போது வருவார்?''

''தெரியாது!''

''வீட்டில் வேறு ஒருவரும் இல்லையா?''

''இல்லை.''

ராஜசேகரன் டயரியை எடுத்து, ஒரு காகிதத்தை எடுத்தான். அதில் ஏதோ எழுத ஆரம்பித்தான். சட்டென்று எழுதுவதை நிறுத்திவிட்டு, ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டான்.

''மீனு'' என்ருள் அந்தப் பெண்.

''மாரிசாமிக்கு, உன்னுடைய மகள் மீனுவை நான் கொண்டு போகிறேன். என்னுடைய அப்பாவுக்கு அவள்தான் அடகு. என்னுடைய அப்பா உயிரோடு திரும்பி வராவிட்டால், நீயும் உன் மீனுவை உயிரோடு பார்க்க மாட்டாய் !'' என்று எழுதிக் கையொப்பமிட்டான்.



அந்தக் கடிதத்தைக் கதவில் வைத்து, அதன் மத்தியில் கத்தியால் குத்தினுன். கத்தி கடிதத்தைக் கிழித்துக்கொண்டு, கதவின் மேல் குத்திட்டு நின்றது. பிறகு திரும்பி, மீனுவை இழுத்துக்கொண்டு போய், குதிரைமேல் தூக்கிப் போட்டுவிட்டு, அப்பாவின் துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு, குதிரைமேல் தாவினுன்.

குதிரை இப்பொழுது பறந்தது!

பங்களாவை அடைந்தபோது, இரவு மணி பத்து. குதிரையின் காலடிச் சப்தம் கேட்டு வெளியே வந்து நின்ருள், அம்மா. ராஜசேகரன் குதிரையை நிறுத்தி, ''அம்மா! எனக்கு ஒரு தங்கையைக் கொண்டு வந்திருக்கிறேன். அவளைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்பா வந்து விடுவார். பயப்படாதே!'' என்று சொல்லி, மீனுவை இறக்கிவிட்டான். ராஜசேகரனையும் மீனுவையும் மாறி மாறிப் பார்த்தாள் அம்மா!

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. மறுநாள், மாலை.

### பானமா, பாணமா?




பங்களாத் தோட்டத்தில் மீனாவும் பத்மினியும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ராஜசேகரன், அதே மாமரத்தின் மீது சாக்கினால் வட்டம் போட்டு விட்டு, தூரத்தில் நின்று கத்தியை விட்டெறிந்தான். கத்தி 'சரக்' கென்று வட்டத்தின் மையத்தில் குத்திட்டு நின்றது! அப்போது—

அவனுக்குப் பின்னாலிருந்து பறந்து வந்த மற்றொரு கத்தி, 'சரக்' கென்று மரத்தின்மேல், அவனுடைய கத்திக்குப் பக்கத்திலேயே குத்திட்டு நின்றது! ராஜசேகரன் திரும்பினான். யாரையும் காணோம்!

ராஜசேகரன் ஓடிப்போய் அந்தக் கத்தியைப் பிடுங்கிப் பார்த்தான். அத்துடன் ஒரு கடிதம் பிணைக்கப் பட்டிருந்தது. ''ராஜசேகரனுக்கு. உனக்குத்தான் வெற்றி! மீனாவின் மீதுள்ள பாசத்தால் உன் அப்பாவைப் பத்திரமாகத் திருப்பி அனுப்பிவிடுகிறேன். உன்னுடைய அப்பா என்னுடைய பாதுகாப்பில் இருந்தார். அவரை மிரட்டிப் பல வழிகளில் பணம் பறிக்க நானும் கமலசாமியும் கந்தநாதனும் திட்டம் போட்டோம். கமலசாமிதான் எங்கள் தலைவன். உன்னுடைய அப்பாவைக் கடத்தி வந்தபோது, கந்தநாதன் அவசரப்பட்டு மாசிலாமணியைச் சுட்டு விட்டான். இப்போது, உன் அப்பாவை நான் விடுதலை செய்வதைக் கமலசாமி அறிந்தால் உடனே என்னைத் தீர்த்துக் கட்டி விடுவான். ஆகையால், அவனுக்கும் கந்தநாதனுக்கும் விஷம் வைத்துவிட்டேன். இப்போது அவர்கள் செத்துக் கொண்டிருப்பார்கள்! உன்னிடம் ஒரு நிபந்தனை: உன் அப்பாவை நீ உயிருடன் பார்க்கப் போவது என்னால் தான்! ஆகையால், மீனாவை இனி மேல் நீதான் காப்பாற்ற வேண்டும். அவளும் ஒரு பெரிய பணக்கார வீட்டுக் குழந்தைதான். அவளைத் தூக்கி வந்து பிள்ளைப் பாசத்திற்காக வளர்த்தேன். ஆனாலும், நான் ஒரு திருடன், கொள்ளைக்காரன். ஆகையால், அவள் என்னிடம் இருந்தால் சமூகத்தில் தலைகாட்ட முடியாது. அவளுக்கு ஒரு குறைவும் இருக்கக் கூடாது. அவளுக்கு ஏதாவது நேர்ந்தால், என்னால் நிச்சயமாக உங்கள் குடும்பத்தில் யாராவது ஒருவருக்கு ஆபத்து! என்னைக் கண்டு பிடிக்க முயற்சி செய்தால், அது வீண் வேலை என்றுதான் சொல்வேன். ஆனால், அடிக்கடி நான் மீனாவைக் கவனித்துக் கொண்டிருப்பேன்.—மாரிசாமி.''

அவன் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பி நின்றன. அவன் அங்கே நின்றபடியே மீனாவின் கள்ளங் கபடமற்ற முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அதே சமயத்தில் குதிரை ஓடி வரும் சப்தம் கேட்டது. யார் அது! அவனுடைய அப்பாதான்!

கதை: ஆர்வி

# தூங்கும் அழகி

சித்திரம்: ஸாமி




ஹஹ்ஹா! நீ அடிமை என்பது உனக்கே தெரியாதா! ஆனால் அவனால் இந்த இடத்தில் அடி எடுத்து வைக்க முடியாது!
நிச்சயமாகவா?
நீ பேசினாயே! கல்லாக ஆனாயா? இந்த இடத்தில் அவன் வித்தை யெல்லாம் பலிக்காது!
உன்னைப் பார்க்க ஆசையாக இருக்கிறது!
இருட்டி விட்டதே நான் போக வேண்டும்!
வேண்டாம்! அதற்குத் துணியாதே! வேண்டுமானால் நீ இங்கேயே இரு! உன்னைக் காப்பது என் பொறுப்பு!
நான் சொல்வதைத் தட்டாமல் இன்று இரவு இங்கு தங்கி விடு, பிறகு காலையில் பார்ப்போம்.
தனியாகவா நான் இருப்பது?
சொல்வதைத் தட்டாதே! இதோ, உனக்கு வேண்டிய பொருள்கள்!
ஆ! நீங்கள் எல்லாம் யார்? என்னுடை பேசியது யார்?
அதைக் கேட்காதே! உனக்கு நன்மையே உண்டாகும்.
ருசி மிகுந்த உணவு உண்டதும் . . . . .
அழகாக இருக்கிறதே!
இங்கேயா வந்தாய்?
ஆ! அதோ ஜின் வருகிறதே! நான் என்ன செய்வேன்!
நான் என்ன செய்வேன்?
அங்கிருந்தபடியே குதித்து விடு! பயப்படாமல் குதி
தொடரும்

# ஓடிப்போனவன்

## ஜோதிர்லதா கிரிஜா

நான் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தேன். ஒரே கணக்கை நான்கு முறை போட்டேன். ஒவ்வொரு தடவைக்கும் வெவ்வேறு விடை வந்தது. ஆத்திரத்தோடு கணக்கு நோட்டை நான் 'டப்'பென்று மூடி வைப்பதற்கும், அடுத்தகத்து மாமி அவசர நடையில் என் அறைக்குள் நுழைதற்கும் சரியாக இருந்தது. அங்கச்சி மாமியின் முகம் அளவற்ற பதற்றத்துடன் காணப்பட்டது.

''எங்க ராமனை எங்கேயாவது பார்த்தியாடா, அம்பி? நேற்று ராத்திரிலேந்து காணும். முந்தாநாள் அவ அப்பா அவனை அடிச்சு நொறுக்கிப்பிட்டார். அந்தக் கோவத்துலே எங்கேயாவது அசலூருக்குத்தான் ஓடிப்போயிட்டானோன்னு ஒரே திகிலாயிருக்கு!'' என்று சொல்லிய வண்ணம் கண்ணீர் உகுத்தாள்.

இதற்குள் அம்மாவும் அங்கே வந்தாள்.

''ஏண்டா மண்ணுந்தைமாதிரி உக்காந்துண்டிருக்கே! போய்ச் சுத்திப் பாரேன்!'' என்று சொல்லவே, நான் ராமனைத் தேடக் கிளம்பி விட்டேன்.

ராமன் அகப்படவே இல்லை.

நான்கூட இப்படித்தான் போன வருஷம் ஓடிப்போனேன். அதன் பலனையும் நன்றாக அனுபவித்தேன்.

அப்போது எனக்கு வயது பத்து. ஏழாவது வகுப்பு வருஷ முடிவுப் பரீட்சை எழுதியிருந்தேன். ஏதோ சுமாராக எழுதியிருந்ததாகவே எண்ணிக் கொண்டிருந்தேன். கேட்டவர்களிடம் எல்லாம், 'நன்றாய் எழுதியிருக்கிறேன்; நன்றாய் எழுதியிருக்கிறேன்' என்றுதான் பதில் சொல்லிவந்தேன். படுமோசமாக எழுதுகிறவர்கள் கூட வெளுத்து வாங்கியிருப்பதாகத் தானே சொல்லுகிறார்கள்?

மறுநாள் பரீட்சை முடிவு வெளியாவதாக இருந்தது. அன்று வெள்ளிக்கிழமை. அம்மா கொடுத்த எண்ணெயையும் திரியையும் எடுத்துக்கொண்டு, நான் கோவிலுக்குப் போனேன். கோவிலில் குண்டுச் சுப்பனைச் சந்தித்தேன். அன்று காலைதான் தலைமையாசிரியர் வீட்டுக்குப் போயிருந்ததாகவும், அவரை விசாரித்ததில் தான் தேறி விட்டதாயும் நான் தவறிவிட்டதாயும் அறிந்ததாகச் சொன்னான். என் ஏழு நாடிகளும் ஒடுங்கிப்போய் விட்டன. கையில் பிடித்திருந்த எண்ணெய்க் கிண்ணத்தை நழுவ விட்டேன். என் உள்ளம் சிதறிய தைப்போல் எண்ணெய்த் துளிகள் நாற்புறமும் சிதறின.

ஐயோ! அம்மா அப்பாவின் முன்னால் போய் எப்படி முகத்தைக் காட்டுவேன்?

அப்பாவைப் பற்றிய நினைப்பு வந்ததுமே, அச்சத்தால் உடம்பைச் சிலிர்த்துக்கொண்டேன். மொத்தத்தில் இந்த அப்பாக்களே மோசம். அதுவும் எங்கள் அப்பா ரொம்ப மோசம். அவருக்குத்

திருப்தி கிடையாது. அரைப் பரீட்சையில் முதலாவதாகத் தேற வில்லை என்பதற்காகவே நாலுநாள் நடமாட முடியாதபடி மொத்தித் தள்ளின அருமையான அப்பா, முழுப் பரீட்சையில் நான் தேறவே யில்லை என்று தெரிந்தால், அப் படியே கொன்றுவிடமாட்டாரா கொன்று!

''அம்பி, வருத்தப்பட்டு என்ன பயன்? அடுத்த வருஷம் முதல் வகுப்பில் தேறிவிடலாம்!'' - குண்டுச் சுப்பன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே சிரித்துவிட்டுச் சென்ருன். என் கண்களில் கண்ணீர் பீரிட்டது அவனுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக முகத்தைத் திருப்பிக்கொண்டு நடந்தேன்.

வாசற்படியில் நின்றுகொண்டிருந்த அம்மா, என்னைக் கண்டதும், ''எண்ணெய்க் கிண்ணம் எங்கேடா?'' என்ருள். கோவில் வாசலில் அதை நழுவ விட்டு எடுக்க மறந்து போனது அப்போதுதான் எனக்கு நினைவு வந்தது. அவசரமாக ஓடினேன். இன்னும் அது அங்கேயேவா கிடக்கும்? வெறுங் கையுடன் திரும்பிவந்து வசவு வாங்கிக்கொண்டேன்.

அம்மா ஒன்றும் அப்படிக் கடுமையாகத் திட்டவில்லை. அப்படியும் எனக்கு அழுகை குமுறிக் கொண்டு வந்தது.

வாசலில் 'சரக் சரக்' கென்று செருப்புச் சத்தம் கேட்டது. அப்பாவின் நடைச் சத்தம்தான்!

வந்ததும் வராததுமாக அவர், ''அம்பி, நாளைக்கா ரிசல்ட் தெரியும்?'' என்ருர்.

''ஆமாம்பா!''

''ஏண்டா ஙொண ஙொணன்னு பேசறே?''

''சளி பிடிச்சிண்டிருக்கு, அப்பா!''

''ஆற்று ஜலத்தில் அறுபது நாழிகையும் துளைஞ்சா சளி மட்டுமா பிடிக்கும்?''

''இல்லேப்பா.... வந்து..''


''சரி, சரி!... அடுத்த வீட்டுக் கிட்டு தேட் பாரந்தானே?''

''ஆமாம்பா!''


''அவனோட இங்கிலீஷ் புஸ்தகத்தை வாங்கிக் கொஞ்சம்தான் புரட்டிப்பாரேன்! அவனுடைய புஸ்தகமெல்லாம் வேணும்னு இப்பவே சொல்லி வெச்சுடு! வேறே யாருக்காவது குடுத்துடப் போருன்.''

என் உடம்பு வெடவெடவென்று ஆடிற்று. நான் மேல் வகுப்புக்குப் போய் விடுவேன் என்று எவ்வளவு நம்பிக்கை அப்பாவுக்கு! உண்மை தெரிந்தால்....? அதை என்னுல் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. நாக்கு மேலண்ணத்துடன் பசையாக ஒட்டிக் கொண்டது. ஏதோ ஒன்று உருண்டையாக வயிற்றிலிருந்து மேலே கிளம்பித் தொண்டையில் சிக்கிக் கொண்டது. அதை

**ஷோக்கா இருக்கேனு?**



போட்டோ: என்: ராமகிருஷ்ண



விழுங்க முடியவில்லை. ''ஏண்டா ஜடம் மாதிரி நிக்கறே? உன் பழைய புஸ்தகத்தை எல்லாம் கொஞ்சம் 'ரிவைஸ்' பண்ணு! முக்கியமாகக் கணக்குப் போடு! அதில்தான் நீ ரொம்ப 'ஹோப்லெஸ்'!''

நடுங்கும் கையினால் கணக்குப் புத்தகத்தையும் நோட்டையும் எடுத்து வைத்துக் கொண்டேன். அப்பா சாப்பிடுவதற்காக அடுக்களைக்குப் போனார்.

'இந்தப் புத்தகத்தைத் தானா அடுத்த வருஷமும் கட்டியழ வேண்டும்?'

என் கண்ணீர்த் துளிகள் 'டப் டப்' பென்று கணக்குப் புத்தகத்தில் விழுந்து சிதறின.

நான் ஒரு புதிய தீர்மானத்துடன் எழுந்திருந்தேன். அப்பாவின் கோட்டு, கொக்கியில் தொங்கிக் கொண்டிருந்தது. அதிலிருந்த பர்ஸை எடுத்துத் திறந்தேன். சரியாக இருபது ரூபாய் இருந்தது. பர்ஸை என் கால் சட்டைப் பையியினுள் போட்டுக் கொண்டேன். அமைதி யடைந்த உள்ளத்துடன், பஸ்கள் நிற்குமிடம் நோக்கி நடந்தேன். பொழுது விடிந்தால், பொழுது போனால் அப்பாவிடம் அடியும் திட்டும் இனிமேல் வாங்கவேண்டியதில்லை. பாடப் புத்தகங்களைக் கட்டியழ வேண்டியதில்லை. 'பரீட்சை வருகிறதே; பரீட்சை வருகிறதே' என்று பதை பதைக்க வேண்டியதில்லை.

வத்தலக்குண்டு கிராமத்திலிருந்து நேரே அம்மையநாயக்கனூருக்கு ஒரு சீட்டு வாங்கிக் கொண்டு பஸ்ஸில் ஏறினேன். மீதிப் பணம் பத்தொன்பது ரூபாய், பத்து அணாவும் என் கால் சட்டைப் பையில் பத்திரமாக இருந்தது.

நான் அம்மையநாயக்கனூரை அடைந்த பொழுது இரவு மணி எட்டரை இருக்கும். பகல் பன்னிரண்டு மணிக்குச் சாப்பிட்டது. பசி குடலைக் குடைந்தது. ஒரு பெரிய

ஓட்டலுக்குள் நுழைந்தேன். பத்தணாவுக்குக் 'கபளீகரம்' பண்ணினேன். 'எந்த ஊருக்குப் போகலாம்? கோயம்புத்தூர் போகலாமா? திருச்சி போகலாமா?' என்று மண்டையை உடைத்துக் கொண்டேன்.

கடைசியில் கோயம்புத்தூருக்குப் போவதென்று தீர்மானித்தேன். ஏனெனில் கோயம்புத்தூரில் எங்களுக்குத் தூரத்துச் சொந்தக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் வீட்டில் அன்று கல்யாணம் நடந்திருந்தது. விடுமுறை கிடைக்காததால் அப்பா போகவில்லை.

சரியாகப் பத்தரை மணிக்குக் கோயம்புத்தூர் செல்லும் வண்டி பிளாட்பாரத்தில் வந்து நின்றது. டிக்கெட் வாங்கினது போக மீதிப் பணத்தில் ஒரு பகுதி மேல்சட்டைப் பையிலும் இன்னொரு பகுதி கால் சராய்ப் பையிலும் இருக்கும் படியாக வைத்துக் கொண்டேன். ஆனால் அது எனக்கு எவ்வளவு நன்மையாக முடிந்தது!


ரெயிலில்--அதாவது நான் ஏறியிருந்த பெட்டியில் மூன்றேபேர்கள் தாம் இருந்தோம். எனக்கோ தூக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது. என்னை அறியாமல் தூங்கிவிட்டேன். திடீரென்று யாரோ என் சட்டைப் பையில் கை விடுகிற உணர்ச்சி உடலில் பரவவே சடாரென்று கண் விழித்தேன். என் முன்னால் ஒரு முரடன் என் பையிலிருந்து உருவின பர்ஸுடன் நின்று கொண்டிருந்தான். வண்டியிலிருந்த மற்ற இரண்டு பேர்வழிகளும் இறங்கி விட்டிருந்தார்கள். ''சத்தம் கித்தம் போட்டியோ?''.. என்று பல்லைக் கடித்து என் கண்ணுக்கு நேரே அந்தத் திருடன் கத்தியொன்றை நீட்டினான். நான் கதிகலங்கிப் போய் உட்கார்ந்திருந்தேன். இரண்டே நிமிஷத்தில் வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்றதும், திருடன் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கி இருளில் கலந்து மறைந்தான். 'டக் டக்' கென்ற பூட்ஸ் ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்தேன், டிக்கெட் பரிசோதகர். என் நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது. பர்ஸோடு டிக்கெட்டுமல்லவா போய்விட்டது?

''டிக்கெட் எங்கே? எடு!''

உடைந்த குரலில் நான் நடந்ததைச் சொன்னேன். என் போதாத வேளை; அவர் அதை நம்பவில்லை. என்னைக் கீழே இறக்கி, பல பேருக்கெதிரிலும் மூக்கு முகம் பார்க்காமல் மொத்தித் தள்ளினார்.

நான் கால்சராய்ப் பையில் வைத்திருந்த பணத்தை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டேன். மறுபடியும் கோயம்புத்தூருக்கு ஒரு சீட்டு

## இதோ நெருப்பு இருக்குடோய்!



வாங்கிக்கொண்டு வண்டியில் ஏறினேன். சுமார் எட்டு மணிக்கு வண்டி கோயம்புத்தூரில் நின்றது.

அந்த ஊரையே வலம் வந்தேன். எங்கள் ஒன்று விட்ட சித்தப்பாவை நான் பார்த்து எத்தனையோ நாளாயிற்று. அடையாளம் கூடச் சரியாகத் தெரியாது. பேர் மட்டும் தெரியும். விலாசமும் தெரியாது.

ஏதோ ஒரு தெரு வழியாக நான் வந்து கொண்டிருந்த போது, ஒரு வீட்டு வாசலில் பந்தல் போட்டிருந்ததைக் கண்டேன். உடனே அதுதான் சித்தப்பா வீடாயிருக்குமென்ற முடிவுக்கு வந்தேன். ஏதாவது கேட்டால் என்ன பதில் சொல்லுவது?

பந்தல் வாசலில் தொந்தியும் தொப்பையுமாக வழுக்கைத் தலையுடன் ஒருவர் இடுப்பில் இரு கைகளையும் வைத்துக் கொண்டு நாட்டியமாட ஆயத்தமாயிருப்பவர் போல் நின்று கொண்டிருந்தார். நான் தைரியமாக அவரை நெருங்கி, "சார்! ராமநாதன் என்பவருடைய வீடுதானே இது?" என்று கேட்டேன். "ஆமாம்! யார்ரா நீ?" என்று அந்த மனிதர் உறுமினார். நான் மென்று விழுங்கிக்கொண்டே, "நான் சிவராஜனுடைய பிள்ளை.



வத்தலக்குண்டிலிருந்து வந்திருக்கிறேன்!'' என்றேன். ''என்னது? சிவராஜனு? என்ன ஊருன்னு சொன்னே? வத்தலக்குண்டா? அந்தப் பேரையே இப்பத்தான் கேக்கறேன். வெத்தலேக்குண்டுமாச்சு! புகையிலேக்குண்டுமாச்சு! போடா, போடா! இந்த மாதிரி எதையாவது சொந்தம் கொண்டாடிண்டு வந்தால் சோறு விழும்னு பாத்தியோ! டேய், குப்பு! அந்தத் தடியை எடுத்துண்டு வா, சொல்றேன்!''

அந்தக் குப்பு கம்பை எடுத்துக் கொண்டு வருவதற்கு முன்னல் நான் கம்பி நீட்டினேன். தலே தெறிக்க ஓடத் தொடங்கினேன். நேரே ஸ்டேஷனுக்கு வந்ததும் தான் நின்றேன். பிளாட்பாரத்தில் இரண்டு பெரிய பையன்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவ்விரு பையன்களில் ஒருவன், ''தம்பி, எங்கே போகிருய்?'' என்று கேட்டான். ''அம்மையநாயக்கனூருக்கு, ஏன்?'' என்றேன். ''அடேடே நாங்களும் அங்கே தான் போறேும். நல்ல துணே தான்!'' என்றுன். கடைசியில் காலியாயிருந்த ஒரு பெட்டிக்குள் மூவரும் ஏறினேம். வண்டி புறப்பட்டது. கொஞ்ச நேரம் இருவரும் என்னுேடு பேசிக்கொண்டே வந்தார்கள். பிறகு, அவர்கள், ''சும்மாப் படுத்துத் தூங்கு, தம்பி. ஸ்டேஷன் வந்ததும் நாங்க எழுப்பறேும்!'' என்றுர்கள். எனக்குத் தூக்கமே வராததால் நான் வெட்ட வெளியை வேடிக்கை பார்த்தவாறு உட்கார்ந்திருந்தேன். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்த இருவரும் சிரித்துக்கொண்டே எனக்கு அருகில் மிகவும் நெருங்கி அமர்ந்து கொண்டார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்சிமிட்டிய வண்ணம், ''தம்பி! எம்புட்டுப் பணம் வெச்சிருக்கே?'' என்றுர்கள். எனக்குச் சொரேர் என்றது. அவர்களுடைய நோக்கம் அப்போதுதான் எனக்குப் புரிந்தது. ''ஐயையோ!''



நீ அப்பாவாம், நான்..!

என்று மட்டும்தான் அழுகையும் அபயமும் கலந்த குரலில் என்னுல் கத்த முடிந்தது. அந்தப் பையன் களில் பெரியவன் என் கால் சட் டைப் பையிலிருந்த பணத்தை எடுக்கலானுன். நான் திமிறினேன். இன்னெரு பையன் என் வாயை இறுகப் பொத்தினுன்.

இந்தச் சமயத்தில்தான், 'கடவுள் இருக்கிருர்' என்பதை நான் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அதே பெட்டி இரண்டு இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. நடுவில் ஒரு மரச் சுவர். இருந்தாலும் ஒன்றிலிருந்து இன்னென்றுக்குப் போக வழியிருந் தது. அந்த மற்றெரு பகுதியின் மேல் பலகையிலிருந்து ஒரு தடி யான மனிதர் 'தொடும்' என்று குதித்தார். இந்தச் சத்தத்தைக் கேட்டதும் இருவரும் திகைப் புற்றவர்களாய்த் திரும்பிப் பார்த் தார்கள். விடு விடுவென்று இரண்டே எட்டில் எங்களை நெருங் கிய அந்த மனிதர், இரண்டு போக் கிரிகளையும் பிடித்துக் கொண்டு, சாத்தித் தள்ளிவிட்டார். இரண்டு பேர் தலைகளையும் தம் அகன்ற கை களால் பிடித்துக்கொண்டு 'ணங் ணங்' கென்று ஒன்ருேடொன்று முட்ட விட்டுக்கொண்டே ''அம்பி! வேறே ஒண்ணுமில்லே! தேங்காய் முத்தலா, எளசான்னு பார்க்க றேன்!'' என்று என்னை நோக்கிக் குறும்பாகச் சிரித்தார்.

பிறகு அவர் என்னைப் பற்றி விசா ரித்தார். நான் ஊரையும் பேரை யும் மாற்றிச் சொன்னேன். திரு விழாக் கூட்டத்தில் தவறிப் போய், பெற்ருேர்களிடமிருந்து பிரிந்து விட்டதாகச் சொன்னேன்.

''அம்மையநாயக்கனூர் போகிற வன் ஏன் பழனிக்குப் போகிற வண் டியில் ஏறிக் கொண்டிருக்கிருய்?''

''ஐயையோ! இது பழனிக்குப் போகிற வண்டியா?''

இந்தத் தருணத்தில் வண்டி ஒட்டஞ்சத்திரத்தில் நின்றது.



சிரிப்பா வறது, இல்லே!

போட்டோ: E. ராமலிங்கம்.



அந்த மனிதர் எங்கள் மூவருடனும் இறங்கி ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்றார். எல்லாவற்றையும் விரிவாக அவரிடம் தெரிவித்தார். பிறகு, ''சார்! இந்தப் போக்கிரிகளைப் போலீஸாரிடம் நல்ல உதை வாங்கிக் கொடுத்து அனுப்புங்கள். இந்தப் பையனுடைய அப்பாவுக்கு ஒரு தந்தி கொடுங்கள்! உங்கள் செலவுக்கெல்லாம் இதோ பணம்!'' என்று ஸ்டேஷன் மாஸ்டரிடமும் என்னிடமும் விடை பெற்றுக் கொண்டு சென்றார்.

ஸ்டேஷன் மாஸ்டர் கெட்டிக்காரர். என் கதையை அவர் நம்பவில்லை. என்னைத் தட்டிக் கொடுத்துப் புத்தி சொன்னார். எனக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. எல்லாவற்றையும் உள்ளது உள்ளபடி கொட்டித் தீர்த்தேன்.

அப்பாவின் ஊரையும் பேரையும் கேட்டதுமே அவர் துள்ளிக் குதித்தார்.

''அவரிடம்தானே நான் படித்தேன்?'' என்று அப்பாவைப்பற்றி எல்லாம் அவர் கேட்டார். பிறகு, 'உங்கள் பிள்ளை இங்கே என்னிடம் இருக்கிறான். உடனே வரவும்—உங்கள் மாணவனும் ஒட்டஞ்சத்திரம் ஸ்டேஷன் மாஸ்டருமான மாதவன்' என்று ஒரு தந்தியும் கொடுத்தார். அன்று பிற்பகல் இரண்டு மணிக்கு அப்பா வந்து சேர்ந்தார். மாதவன், அப்பாவை வரவேற்றவுடனேயே, ''சார்! பையனை அடிக்காதீர்கள்! ஏதோ சிறு பிள்ளைத்தனமாய் ஓடிவந்து விட்டான்!'' என்று எனக்கு வக்காலத்து வாங்கிப் பேசினார். மாதவனுக்குப்பின்னால் மறைந்து நின்றுகொண்டிருந்த என்னைப் பிடித்திழுத்து, என் தலையைக் கோதிய வண்ணம், ''ஏதுக்காகடா ஓடி வந்தே?'' என்று அப்பா கேட்டார்.

நானும் 'ஹோ'வென்று அழுதே விட்டேன். ''பரீட்சையில் தேறாததுக்காக....''

அப்பா சட்டென்று என்னைப் பார்த்தார். ''எவண்டா சொன்னான், நீ தேறல்லேன்னு?''


''குண்டுச் சுப்பன்தாம்ப்பா சாயந்தரம் நான் கோவிலுக்குப் போயிருந்தப்போ சொன்னான், ஹெட்மாஸ்டர் சொன்னதாக!''

''நீதான் உன் வகுப்பிலேயே முதலாவதாகத் தேறியிருக்கே! எவனோ ஒரு மண்டுச் சுப்பன் சொன்னான்னு ஊரை விட்டு ஓடுகிறதா?''


மாதவனுடைய வீட்டில் தடபுடலான விருந்து சாப்பிட்டுவிட்டு அன்று மாலை வத்தலக்குண்டுக்கு வந்துசேர்ந்தோம். என்னைக் கட்டிக் கொண்டு அம்மா அழுத அழுகை..

''ஆகாசத்தைப் பார்த்து எங்கேடா போயிண்டிருக்கே?'' என்ற குரல் என் சிந்தனையைச் சிதற அடித்தது. திடுக்கிட்டு நிமிர்ந்தேன். நான் யாரைத் தேடிப் புறப்பட்டேனோ, அதே ராமன்தான் எதிரில் நின்றுகொண்டிருந்தான். அந்த ரோசக்காரனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து வீட்டில் பத்திரமாகச் சேர்த்தேன்.

# கிரிக்கெட் ஆட்டம்





# கிரிக்கெட் ஆட்டம்

பின்புறத்தில் வெட்டி ஒட்டும் மூவர்ணப் படம் ஒன்று வெளியாகியிருக்கிறது. அதை இங்கே குறிப்பிட்டுள்ளபடி வெட்டி ஒட்டினால் பந்து அடிக்கும் பாட்ஸ்மேன் ஒருவனும் விக்கெட் கீப்பரும் ஜோராக விளையாடுவார்கள். வேடிக்கையாக இருக்கும்.

வலப்புறத்திலிருக்கும் படங்களைத் தனித் தனியாகக் கத்தரித்துக் கொள்ளுங்கள். 1 என்ற படத்தை இடது புறமுள்ள விக்கெட் கீப்பரின் வயிற்றிலுள்ள வட்டத்தின் வழியாகச் செருகிவிடுங்கள். 2 என்று குறிப்பிட்ட பாகத்தை, பாட்ஸ் மேனின் கழுத்தில் காணும் வட்டத்தின் வழியே செருகுங்கள்.

இப்போது 3 என்ற பாகத்தின் நடுவிலுள்ள வட்டமிட்ட பகுதிகளைத் துவாரம் செய்யவேண்டும். அந்தப் பாகத்தின் ஓரத்திலுள்ள பச்சையான வட்டத்தை இடது பக்கத்திலுள்ள ஸ்டம்புகளுக்கு நடுவேயுள்ள வட்டத்தில் படத்தின் பின்புறமிருந்து பொருத்துங்கள்.

1 என்ற பாகத்தின் அடியிலுள்ள அட்டையை 3 என்ற பாகத்தின் கீழ்ப்புறமாகவுள்ள துவாரத்தின் வழியே செருகி, படத்தின் கீழே கோடிட்ட பாகத்தின் வழியாக மேலே கொண்டு வாருங்கள். 2 என்ற பாகத்தின் மேலுள்ள நீண்ட அட்டையை 3 என்ற பாகத்தின் மேலுள்ள துவாரத்தில் செருகிவிடுங்கள்.

2 என்ற பாகத்தின் நீளம் குறைவாக இருந்தால் அதனுடன் சற்று நீளமான ஓர் அட்டையை ஒட்டிவிடலாம்.



# சந்திரகிரிக் கோட்டை

"ஜனு"

முதல் படியில் அமலன் காலை வைத்ததுமே பதுமை மீண்டும் ஒரு கையைக் குறுக்கே விண்ணென நீட்டித் தடுத்தது.

அது என்ன சாதாரணப் பதுமையின் கையைப்போலவா இருந்தது? இரண்டுமே இரும்புக் கரங்கள்! வாளை எடுத்து வெட்டினால் வெட்ட முடியாத கரங்கள். வாள்தான் இரு துண்டுகளாக ஒடிந்து விழும். அத்தனை உறுதியாக இருந்தன. அந்தக் கைகளுக்குக் கீழாகவோ மேலாகவோ தாண்டிச் செல்லலாமா என்று அமலன் யோசித்தான். அந்த ஒரு வழிதான் இருந்தது. அப்படியே குனிந்து இரண்டாவது படிக்கட்டில் 'கைவைத்து ஊன்றியதுமே, மேலே நீண்டு மறித்த அந்த இரும்புக்கரம் அவன் முதுகின்மீது அழுந்தத் தொடங்கியது. இன்னும் சற்றுப் போனால், அவனைப் படிக்கட்டோடு படிக்கட்டாக வைத்து அழுத்தி, அப்படி இப்படி நகர விடாமல் செய்திருக்கும். நல்ல சமயத்தில் ஏதோ ஒரு யுக்தி தோன்றவே, இரண்டாவது படிக்கட்டில் ஊன்றியிருந்த கையை எடுத்துவிட்டான். இரும்புக் கையும் மேலே போய்விட்டது; பிழைத்தான்!

கீழே நுழைந்து போகமுடியாது என்று கண்டதும் மேல்புறமாகக் கைகளைத் தாண்டிக் குதிக்க எண்ணினான். பதுமை உள்ள பக்கமாய் ஏறமுடியாது. எதிர்ப்புறத்திலுள்ள கட்டைப்பிடியைப் பிடித்துக்கொண்டுதான் அவன் ஏற வேண்டியிருந்தது. அந்தக் கட்டைப்பிடியின் முனை, தட்டுப்போல் வட்டமாக இருந்தது. அமலன் அதைப் பிடித்து ஏறிக் காலை வைத்ததுமே அந்தத் தட்டு அவனைப் புரட்டிக் கீழே உருட்டித் தள்ளிவிட்டது.

அமலனுக்குக் கீழே விழுந்ததில் சரியான அடிபட்டுவிட்டது. இருந்தாலும் அவன் சமாளித்துக்கொண்டு ரோசமுடன் எழுந்தான்: 'என்னைப் போன்ற ஒரு மனிதன் தானே இந்த அற்புதச் சூட்சுமங்களைக் கண்டுபிடித்து நிர்மாணித்திருக்கிறான்? அவன் மூளையில்


உதித்த இந்தக் கற்பனையை நம்மால் ஊகிக்கவே முடியாமலா போய்விடும்?' என்றவாறு அவன் சிந்தனை சென்றது.

யோசித்து யோசித்து அவன் மூளையே குழம்பிவிட்டது.

மாலைப்போது ஆனதும் கங்குல் கவிந்து வந்தது. மாடத்தின் வழியே தாரகைகள் தெரிந்தன. இன்னும் சரியாக நாலே ஜாமங்கள் தான் இருந்தன. அதாவது முப்பது நாழிகை! கண்ணாடி மாளிகையை விட்டு, எட்டுக்கோண மஹலுக்குள் நுழைவதற்கே அரைநாள் ஆகிவிட்டது. இன்னும் இந்த இடத்தை விட்டு வெளியேறும் வழி எப்படி என்று புலப்பட வில்லை. அதற்குள் அஸ்தமனமே ஆகிவிட்டது. இன்னும் பொழுது விடிவதற்குள் போய்ச் சேர வேண்டிய இடங்கள் எத்தனையோ? திண்டாட்டங்கள் எத்தனை பட வேண்டி யிருக்குமோ? இவ்வளவையும் தாண்டிக் கடந்து சென்றால், முறியிருக்கும் பெட்டகம் எவ்விதம் இருக்குமோ? இத்தனை விந்தைகளுக்கும் சிகரம் வைத்தது போலத்தான் அது இருக்கும் என்பதில் என்ன சந்தேகம்?


அமலன் பார்த்தான். மிரண்டால் காரியம் ஒன்றும் நடக்காது என்று தோன்றியது. ஏதாவது ஓர் உயரத்திலிருந்து ஏழெட்டுப் படிக் கட்டுகளுக்கு மேல் போய்க் குதித்தால் என்ன என்ற எண்ணம் எழுந்தது. தைரியம் காட்டுவதில் தவறு இல்லை தான். ஆனால் குருட்டுத் தைரியம் ஆகுமா? எட்டுபடிகளுக்கு மேல் போய்க் குறிப்பதாகவே வைத்துக் கொள்வோம். அங்கும் ஏதாவது ஒரு சூட்சும விசை இருந்தால் இந்தத் தைரியத்தினுல் என்ன பலன் ஏற்பட்டு விடும்? ஆய்ந்து ஓய்ந்து பாராமல் செய்யும் எந்தக் காரியம்தான் உருப்படியாக நிறைவேறும்? 'எண்ணித் துணிக கருமம்' என்று திருவள்ளுவர் விளையாட்டாகவா சொல்லியிருக்கிறார்?

மின்னல் ஒன்று பளிச்சிட்டது; அவன் மூளையில்தான்! உடனே இடையிலே இருந்த வாளை உருவினன். எல்லாவற்றிற்கும் மூல காரணமாக இருப்பது இந்தப் பதுமைதானே? இதைச் சின்ன பின்னப் படுத்திவிட்டால்என்ன என்று தோன்றியது.



இந்த யோசனை பளிச்சிட்டதற்கு அமலன் தன்னைத்தானே மெச்சிக் கொண்டான். சரியான சமயத்துக்குச் சரியான யோசனை தோன்றியதே என்று தனக்குள் பெருமைப் பட்டுக்கொண்டான். ஒரே வெட்டில் இரண்டு துண்டுகளாக்கிவிட வேண்டும் இந்தச் சிலையை என்று வாளை ஓங்கினான். பதுமையின் மண்டையைச் சரிபார்த்துப் பிளந்தான்.

முன்பு கண்ணாடி மாளிகையில் இந்த வாள்தானே உதவியது! ஆனால் இதே வாள் இப்போது அவனை ஏமாற்றிவிட்டது! பதுமையின் மண்டையில் பட்ட வாள் பதுமையை வெட்டுவதற்குப் பதில் அதன் மண்டையில் மந்திரத்தினால் ஒட்டியதுபோல் ஒட்டிக்கொண்டு விட்டது. ஆம்; பதுமைக்கு அத்தனை சக்தி வாய்ந்த காந்தத்தினால் ஆன தலை. மேலாகப் பார்த்தால் அழகிய பெண்ணுருவில் இருந்த பதுமையின் மண்டை ஓடு அசைக்க முடியாத உறுதி வாய்ந்த இரும்பாக இருந்தது.



அப்படி அந்த வாள் ஒட்டிக் கொண்டதும் அவன் மண்டையிலேயே யாரோ அடிப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. 'ஆகா, எனக்கு எவ்வளவு இறுமாப்பு! என் அகங்காரத்தை ஒழிப்பதற்காக ஆண்டவனே படைத்த பதுமையோ இது!' என்று அலமன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

வாளை உருவி எடுக்க ஆன வரையில் முயன்றும் பலன் ஒன்றும் ஏற்படவில்லை. முக்கினான்; முனகினான். உதைத்தான்; இழுத்தான்; இழுத்து இழுத்துப்பார்த்தான். வாள் அசையவேயில்லை. மலையையே புரட்டினாலும் புரட்டிவிடலாம் போலிருந்தது. வாளைச் சிறிதும் இழுக்க முடியவில்லை.

இனி என்ன செய்வது? இருள் கனத்து விட்டது. பசியோ முளைத்து விட்டது. காரியம் ஒன்றும் ஆகவில்லை!


புத்திக் கலக்கத்திலும் ஆண்டவன் அருளைப் பிரார்த்திப்பது ஒன்றுதான் வழி என்பதை அமலன் மறக்கவில்லை. அந்த ஒரே நம்பிக்கைதான் இப்போது அவனுக்கு இருந்தது.

(தொடரும்)

# சக்குவும் நானும்



காட்டூர் கண்ணன்



சக்குவும் நானும் டில்லிக்குப் போனோம்
ஜவஹரைப் பார்த்திட வே
சொப்பன லோகத்தில் ஜோடி விமானத்தில்
சொகுசாய்ப் பறந்தோ மே.

விமானம் விட்டு இறங்கி னோம் டில்லி
வீதியில் நடந்து வந்தோம்
பிரமாத மான மாளிகை மண்டபம்
பிரமித்தே நின்று விட்டோம்.

ஜவஹர் மாமாவின் ஜாகை எங்கே யென்று
ஜல்தியில் தெரிந்து கொண்டோம்.
அரசாங்க மாளிகை என்றதுமே அங்கு
ஆவ லுடன் போ னோம்.

பாராக் கொடுக்கும் சிப்பாயைக் கண்டு
பயந்து விட்டாள் சக்கு



கூரான கத்தி துப்பாக்கிக்கும்
நான் கொஞ்சமும் அஞ்ச வில்லை.

ஜோராகப் பாராச்
சிப்பாயை நோக்கிச்
சொடுக்கிச் சலாம் செய்தேன்.
'நேரு மாமாவைப்
பார்க்கணும்' என்று
நிமிர்ந்து நின்றே கேட்டேன்.

'நேரு மாமாவைப்
பார்க்கணுமா?' என்று
பாராச் சிப்பாய் சிரித்தான்.
'ஏராள மான ஜோலி அவருக்கு
இப்போ முடியா' தென்றான்.

'சாயந்தரம் வந்தால்
பார்க்கலாமோ?' என்று
சக்குவும் மெல்லக் கேட்டாள்.
'நாளைக்கு வாங்க,
பார்க்கலா' மென்று
நயமாய்ச் சொன்னான் சிப்பாய்.

'நாளைக்கா ஹூஹூம்!
தீபாவளி பண்டிகை;
நாழியும் தங்க மாட்டோம்.
நேருமாமாக் கெங்கள்
தீபாவளி வாழ்த்தை
நினைவாய்ச் சொல்லு' என்றோம்.

'ஆகட்டும்; உங்கள்
பேரென்ன?' என்று
அந்தச் சிப்பாய் கேட்டான்.
'அனந்துவும் சக்குவும்
என்றால் போதும்
அவருக்குத் தெரியும்' என்றேன்.

படபட வென்று
வெடிகள் வெடித்திட
படுக்கையை விட்டெ ழுந்தேன்.
இடி இடி யென்று
சிரித்தாள் சக்கு,
'என்னடா தூக்கம்?' என்றாள்.





# பச்சைப் பாவாடை

ராஜி



மேல்பட்டி கிராமத்தில் வைரவம் செட்டியாரின் ஜவுளிக் கடைதான் மிகவும் பெயர் பெற்றது. விலை உயர்ந்த ஜவுளி ரகங்கள் அவர் கடையில்தான் கிடைக்கும். அதுவும் தீபாவளி சமயத்தில் கேட்கவேண்டுமா? எப்பொழுதும் கூட்டமாகவே இருந்தது. பெண்களைக் கவரும் ஜவுளித் தினுசுகளைத் தீபாவளி சமயத்தில் சென்னைப் பட்டணத்திலிருந்து செட்டியார் வாங்கி வருவது வழக்கம்.

அந்த வருஷம் ஏரோப்ளேன் பார்டர் போட்ட பச்சை ஜரிகைப் பட்டுப் பாவாடைத் துணியை நிரம்ப வாங்கி வந்திருந்தார். அந்த நூதன ரகம் செட்டியார் கடைக்கு வந்திருக்கிறது என்ற சமாசாரம் காட்டுத் தீபோல் பரவிற்று. ஆண்களும், பெண்களும் திரள் திரளாகச் செட்டியார் கடைக்கு வந்துகொண்டிருந்தனர்.

செட்டியாரின் கடையிலே வேலு என்பவன் வெகு நாட்களாக வேலை பார்த்துக்கொண்டிருந்தான். சுருங்கச் சொன்னால் ஆரம்ப முதல் தொடர்ந்து வேலை செய்து வருபவன் வேலு ஒருவன்தான். வைரவம் செட்டியாருக்கு வேலுவிடம் நம்பிக்கை உண்டு. பணப்பெட்டியைத் திறப்பதற்குக் கூட விசேஷ அதிகாரம் கொடுத்திருந்தார். கடையைத் திறப்பதும் இரவில் பூட்டுவதும் வேலுவின் அலுவல்களே.

ஆனால் சம்பள விஷயத்தில் மாத்திரம் வேலுவுக்குச் சலுகையே காட்டவில்லை. அதற்குக் காரணம் அவருக்குத் தாராள மனப்பான்மை கிடையாததுதான். ஆனால் அவருடைய மனைவி வள்ளி ஆச்சி, செட்டியாருக்கு நேர் மாறாக இருந்தாள். நம்பகமாக இருப்பவர்களிடம் மிகவும் பிரியம் கொண்டு தன்னாலான உதவிகளைச் செய்வாள். அவளுக்குக் குழந்தைகளே இல்லாததனால் மற்றக் குழந்தைகளிடம் மிகவும் அன்புடன் இருப்பாள்.

வேலு தீபாவளிக்கு முதல் நாள் கடைக்குப் புறப்படுவதற்குத் தயாராக இருந்தான். அப்பொ பொழுது பதினைந்து வயதுள்ள அவனுடைய ஒரே மகள் மரகதம், 'நயினா, நயினா தீபாவளிக்கு, எனக்கு என்ன துணி வாங்கப் போறே? நாளைக்குத் தீபாவளி ஆச்சே!'' என்று கேட்டாள்.

பண நெருக்கடியினால் அவளுக் குப் பாவாடையோ, சட்டையோ வாங்குவதாக வேலுவுக்கு எண் ணம் இல்லை. அதனால் என்ன பதில் சொல்லுவது என்று தெரி யாமல், சற்று நிதானத்துடன், ''மரகதம்! உனக்கு என்ன வேண் டுமோ சொல். வாங்கி வருகிறேன்'' என்றான்.

''நயினா! உன்னால் முடிந்தால் உன் கடையிலேயே இருக்கும் ஏரோப்ளேன் பார்டர் போட்ட பச்சைப் பாவாடை வாங்கித் தா. என் தோழிகளெல்லாம் அதான் வாங்கியிருக்கா. ரொம்ப நன்னா இருக்கு'' என்று மெதுவா வாகச் சொன்னாள் மரகதம். அவள் சொல்லிய தொனியிலிருந்து அவ் வளவு விலை உயர்ந்த சாமானைத் தன் தகப்பனாரிடமிருந்து எதிர் பார்ப்பது தவறு என்று அவளும் உணர்வது போல் தோன்றியது.

இதைக் கேட்ட வேலு என்ன பதில் சொல்லுவது என்று தெரியா மல் திருதிருவென்று விழித்தான். அந்தச் சமயத்திலே உள்ளே இருந்து வந்த வேலுவின் மனைவி பொன்னம்மாளும், ''ஆமாம், ஆமாம். அந்தப் பச்சைப் பாவாடைதான் குழந்தைக்கு வாங் கணும்'' என்றாள்.

''பொன்னம்மா! நீகூட என்ன இப்படிச் சொல்றே? எனக்குச் சம்பளமோ நாற்பத்து ஐந்து ரூபாய். கடனுக்காகப் பிடித்துக் கொள்ளுவது பதினைந்து. தீபா வளிக்கு வழக்கமாகக் கொடுக்கும் ஒரு மாத போனஸ் சம்பளத்தை யும் நீ நோய் வாய்ப்பட்டுக் கிடந்த போது வாங்கிச் செலவழித்து விட்டேன். நான் பணத்திற்கு எங்கே போவது? அந்தப் பாவாடை மிகவும் நன் றாகத்தானிருக்கிறது. அந்த ரகம் இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது. நீ விரும்பிக் கேட்பதை வாங்கிக் கொடுக்க முடி யாமல் இருக்கிறேனே'' என்று துக்கத்தினால் நெஞ்சை அடைக்கச் சொன்னான்.

மரகதம், ''அம்மா! நான் சும்மாக் கேட்டேன். பின்னாடி வாங்கிக் கொண்டால் போகிறது. நயினா! நீ கடைக்குப் போ'' என்று உள்ளே ஓடி விட்டாள். வேலுவும் பொன்னம்மாளும் கண் களைக் கசக்கிக் கொண்டார்கள்.

வேலு கடைக்குச் சென்றான். அவனுடைய கண்கள் பச்சைப் பாவாடை வைத்திருக்கும் கண் ணாடி பீரோவின் மீது சென்றது. பீரோவைத் திறந்தான். பச்சைப் பாவாடை ரகம் அங்கே இருப் பதைப் பார்த்துத் தனக்குள்ளா கவே சந்தோஷங்கொண்டான். ஆனால் முதலாளியிடம் சொல்ல அவனுக்குத் தைரியம் வரவில்லை.

அன்று தீபாவளிக்கு முதல் நாள் அல்லவா? கடையில் ஒரே கூட்டம். அந்தக் கூட்டத்திலே மரகதமும் தன் தோழிகளுடன் நின்றுகொண் டிருந்தாள். மகளைக் கண்டதும் மெல்லிய குரலில் வேலு தன் எண் ணத்தைச் செட்டியாரிடம் கூறி னான்.

இதைக் கேட்ட செட்டியார், ''உன் மகளுக்கு நல்ல ஆசைதான், அப்பா. பெரிய தனவந்தர்கள் கட் டிக் கொள்ளும் துணியின்மீது அல் லவா அவள் ஆசைப் படுகிறாள்!'' என்றார். வேலு செட்டியாரைப் பார்த்துச் சற்றுக் கோபமாகவே, ''தனவந்தராக இருந்தால் என்ன,

ஏழைகளாக இருந்தால் என்ன? ஆசைப்படுவதில் கூடவா உயர்வு, தாழ்வு?'' என்று கேட்டான். வேலு, செட்டியார் முன்னிலையில் கோபமாகப் பேசியது அதுவே முதல் தடவை. தன் மனசு சற்றுச் சாந்தமடைவதற்காகப் பக்கத்திலிருக்கும் டீக்கடைக்குச் சென்றான்.

ஜவுளிக் கடையிலிருந்து வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்த மரகதத்தை ஒரு வயோதிக ஸ்திரீ அவள் வீட்டு வாசலிலிருந்து கூப்பிட்டாள். மரகதம் தன் தோழிகளுடன் அந்த வீட்டை நோக்கிச் சென்றாள்.

மரகதம் அந்த ஸ்திரீயிடம் நெருங்கியவுடன், ''உன் பெயர் மரகதம்தானே? நீ வேலுவின் மகள்தானே?'' என்று கேட்டாள்.

''ஆமாம், ஆமாம். நீங்கள்?''

''என்னைத் தெரியவில்லையா? சிறு வயதாக இருக்கும் பொழுது வேலு உன்னை இங்கு அழைத்து வருவது வழக்கம். நீ இப்பொழுது பெரியவளாக உயர்ந்து விட்டாய். உங்க அம்மாவிடம் வள்ளி ஆச்சி விசாரித்ததாகச் சொல். தெரிந்து கொள்ளுவாள்'' என்று சொன்னாள்.

வள்ளி ஆச்சி என்ற பெயரைக் கேட்டவுடன் மரகதம் சற்றுப் பயந்தவளாய், ''அப்படீன்னா... ஜவுளிக் கடை செட்டியாரின்...''

''ஆமாம். ஆமாம், நான் செட்டியாரின் மனைவிதான். வந்து இப்படி இந்தத் திண்ணையில் உட்காரு'' என்று சொல்லவே மரகதம் தன் தோழிகளுடன் உட்கார்ந்தாள்.

''மரகதம்! நீ எந்த வகுப்பிலே படிக்கிறே, அம்மா?''

''எஸ்.எஸ். எல். ஸி. யில் படிக்கிறேன்.''

''மரகதம்! நீ மிகவும் கெட்டிக்காரி. சிறு வயதிலேயே நீ புத்திசாலியாகத்தான் இருப்பாய். உன் மீது வேலுவும் உன் தாயும் உயிரையே வைத்திருப்பார்களே!''

மரகதம் சும்மா இருந்தாள்.

''மரகதம்! உன் அப்பா மிகவும் நாணயமுள்ளவன். அவனிடம் பொய், திருட்டு என்பதே கிடையாது. செட்டியாருக்கு அவன் மீதுதான் நம்பிக்கை. தீபாவளிக்கு உனக்கு என்ன துணி வாங்கி இருக்கிறார்கள்?'' என்று சொல்லிக்கொண்டே மரகதம் அணிந்திருந்த பல ஒட்டுப் போட்ட பாவாடையையும் சட்டையையும் உற்றுக் கவனித்தாள்.

''இந்தத் தீபாவளிக்கு எனக்கு ஒன்றும் வாங்கவில்லை.''

''ஏன், அம்மா! செட்டியார் கூடத் தீபாவளியை முன்னிட்டு வழக்கம்போல் ஒருமாதப் போனஸ் கொடுக்கப் போவதாகச் சொன்னாரே?''

''கிடைக்காது, ஆச்சி! என் தாய் சீக்காகக் கிடந்தபோது போனஸ் பணத்தை வாங்கிச் செலவழித்து விட்டார்.''

''ஆமாம். எனக்கும் ஞாபகம் வருகிறது, போகட்டும். உனக்கு என்ன வேண்டுமோ சொல், நான் வாங்கித் தருகிறேன்.''

உடனே மரகதத்தின் தோழிகள், ''ஆச்சி! அவளுக்குப் பிடித்தது உங்கள் கடையிலே வந்திருக்கும் ஏரோப்ளேன் பார்டர் போட்ட பச்சைப் பட்டுப்பாவாடைதான்'' என்றனர்.

''ஆச்சி, ஆச்சி! வேண்டாம். எங்க நயினா வாங்கித் தருவார்'' என்று சொல்லி வெகு வேகமாகத் தன் வீட்டை நோக்கிச் சென்றாள்.

டீக்கடைக்குச் சென்று சற்று நேரம் கழித்துத் திரும்பிய வேலு நேராகப் பச்சைப் பாவாடை வைத்திருந்த கண்ணாடி பீரோவின் அருகில் சென்றான். இப்படியும் அப்படியுமாகப் பார்த்தான். அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

இங்கே பச்சைப் பாவாடைத் துணி மிச்சம் இருந்ததே, அதை இப்பொழுது காணவில்லையே இங்கு?'' என்று இன்னொரு வேலையாளைக் கேட்டான் வேலு.

''அதுவா? செட்டியாருக்குத் தெரிந்தவர் ஒருவர் வாங்கிவிட்டார். அந்தப் பொட்டலத்தை இரவு கடை பூட்டுவதற்குள் வந்து எடுத்துப் போவதாகச் சொல்லி இருக்கிறார்.''

அதைக் கேட்ட வேலுவுக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. மூன்று கஜத்தை எப்படியாவது தனது அருமை மகள் மரகதத்திற்கு வாங்கிப் போகலாம் என்று நினைத்தான். அவனது மனக்கோட்டையில் இடி விழுந்தது. அந்தப் பொட்டலத்தை வாங்க வரும் ஆசாமி இரவு ஒன்பதுமணி ஆகியும் வரவேயில்லை. ''வேலு! சற்று நேரங்கழித்துக் கடையை பூட்டிக் கொண்டு வீட்டுக்கு போ'' என்று உத்தரவு போட்டு விட்டு, செட்டியார் வீட்டுக்குப் போனார்.

இரவு மணி பத்தாகி விட்டது. கடையிலுள்ள கூட்டமும் குறைந்தது. மற்றச் சிப்பந்திகளும் ஒவ்வொருவராக வீட்டுக்குச் சென்றார்கள். கடைசியில் வேலு மேஜையின் மீது வைத்திருந்த பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தான். வேலை ஆள் சொன்னது போல அதில் மூன்று கஜம் பச்சைப் பாவாடையும் அத்துடன் ரசீதும் இருந்தன. மறுபடியும் முன்போலவே கட்டிவைத்தான். தனது மனச் சாட்சிக்கு விரோதமாகப் பொட்டலத்தை எடுத்துத் தன் மடியில் கட்டிக் கொண்டான். கதவுகளை அவசர அவசரமாகப் பூட்டிவிட்டுத் தன் வீடு அடைந்தான்.

அப்பொழுது மணி இரவு பன்னிரண்டு இருக்கும். மரகதம் தூங்கிக்கொண்டிருந்தாள். பொன்னம்மாள் வாசல்பக்கம் வேலுவை எதிர்பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். தான் கொண்டுவந்திருந்த பொட்டலத்தை அவளிடம்கொடுத்தான். பொன்னம்மாள் மெதுவாக அதைப் பிரித்துப் பார்த்தாள்.

''மரகதம் கேட்ட பச்சை பாவாடையா இது?''?



"பொன்னம்மா! சத்தம் போடாதே. நான் செட்டியாருக்குத் தெரியாமல் இந்தப் பொட்டலத்தை எடுத்து வந்துவிட்டேன்."

"ஐயோ! நீங்களா செட்டியாருக்குத் துரோகம் செய்யத் துணிந்தீர்கள்? வேண்டாம், வேண்டாம்" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே பொன்னம்மாள் சொன்னாள்.

"பொன்னம்மா! நீ பேசாமல் இரு. மரகதம் நாளைக் காலை இதைக் கட்டிக்கொள்ளாவிட்டால் என் மனது உடைந்துவிடும். அப்பொழுது கேட்டால் பணம் கட்டிவிடுகிறேன். ஒன்றும் என்னுடன் பேசாதே. கடைச் சாவியையும் இந்தப் பொட்டலத்தையும் அரிசிப் பானைக்குள்ளே வைத்துவிட்டுப் படுத்துக்கொள்" என்றான் வேலு.

அரைகுறையாகத் தூங்கிக் கொண்டிருந்த மரகதம், தன் பெற்றோருடைய சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

விடியற்காலம் மணி மூன்று இருக்கும். வேலுவை ஒரு போலீஸ்காரன் மிரட்டி அழைத்துப் போவதுபோல ஒரு கனவு. அப்போது "வேலு வேலு" என்று யாரோ கூப்பிட்டார்கள்.

"யாரது?" என்று விழித்தெழுந்தான் வேலு.

வேலுவுக்குப் பயத்தினால் பேச முடியவில்லை.

"பொன்னம்மா! நான் கொண்டு வந்த பொட்டலம் ஒருவேளை செட்டியாருக்குத் தெரிந்துவிட்டதோ? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என் திருட்டு வெளிப்பட்டுவிட்டால் என்ன செய்வது? எனது வாழ்க்கையே போய்விடுமே" என்று மெதுவாகப் புலம்பினான். ஆனது ஆய்விட்டது, பொன்னம்மாள் என்ன செய்வாள்? வேலுவின் புலம்பலைக் கேட்டபடியே பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

வேலு எட்டிப் பார்த்தான். கூர்ந்து கவனித்தான். வேலு நினைத்தபடியே செட்டியார்தான் காரில் வந்திருந்தார்.

மெதுவாகச் செட்டியாரின் காரை நெருங்கினான். செட்டியாரின் பக்கத்தில் வள்ளி ஆச்சியும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். ஒன்றும் பேசமுடியாமல் கை கூப்பி வணங்கி நின்றுகொண்டிருந்தான்.

"என்ன, வேலு! உனக்கு என் மீது கோபமா? உன் பெண் மரகதத்திற்குப் பச்சைப் பாவாடை கொடுக்கவில்லை என்றுதானே உனக்குக் கோபம்? எல்லா விஷயத்தையும் ஆச்சி சொன்னாள். மரகதம் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தாளாம். ஆச்சி எனக்குக்கூடத் தெரியாமல் மூன்றுகஜம் பச்சைப் பாவாடைத் துணி வாங்கி, கடையில் என் மேஜைமீது வைத்துவிட்டு வர ஏற்பாடு செய்திருக்கிறாள். இப்பொழுதுதான் நான் விஷயத்தை அறிந்து கடையிலிருந்து அவசர அவசரமாக அதை எடுத்துவந்தேன். நீ வரும் அவசரத்தில் விளக்கைக் கூட அணைக்காமல் வந்துவிட்டாய் போலிருக்கிறது. நான் பிறகு அணைத்துவிட்டு வந்தேன்" என்றார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த மரகதம் வெகு வேகமாகக் காரிடம் சென்று செட்டியாருக்கும், ஆச்சிக்கும் கைகூப்பி வணங்கினாள். "இந்தா, மரகதம்! இந்தக் கூடையை எடுத்துக்கொள். இதில் உனக்குப் பச்சைப் பாவாடை, அம்மாவுக்குப் புடைவை, உன் நயினாவுக்கு வேஷ்டி, சட்டை எல்லாம் வைத்திருக்கிறேன். தீபாவளியைச் சந்தோஷமாகக் கொண்டாடுங்கள், நான் வருகிறேன்" என்றாள் வள்ளி ஆச்சி. உடனே செட்டியார், "வேலு! நீ இவ்வளவு நாள் உண்மையாக உழைத்ததற்காக, நீ கொடுக்க வேண்டிய கடன் பாக்கியையும்



தள்ளி விட்டேன். இன்று முதல் உனக்குச் சம்பளமும் பதினைந்து ரூபாய் உயர்த்தியிருக்கிறேன். நான் வருகிறேன்'' என்றார். கார் நகர்ந்தது.

வேலுவுக்கும் அவன் மனைவிக்கும் கனவா அல்லது நினைவா என்று புலப்படவில்லை. கூடையைத் திறந்தான் வேலு. என்ன ஆச்சரியம்! அவன் எந்தப் பொட்டலத்தைத் திருடிக் கொண்டு வந்தானோ அதே பொட்டலம் கூடையிலிருந்தது. உடனே வேலுவும் பொன்னியும் ஓடோடியும் சென்று பானையில் வைக்கப்பட்டிருந்த பொட்டலம் இருக்கிறதா என்று பார்த்தார்கள். அங்கு அதைக் காணவில்லை. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துத் திகைத்தபடியே நின்றார்கள்.

''நயினா! அம்மா! என்ன பார்க்கிறீர்கள்? அப்பா நேற்று இரவு கொண்டுவந்த பொட்டலத்தையா? அது எப்படி இங்கு இருக்கும்? இரவு நீங்கள் பேசிக்கொண்டிருந்ததை நானும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். உங்களுக்குத் தெரியாமல் நான் பானையிலிருந்து அந்தப் பொட்டலத்தையும் சாவியையும் எடுத்துப்போய் செட்டியார் கடைக்குச் சென்று, வைத்துவிட்டு சாவியையும் கொடுத்துவிட்டு வந்தேன். கதவைத் தாளிட்டு வரும்பொழுது தவறுதலாக நான் தான் விளக்கை அணைக்காமல் வந்துவிட்டேன்'' என்று மரகதம் சொன்னாள். ''மரகதம்! மரகதம்! நீ உண்மையாகவே 'மரகதம்'தான். என்மீது களங்கம் வராமல் அல்லவா என்னைக் காப்பாற்றினாய்? நான் இன்று முதல் ஒரு புனித மனிதன்!'' என்று மரகதத்தை வேலு தழுவிக்கொண்டான். தீபாவளியை மிகுந்த குதுகலத்துடன் அவர்கள் கொண்டாடினார்கள்



# அதிரூபனை மணந்த அரசகுமாரி

சங்கரசுப்பு

மறுநாள் உதயத்தில் திருமணம். தன் ஒரே குமாரியின் திருமண வைபவத்திற்குப் பலபல நாடுகளிலிருந்தும் வந்து குவிந்திருந்த பரிசுப் பொருள்களைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தார் விஜயபுரி மன்னன் மகேந்திர பூபாலன்.

''அதோ, அந்த முத்துப் பல்லக்கு யார் அனுப்பியுள்ள பரிசு?''

''சிங்களத்து அரசன் சிம்மநாதனின் பரிசு.''

''அந்தத் தந்தச் சிங்காதனம்?''

''சாகேதபுரி மன்னன் சங்கிருதவர்மன் பரிசில்.''

''அந்த......''

அரசர், கேள்வி கேட்குமுன்பு, ''மகராஜ்!'' என்ற குரல் வந்தது.

''தங்களை ராணியார் அழைக்கிருர்கள்'' என்ருள் தாதி.

அரசர் அரசியின் அந்தப்புரத்தை நெருங்கும்போது அழும் குரல் கேட்டுத் திடுக்கிட்டார்.

ராணி மிருதுபாஷிணி தன் ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் குப்புறப் படுத்து விசித்துக்கொண்டிருந்தாள். அவள் அருகே ராஜகுமாரி சுபாஷிணி கையில் ஒரு கிளியுடன் வீற்றிருந்தாள்.

''மிருது, ஏன் அழுகே?''

அவள் அழுகை வலுத்தது.

''சுபாஷிணி, என்ன ஆயிற்று உன் தாய்க்கு?''

ராஜகுமாரி சுபாஷிணியும் பதில் எதுவும் கூருது இருந்தாள்.

அரசர் பொறுமை இழந்து ராணியின் தோளைப் பிடித்துக் குலுக்கி, ''உனக்கு ஏன் அழுகை? நாளை உன் ஏகபுதல்விக்குத் திருமணம். ஊரே குதூகலத்தில் ஆழ்ந்திருக்கிறது. நீ ஏன் துக்கிக்கிருய்?'' என்று கேட்டார்.

ராணி மெதுவாக எழுந்து உட்கார்ந்தார்கள். அருகில் நின்ற சேடிகளைப் பார்த்து, ''போங்களடி, ஏன் சிலையாய் நிற்கிறீர்கள்? கூப்பிட்டால் வாருங்கள், போங்கள்'' என்ருள் கோபத்தோடு.

தாதிகள் விழுந்தடித்துக் கொண்டு ஓடினுர்கள்.

''அரசே, நம் சுபாஷிணி திடீரென்று ஊமையாகிவிட்டாள். பேசவே மாட்டேன் என்கிருள்.''

''என்ன....?'' அரசர் பாம்பை மிதித்தவர்போல் திடுக்கிட்டார்.

சுபாஷிணி பதில் பகராது தன் பக்கத்தில் தயாராயிருந்த சுவடியில், ''என்னுல் இன்று காலையிலிருந்து பேசமுடியவில்லை. காரணம் தெரியவில்லை. முயன்று முயன்று பார்க்கிறேன். நாக்கை அசைக்கவே முடியவில்லை'' என்று எழுத்தாணியினுல் எழுதினுள்.

அரசர் அந்த வாசகத்தைப் படித்ததும் ''ஹா!'' என்று அதிர்ச்சியுடன் பக்கத்திலிருந்த ஆசனத்தில் சாய்ந்துவிட்டார்.

கண்களை மூடியவுடன் கடந்த கால நினைவுகள் அடுத்தடுத்து அவர் மனத்தில் அலையலையாய் வந்தன.

ஆதி நாளில், அதாவது அரசன் மகேந்திர பூபாலன் தன் தந்தைக்குப் பின் பட்டம் பெற்று, சிங்காதனம் ஏறிச் சிறப்பாக ஆண்ட போது, அவருக்கு விவாகமாகி வெகு நாட்கள் சென்றும் சந்தான பாக்கியம் ஏற்படவில்லை.

இதனால் கவலைப்பட்டுக்கொண்டிருந்த காலையில் அவன் ராஜ்யத்திற்கு ஒரு தவசி விஜயம் செய்தார். மன்னன் அவரை வரவேற்று மரியாதை செய்தான். முற்றும் துறந்த முனி, தமக்குச் செய்த மரியாதையில் மிகத் திருப்தி கொண்டு, அரசனின் மகப்பேறு இல்லாத குறைக்குத் தம்மால் பரிகாரம் செய்ய முடியும் என்று கூறினார். தாம் செய்யும் பரிகாரத்திற்குப் பிரதியுபகாரமாக அரசர் ஒரு வேண்டுகோளை ஏற்று நடத்த வேண்டும் என்றும் சொன்னார்.

அரசனோ எதற்கும் சித்தமாகவே இருந்தான்.

முனிவர் தம் கமண்டலத்திலிருந்து நீரைக் கையில் வார்த்து ஏதோ மந்திரத்தை ஜபித்தார். உடனே அவர் உள்ளங்கையில் ஓர் எலுமிச்சம் பழம் ஜொலித்தது.

"மன்ன! உன் மனைவிக்கு இதன் சாற்றைக் கொடு. அவள் கூடிய சீக்கிரம் கருவுறுவாள். உனக்கு நல்ல சுந்தரவடிவமுள்ள ஒரு புண்ய குமாரி பிறப்பாள்" என்று கூறி, அரசனிடம் கனியைக் கொடுத்தார்.

"அந்தப் புண்ய குமாரி மண வயது அடைந்தவுடன், அவளை ஒரு முனிவரின் குமாரனுக்கே விவாகம் செய்து கொடு. இதுதான் நீ செய்யவேண்டியது."

"ரிஷி குமாரனுக்கா?"

"ஆமாம், வாக்குத் தவறக் கூடாது. ஒருகால் தவறினால் உன் மகள் ஊமையாகி விடுவாள்" என்று கூறிவிட்டு முனிவர் விடை பெற்றுக் கொண்டார்.

முனிவர் மொழிந்தபடியே எலுமிச்சைக் கனியைத் தன் மனைவியிடம் கொடுத்து அதன் சாற்றைப் பிழிந்து அருந்தச் சொன்னான் மகேந்திர பூபாலன்.

நாளடைவில் ஞானியின் வாக்குப் படியே ராணி கருவுற்று ஓர் அழகிய பெண் மகவை ஈன்றாள்.

அந்த மகள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மணப் பருவம் எய்தினாள். அவள்தான் சுபாஷிணி. மணப் பருவம் எய்திவிட்ட சுபாஷிணிக்குத் தகுந்த ஒரு ராஜகுமாரனைத் தேர்ந்தெடுத்து, திருமணம் நிகழ்த்த ஏற்பாடுகள் நடந்தன. மறுநாள் உதயத்தில் விவாகம் நடக்கவிருந்தது. ஆனால் எல்லாம் கூடிவரும் சமயத்தில் சுபாஷிணி ஊமையாகி விட்டாள். கொடுத்த வாக்கைத்தான் அரசன் மறந்துவிட்டானே!

* * *

காலங்கடந்த சம்பவங்களை நினைத்துக் கொண்டிருந்த அரசர் கண்களைத் திறந்தார்.

உடனே அரசியிடம், "கண்ணே, கண் கலங்காதே. நாம் முன்னம் முனிவருக்குக் கொடுத்த வாக்கைக் காலப் போக்கில் மறந்து போனோம். அதன் விளைவே இது" என்றார்.

"ஆனால் இதற்குப் பரிகாரம்?"

வேந்தனுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

மகளுக்கு விஷயத்தைத் தெரிவிப்பது நலமெனக் கருதி அவள் பிறப்பைப் பற்றியும் முனிவருக்குக் கொடுத்த வாக்கையும் விஸ்தாரமாக எழுதிக் காட்டினார்.

அந்த வரலாற்றைக் கேட்டதும், "நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள், அப்பா. சரி, இப்பொழுதாவது சிறிதும் தாமதிக்காதீர்கள்.



என்னைப் பேசவைப்பவருக்கே என்னை மணஞ் செய்து கொடுத்துவிடுவதாகத் தண்டோராப் போடச் சொல்லுங்கள். அப்போது என் மூங்கைத் தன்மையைப் போக்க யாரேனும் முனி குமாரன் வரலாம். வந்து என்னைப் பேச வைத்தால் நான் அவரையே மணந்து கொள்கிறேன்'' என்று ஓலையில் வரைந்தாள் சுபாஷிணி.

தன் மகளின் சாதுரியத்தைக் கண்டு சற்றுத் துக்கம் நீங்கி மனசு தேறினார் மன்னன்,


ராஜகுமாரி ஊமையாகி விட்டாள் என்பதைக் கேள்வியுற்றதும் அவளை மணக்க விருந்த ராஜகுமாரன், நேரே அவளைச் சந்தித்தான். ராஜகுமாரியைப் பேசவைக்க முயன்றான். முடியவில்லை. அவள் அழகில் சொக்கிப் போன அரசகுமாரன், ''ஊமையாயிருந்தாலும் பாதகமில்லை, அவளையே விவாகம் செய்து செய்து கொள்கிறேன்'' என்று சொன்னான்.

மகேந்திரபூபாலன் விஷயத்தைச் சாங்கோபாங்கமாய் எடுத்துச் சொல்லி, ''அவளைப் பேச வைப்பவனே அவன் கணவன்'' என்று கூறினார். ராஜகுமாரன் கோபித்துக் கொண்டு சென்றுவிட்டான்.

தண்டோரா போடச் செய்த சில தினங்களில் பலநாட்டு அரசகுமாரர்கள் வந்து ராஜகுமாரி சுபாஷிணியின் மூங்கைத்தனத்தைப் போக்க முயற்சித்தார்கள். ஆனால் அவர்கள் முயற்சி திருவினையாகவில்லை.

நாட்கள் நகர்ந்து ஆறு மாதங்கள் அகன்றன.

''காலம் கடந்து வருகிறதே. அரசியைப் பேசவைக்க ஒருவராலும் இயலவில்லையே'' என்று இருந்த மகேந்திர பூபாலனின் சிந்தையைக்



கலைக்க வெகுவேமாக ஒரு சேவகன் ஓடோடி வந்தான்.

''மகராஜ்! தங்களைக் காண ஆசாரவாயிலில் ஓர் இளைஞன் காத்திருக்கிறான். பார்த்தால் முனிகுமாரன் போலிருக்கிறான்.''

''ஆகா! அப்படியா? உடனே அவரை ஆசார மண்டபத்திற்கு அழைத்து வா'' என்று வேந்தன் கூறினான்.

''வணக்கம், மகாராஜன்!''

அகன்ற நெற்றியோடும், நல்ல தேஜஸுடன் கூடிய முகத்தோடும் திடகாத்திரமான சரீரத்தோடும் தன் முன் நின்ற இளைஞனை நோக்கி மகேந்திரபூபாலன், ''நீர் யார்?'' என்று வினவினார்.

''நான் சாகேதபுரி வாசி. என்னை அதிரூபன் என்று அழைப்பார்கள். தங்கள் மகள் ஊமையாகிவிட்டாள் என்று கேள்வியுற்றேன். அதைப் போக்கவே நான் வந்திருக்கிறேன்.''

''அப்படியா? சந்தோஷம்.'' என்றான் அரசன்.

அரசே, தங்களிடம் ஒரு விண்ணப்பம். நான் ராஜகுமாரியுடன் பேசும்பொழுது எவரும் அருகில் இருக்கக்கூடாது.''

''ஆகட்டும்.''

அங்கே வந்த சுயாஷிணி அவனுக்கு மரியாதை செய்தாள்.

மகேந்திரபூபாலன் அவர்களைத் தனிமையில் விட்டுச் சென்றார்.

மகேந்திரபூபாலன் சென்றதும், ''நீங்கள் உட்காரலாம்'' என்று சுபாஷிணியைப் பார்த்துக் கூறிவிட்டு அங்கு கீழே கத்திக்கொண்டிருந்த கிளியை எடுத்து அவளிடம் கொடுத்தான். ராஜகுமாரி கிளியைப் பெற்றுக்கொண்டு ஆசனத்தில் உட்கார்ந்தாள். அவளுக்கு எதிராக அதிரூபனும் ஓர் ஆசனத்தில் அமர்ந்து, ராஜகுமார்யைச் சற்றும் லட்சியம் செய்யாமல் அவள் கையிலிருந்த கிளியைப் பார்த்து, ''கிளியே, கிளியே, உன்னிடம் ஒரு வழக்கு கூறப் போகிறேன். கேட்கிறாயா? கேட்டுவிட்டு உன்னுடைய தீர்ப்பைச் சொல்லு'' என்றான்.

கிளி பதில் சொல்லாமல் ராஜகுமாரியின் தோள்மீது குந்தியிருந்தது. அதிரூபன் வழக்கைக் கூறவாரம்பித்தான்.

சில நாட்களுக்கு முன்பு நான் என் இரு நண்பர்களுடன் ஒரு வேற்றூருக்குப் போனேன். நண்பருள் ஒருவன் கை சேர்ந்த சிற்பி; மற்றொருவன் சிறந்த சேணியன்.

அவர்கள் ஒரு பெரிய காட்டு வழியாகச் செல்ல நேரிட்டது. பாதி காட்டைக் கடப்பதற்குள் இருட்டிவிட்டது. கொடிய காட்டு மிருகங்கள் வசிக்கக்கூடிய வனாந்தரம் அது. ஆகையால் இரவை ஒரு பெரிய ஆலமரத்தினடியில் கழித்துவிட்டு விடிந்ததும் பிரயாணம் செய்யத் திட்டமிட்டோம்.

அங்கே கிடந்த சுள்ளிகளைப் பொறுக்கித் தீ வளர்த்து, ஆகாரத்தை உண்டு, களைப்பாற எண்ணினோம். ஒருவர் மாறி ஒருவர் விழித்திருந்து காவல் இருக்க ஏற்பாடு செய்தோம். நானும் சேணியனும் முதலில் தூங்குவது, சிற்பி விழித்துக் காவல் காப்பது என்று தீர்மானித்தோம்.

நாங்கள் தூங்கிக்கொண்டிருந்த பொழுது சிற்பி பொழுது போகாமல் அங்கே கிடந்த ஒரு மரத் துண்டை எடுத்துப் பிரமிக்கும்படி ஒரு பெண் உருவத்தை உருவாக்கினான், குறிப்பிட்ட நேரம்வரை விழித்துவிட்ட சிற்பி, சேணியனை எழுப்பினான். அவன் சிற்பி செதுக்கியிருந்த உருவத்தைப் பார்த்துத் திகைப்புடன், "இதை நீயா செதுக்கினாய்?" என்று கேட்டான்.

"ஆமாம், பொழுது போகவில்லை. இக்காரிகைக்கு நல்ல ஆடை நெய்து போடு" என்று சொல்லிவிட்டு அவன் தூங்கப்போனான்.

சேணியன் தன் திறமையை வெளிப்படுத்தும் தினுசில் அந்தப் பெண் உருவத்திற்கு ஏற்ற ஆடை செய்து அணிவித்தான்.

நான் என் கெடு வந்ததும் எழுந்தேன். பெண் உருவத்தைப் பார்த்தேன். பிரமாதமாய் இருந்தன, உருவமும் உடுப்பும்.

நான் அந்தப் பெண் உருவத்திற்கு உயிர் கொடுத்தால் எப்படி இருக்கும் என்று யோசித்து, மந்திரம் ஜயித்து உயிர் மூட்டினேன். பிறகு அவளுக்குப் பேசவும் கற்றுக் கொடுத்தேன்.

பொழுது விடிந்தவுடன் அந்தப் பெண் உயிருடன் பேசுவதைப் பார்த்த சிற்பி, "பெண்ணை நானே படைத்தேன். அவள் எனக்குச் சொந்தம்" என்றான்.

"அவளை, ஆடை கொடுத்து முழுப் பெண்ணாக்கியது நான்தான். அதனால் அவள் எனக்குத்தான் சொந்தம்" என்றான் சேணியன்.

"நீங்கள் என்ன செய்தால் என்ன? அவளுக்கு உயிர் கொடுத்துப் பேசக் கற்றுக் கொடுத்தது நான்தான். ஆகையால் அவள் எனக்குத்தான் சொந்தம்" என்றேன் நான்.

கிளியே, உன் தீர்ப்பு என்ன? அந்தப் பெண் யாருக்குச் சொந்தம்?

* * *

கிளி பதில் எதுவும் பேசாது சிறகடித்து அறையினுள் பறந்தது.

திடீரென்று சுபாஷிணி, "உங்களுக்குத்தான் சொந்தம். நீங்கள்தான் உயிர் கொடுத்துப் பேச வைத்தீர்கள். ஆகையால் உங்களுக்குத்தான் சொந்தம்" என்றாள்.

"உன் தீர்ப்புச் சரியானதே. உன்னை, நான் பேச வைத்தேன். நீ எனக்குத்தான் சொந்தம்" என்றான் அதிரூபன்.

மகேந்திரபூபாலன் தன் குமாரி சுபாஷிணி பேசிவிட்டாள் என்பதை அறிந்ததும் எல்லையில்லாத மகிழ்ச்சி அடைந்தார். பிறகு ஒரு சுபதினத்தில் மகேந்திர பூபாலன் முனிகுமாரன் அதிரூபனுக்குச் சுபாஷிணியைக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்.

# அகத்தியர் சாபம்

## ச. கு. கணபதி ஐயர்

மருந்துச் செடிகளை மூலிகைகள் என்பார்கள். மூலிகைகள் ஆதிகாலத்தில் பேசி வந்தன. அவைகளின் பேச்சு பறவை, விலங்கு, மனிதன் உள்ளிட்ட எல்லா ஜீவராசிகளுக்கும் விளங்கின. பிராணிகளைப் பார்க்கும் போதெல்லாம் தான் இன்ன இன்ன நோய்க்கு மருந்தாகும் என்று ஒவ்வொரு மூலிகையும் சொல்லிற்று. இரும்பு, பித்தளை முதலிய மட்டமான உலோகங்களைப் பொன்னாக்கும் மூலிகை ஸ்வர்ண வேதி எனப்படும். இறந்தவர்களை எழுப்பும் மூலிகை சஞ்சீவி. வெட்டுண்ட உறுப்புக்களை ஒன்று சேர்க்கும் மூலிகை ஸ்பரிசவேதி.

மனிதன் சுயநலம் உள்ளவன்; சோம்பேறி. அதனால் அவன் மேலே சொன்ன மூன்று மூலிகைகளையும் தீய வழிகளில் உபயோகிக்கத் தலைப்பட்டான். அதைக் கண்டு நான்முகக் கடவுள் மூலிகைகளின் பேச்சு, வைத்தியரைத் தவிர வேறு மனிதருக்கு அர்த்தமாகக் கூடாது, காதில் விழக்கூடாது என்று சாபம் கொடுத்தார்.

உலகத்தில் முதல் வைத்தியராக இருந்தவர் அகஸ்திய முனிவர். வைத்தியர்கள்கூடச் சுயநலமும் முதலிய இழிந்த குணங்களால் மூலிகைகளைத் தீய வழிகளில் பயன்படுத்தக் கூடும் என்று அவர் எண்ணினார். அதனால் அவர் ஊமைகளுக்கே வைத்தியம் சொல்லிக் கொடுக்கத் தீர்மானித்தார். ஊமைகளுக்குக் காதும் கேளாது. அதனால் ஊமை வைத்தியரின்






7

காதில் மூலிகைகளின் பேச்சு விழாது. இன்ன மூலிகை இன்ன குணத்தையுடையது என்று புத்தகங்களில் எழுதி வைத்தால், எல்லோருக்கும் விஷயம் தெரிந்து விடும் என்று பல மூலிகைகளுக்கு அகஸ்தியர் புதிய பெயர்களைக் கொடுத்தார்.

கூர்மையான புத்தியுடைய ஒரு சிறுவன் ஊமை போல் நடித்து அகஸ்தியருக்கு முதற் சீடனுனன். ஒரு நாள் குருவும் சீடனுமாகக் காட்டு வழியே சென்றுகொண் டிருந்தார்கள். வழியில் சோற்றுக் கற்ருழை ஒன்று இருந்தது, அகஸ்தியர் சந்தோஷமாக இருப்பதை அறிந்து கொண்டு கற்ருழை அவரை நோக்கி, ''முனிபுங்கவரே! எனக்கு நீங்கள் 'குமரி' என்று பெயர் வைத்திருக்கிறீர்களே! குமரிக்குள்ள அங்க அடையாளங்களில் எதுவும் எனக்கு இல்லையே!'' என்று விளையாட்டாகச் சொல்லியது. இந்த ஹாஸ்ய மொழியைக் கேட்டதும் அருகே இருந்த சீடன் தன்னை மறந்து சிரித்துவிட்டான். அவன் சிரித்த காரணத்தை அகஸ்தியர் தெரிந்துகொண்டார்.

''இவன் ஊமை அல்ல. மூலிகைகளின் பேச்சு இவனுக்குத் தெரிகிறது; காதும் கேட்கிறது. இனி இவனை உயிருடன் வைக்கலாகாது. சமயம் பார்த்துக் கொன்று விடுவோம்'' என்று துணிந்தார் அகஸ்தியர்.


தான் சிரித்தது தவறு என்றும் அது தன் குருவுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது என்றும் சூட்சுமமுள்ள சிறுவன் தெரிந்துகொண்டான். ''நாம் குருவின் கோபத்துக்கு ஆளாகிவிட்டோம்; ஓடிப் போனுல் அவர் சபித்துவிடுவார். கூட இருந்தால் கொன்றுவிடுவார். இதற்கு என்ன செய்வது?'' என்று அவன் சிந்தித்தான். அன்று முதல் அவன் கவலை கொண்டான்.

மற்ருெரு நாள் மூலிகைகளைக் கொண்டுவர அகஸ்தியரும் சீடனும் புறப்பட்டார்கள். ஜன நடமாட்டம் இல்லாத மலைப் பிரதேசத்தின் வழியாக நடந்தார்கள். வழியில் ஓர் இடைச் சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டிருந்ததைச் சீடன் கண்டான். தனக்குத் தாகமெடுக்கிறதென்று அவன் அகஸ்தியரிடம் விடை பெற்றுக்கொண்டு சிறிது நேரம் பிரிந்து சென்ருன்.

சென்றவன் மறைவான இடத்துக்குப் போய் இரண்டு மூலிகைகளைப் பறித்தான். இன்ன மூலிகை என்று பிறர் அறிந்து கொள்ளாதபடி அவன் அவைகளைக் கசக்கினுன். பிறகு அவன் மாடு மேய்த்துக்கொண் டிருந்த சிறுவனிடம் சென்று, ''அப்பா! அதோ அங்கே இருக்கிருரே, அவர் ஒரு கால் என்னைக் கொல்லக் கூடும். கொன்று விட்டு அவர் சென்று விடுவார். நீ என் பிணத்தருகில் வந்து வெட்டுண்ட அங்கங்களை ஒன்று சேர்த்துப் பிறகு இந்தத் தழையினுல் தடவு. நான் உயிர் பெற்று எழுந்து வந்து விடுவேன். எழுந்து வந்தால் உனக்கு வேண்டிய பொன் அளிக்கிறேன்'' என்று சொல்லி அந்தத் தழையை அவன் கையில் கொடுத்துவிட்டுத் திரும்பினுன். சிறுவனுக்கு இறந்தவன் பிழைக்கக் கூடிய வித்தையைச் சோதித்து அறிய ஆவல் இருந்தது. அதனுல் அவன் அகஸ்தியர் போக்கைக் கவனித்து வந்தான்.

சீடன் மூலிகைச் செடிகளைப் பறிக்கும் போது அகஸ்தியர் வெட்டரிவாளினுல் அவனைக் கொன்று போட்டார். தலையும் முண்டமும் தனியே பிரிந்து விழுந்தன.

அகஸ்திய முனிவர் மறைந்த பிறகு மாடு மேய்க்கும் சிறுவன்,




சீடன் வெட்டுண்டு கிடந்த இடத்தைத் தேடிச் சென்ருன். தலையையும் முண்டத்தையும் சரியாகச் சேர்த்து வைத்து, பச்சிலையால் தடவினன். சீடன் அதனல் உயிர் பெற்று எழுந்தான். எழுந்ததும் அவன் அருகே இருந்த வெட்டரிவாளை ஒரு பச்சிலையின் மகிமையால் பொன்னக்கி அதை மாட்டுக்காரச் சிறுவனிடம் கொடுத்தான்.

மாடு மேய்ப்பவன் வீடு திரும்பியதும் காட்டில் தான் கண்ட அதிசயச் செயல்களைப் பலரிடம் கூறிக் கூறி மகிழ்ந்தான்.

அவன் ஊருக்குள் பரப்பிய வதந்தி அகஸ்திய முனிவருக்கு எட்டவே அவர் சினம் கொண்டார். அவன் யார் என்று ஞான திருஷ்டியினல் கண்டு கொண்டார். சிவகணங்களுள் ஒருவன் அவன் என்பதை உணர்ந்ததும் அவனை வரும்படி நினைத்தார். பெரியோர் நினைப்பது அவர் நினைவின்படி சாத்தியமாகும் அல்லவா! அதனல் சீடன் எப்படியோ அகஸ்தியரிடம் வந்து வணங்கினன்.

சான்ருேர் சினம் நீர்கிழிய எய்த வடுப்போல் மாறியது. சீடனை அகஸ்தியர் மன்னித்து எழும்படி கட்டளையிட்டார். ''நீ குருவுக்கு ஆற்றிய வஞ்சனைக்காக முருகப் பெருமானைப் பிரதிஷ்டை செய். அதனல் உன் பாவம் தீரும் என்று சொல்லி அனுப்பினர்.

பிறகு அவர், ''மூலிகைகளின் பேச்சு வைத்தியர்களுக்கும் தெரியாமல் போகட்டும்'' என்று சாபம் கொடுத்தார். மேலும், ''அரிய மூலிகைகள் மனிதர் கண்ணுக்குப் படாத இடங்களில் விருத்தியாகக் கடவது'' என்று ஒரு சாபத்தை மூலிகைகளுக்குக் கொடுத்தார். அந்தச் சீடன் பிற்காலத்தில் போகர் என்று பெயர் பெற்ருன். போகர் சிறந்த சித்தர். பழனி மலையின் மேலுள்ள தண்டாயுதபாணியை அவரே பிரதிஷ்டை செய்தவர்,

# தாய்க்கு ஒரு பிள்ளை

## தங்கமணி

"அடிமை ஆட்சி...!"

"அடியோடு ஒழிக!..."

"பிரெஞ்சுக்காரனே...!"

"வெளியேறு!..,"

—சிறியவர்களும் பெரியவர்களும் சேர்ந்த ஒரு கூட்டம், புதுச்சேரி டூப்ளெக்ஸ் வீதி வழியே சென்றது. ஒரே ஆவேசம்!

மருந்துக் கடையில் ஜுர மாத்திரை வாங்கிக்கொண்டு நின்ற சரோஜா திரும்பிப் பார்த்தாள்.

ஆறுமுகம் முஷ்டிகளை இறுக்கி வானத்தை நோக்கி வீசியவாறு, கண்கள் சிவந்து பிதுங்க, ஆவேசமாகக் கும்பலின் முன்னணியில் கர்ஜித்துக் கொண்டே வந்தான். ஆறுமுகத்தைக் கண்ட சரோஜா அவனை மனமார நிந்தித்தாள்; உள்ளங் கொதிக்கச் சபித்தாள்; கடையை விட்டு இறங்கிவந்தாள்.

"ஏ...ஆறுமுகம்! ஏ... ஆறுமுகம்! டேய்ய்!.." அவளது கூச்சல், பரந்த கடலில் ஊற்றிய ஒரு கரண்டிப் பாலாய்ப் போயிற்று!

"புரட்சி...!"

"ஓங்குக!..."

முன்னேறிக்கொண் டிருந்தான், ஆறுமுகம்.

உயிர், உடல், உடைமை யாவையும் மறந்து, உரிமை ஒன்றையே எல்லாமாகக் கொண்ட ஆறுமுகத்துக்கு, அவள் அழைப்பு உறைக்குமா?,

கும்பல், சரோஜாவைக் கடந்து போய்விட்டது.

வீதியின் கடைசி முனையில் துப்பாக்கிகளோடும் குண்டாந் தடிகளோடும் பிரெஞ்சு அரசாங்



கத்தின் ராணுவத் துருப்புகள் காத்திருந்தன...

* * *

இரவு ஏழு மணி.

''சரோஜா...''

''அத்தே...'' அடுப்பில் காய்ச்சிக் கொண்டிருந்த கஷாயத்தை அப்படியே போட்டு விட்டு ஆறுமுகத்தின் அம்மா சூடாமணியம்மாளின் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள் சரோஜா.

ஒரு விநாடி அமைதி.

முக்கி, முனகிக் கொண்டுமிகுந்த சிரமத்துடன் மெல்லப் புரண்டு, ''ஆறுமுகம் வந்தானா?..'' என்று ஈனக் குரலில் கேட்டாள்.

''இல்லே...அத்தே, அவன் வரவில்லே!...''

சில வருஷங்களுக்கு முன் - புதுவைத் துறைமுகத்தில் கப்பலில் வேலை செய்யும்போது, எப்படியோ காயம்பட்டு இறந்து விட்டார், ஆறுமுகத்தின் அப்பா. அப்போது அவன் ரொம்பச் சின்னப் பையன். அதிலிருந்து, அவனை அவன் அம்மா சூடாமணியம்மாள் செல்லமாக வளர்த்து வந்தாள். அவனைக் காப்பாற்றுவதற்காக அவள் பட்ட கஷ்டங்கள் சொல்லி முடியாது.



சில வாரங்களுக்கு முன்...

வீடு கட்டும் தொழிலாளிகளுடன் சேர்ந்து, சிற்றாள் வேலை செய்த போது, சுவர் இடிந்து சரிந்து, சூடாமணியம்மாளின் தலையில் விழுந்தது. பலத்த காயங்களுடன் வீட்டோடு படுத்து விட்டாள் சூடாமணியம்மாள்.

இப்போது உழைத்துச் சம்பாதிக்க உடல் நலமில்லே. இந்தப் பரிதாபகரமான அவல நிலைமையை உணர்ந்த எதிர் வீட்டில் வசிக்கும் சரோஜாவின் அப்பா, மிகவும் மனம் இரங்கினார். எட்டாவது படித்துக்கொண் டிருந்த ஆறுமுகத்தைத் தமக்குத் தெரிந்த ஒரு கம்பெனியில் மாதம் முப்பது ரூபாய் வேலையில் சேர்த்துவைத்தார்.

ஆனால் ஆறுமுகம் பிரெஞ்சு அடிமை ஆட்சியை ஒழித்துக் கட்டப் போராட்டத்தில் சேர்ந்து அலேந்தான்.

''அம்மா..''

அம்மாவும் சரோஜாவும் சட்டென்று திரும்பிப் பார்த்தார்கள். மெல்ல மெல்ல நொண்டிக் கொண்டே உள்ளே வந்து அம்மாவின் அருகில் அமர்ந்தான், ஆறுமுகம்.

''ஆறுமுகம்! வந்துவிட்டாயா? வாடா கண்ணு!'' என்று ஆவலும் ஆசையுமாக ஆறுமுகத்தின் தோளை வருட ஆரம்பித்தாள் சூடாமணியம்மாள்.

சரோஜாவுக்கு ஆறுமுகத்தின் மீது ஆத்திரம்! கோபம்! அண்ணனைப் போன்ற ஆருயிர்த் தோழனுயிருந்தாலும் அவன்மீது அளவு கடந்த வெறுப்புத்தான் ஏற்பட்டது அவளுக்கு.

"அரசாங்கத்து அடிமை நாய்கள் அடித்து விட்டார்களம்மா..." குண்டாந்தடி அடி விழுந்த முட்டிக் காலைப் பிடித்து விட்டுக்கொண்டான் ஆறுமுகம்.

சூடாமணியம்மாளின் பெற்ற வயிறு கலங்கியது.

"அம்மா, அழாதேம்மா... நாட்டின் உரிமைக்காகப் போராடுகிறுன், உன் மகன்...சந்தோஷப் படாமல்...மூக்கைச் சிந்துகிருயே அம்மா, நல்ல அம்மாதான்!..."

சரோஜா ஆறுமுகத்தை ஏறிட்டு வெறித்துப் பார்த்தாள். ரோஜாப்பூ இதழ்கள் போன்ற மிருதுவான உதடுகள் லேசாகப் படபடத்தன.

"என்னடா சொன்னே...? நாட்டின் உரிமைக்காகப் போராடுகிருயா? ஹூம்!...இங்கே வீட்டின் உரிமைக்காக யார் போராடுவது? உங்க, அப்பாவா...தாத்தாவா...?" என்ருள்.

"கண்ணே, சரோஜா! அவனே உணர்ந்து கொள்ளாத கடமையைப்பற்றி நீ சொல்லித்தானு உணர்ந்து கொள்ளப் போகிருன்!..." என்ருள் அவன் தாய்.

ஆறுமுகத்திற்கு நெஞ்சம் பதைத்தது.

"கோழைத்தனமும் மடமையும் குடியிருக்கும் இந்த வீட்டிற்கே போக வேண்டாம் என்று அப்போதே நினைத்தேன்!"

ஆறுமுகம் ஆக்ரோஷமாக மேலும் பேசுவதற்குள் இடைமறித்து, "அடப் புர்ர்..-ர்ரட்சிக்கார அண்ணுவே! காது ஜவ்வு கிழிந்து விடும்போலிருக்கிறது பேச்சு.

"தேசத் தாய்க்கும் பெற்ற தாய்க்கும் உள்ள நிலைமையை உணராத முட்டாள் நீ! 'அன்னையும் தந்தையும் முன்னறி தெய்வம்' என்று மனப்பாடம் பண்ணிய உன் நெஞ்சிலே...." என்ருள் சரோஜா.

"நாயே! யாரிடத்திலே அப்படிப் பேசுகிருய்? மடப் பெண்ணே!" கோபாவேசத்தோடு அவளை ஒரு குத்து விட்டான் ஆறுமுகம்.



''ஒரு தாயைப் பற்றி எனக்குக் கவலையில்லை; கோடிக் கணக்கான மக்களை வாழ்விக்கும் தேசத் தாய்க்காகவே என் உயிரைச் சமர்ப்பிப்பேன்!...'' என்று குடிசையை விட்டு வேகமாக வெளியே மறைந்தான் ஆறுமுகம்.



நள்ளிரவு.

தலைமைப் போலீஸ் ஸ்டேஷனில் சப்-இன்ஸ்பெக்டர், தம்முடைய அறைக்குள், தூங்கிக்கொண்டிருந்தார். எதிர்ப்புறமாகச் சற்றுத் தூரத்திலிருந்த கம்பி அறைகளுக்குள்ளே சுதந்திர வீரர் சிலர் அடி உதை பட்ட வேதனையில் தம்மை மறந்து குறட்டை விட்டுக் கொண்டிருந்தனர். ஆனால்.... அவர்களுள் ஒருவனான ஆறுமுகம் மட்டும் கம்பிகளின் மீது சாய்ந்தபடியே, ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்தான்.

''சார்...தந்தி!...''

சப் இன்ஸ்பெக்டர் விழித்துக்கொண்டு தந்தியைப் படித்தார்.

''ஒன் நாட் த்ரீ...ஒன் நாட் த்ரீ..,!'' சபாபதி ஓடோடி வந்தான். ''உங்க அம்மாவுக்கு ரொம்ப ஆபத்தா யிருக்கிறதாம்'' என்று சொல்லித் தந்தியைச் சபாபதியிடம் கொடுத்தார். ''ஆ... ஐயோ!..'' என்று அலறிய சபாபதி, ''ஸார்! நான் போய் வருகிறேன், ஸார்..'' என்று பரிதாபமாகக் கத்தினான்.

''போகிறாயா!...'' என்று வாயைப் பிளந்தார் அதிகாரி.

''ஆமாம், ஸார்... அம்மாவுக்கு ஆபத்து என்றால் போகாமல் இருக்க முடியுமா, சார்...?''

''சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய உன் கடமையை நினைத்துப் பேசு!'' என்று விறைப்பாகச் சொன்னார் சப்-இன்ஸ்பெக்டர்.

''சட்டத்தைக் காப்பாற்ற என்னைப் போன்ற எத்தனையோ ஜவான்கள் உண்டு; ஆனால், என் தாயைக் காப்பாற்ற என்னைத் தவிர வேறு யாரும் கிடையாது, சார்! என் தாய்க்கு நான் ஒரே பிள்ளை, சார்!...'' என்று உணர்ச்சியுடன் சொன்னான், சபாபதி.

''சார், பத்து மாதம் சுமந்து பெற்று, சீராட்டித் தாலாட்டிக் கொஞ்சிக் குலாவி வளர்த்து என்னை ஆளாக்கிய என் அருமை அம்மாவைப் பார்க்க, சட்டம் பெரி

தல்ல. கட்டளையை மீறிப் போகிறேன். சுட்டாலும் நெஞ்சைக் காட்டத் தயார்! போய் வருகிறேன்..'' துப்பாக்கியை ஸ்டேஷனில் ஒப்படைத்து விட்டு, ரெயிலடியைப் பார்த்துப் பாய்ந்தோடினான், சபாபதி.

கம்பி அறைக்குள்ளுக்குள் அடைபட்டுக் கிடந்த ஆறுமுகம், சபாபதியின் இந்தத் துணிச்சலைக் கண்டதும்-தாய் பக்தி நிரம்பிய அவனது உணர்ச்சிகரமான பேச்சைக் கேட்டதும் விழித்தான்; தத்தளித்தான். 'என் தாயைக் காப்பாற்ற என்னைத் தவிர வேறு யாரும் கிடையாது, சார்!' என்ற வார்த்தைகள் அவன் மூளையைப் பிய்த்துப் பிடுங்கின. அத்துடன், 'இங்கே வீட்டின் உரிமைக்காக யார் போராடுவது? உங்க அப்பாவா, தாத்தாவா??' என்று கூறிய சரோஜாவின் நெருப்புக் கேள்வி அவன் உள்ளத்தைத் தீய்த்தது! பிறகு என்ன நினைத்தானோ? ''சார்!'' என்று ஓங்கிக் கத்தினான்.

உடனே கம்பி அறை வாசலிலே வந்து நின்றான், பாராக்கார ஜவான்.

''லெட்ரின் போகவேண்டும், சார்'' என்று தயவாகக் கேட்டான் ஆறுமுகம்.

போலீஸ்காரன் ஒரு விநாடி தயங்கிய பின், சாவியை எடுத்து, பூட்டைத் திறந்தான். ஆறுமுகத்தை மட்டும் வெளியே அழைத்துக்கொண்டு, கதவைச் சாத்திவிட்டான்,

ஸ்டேஷனுக்குப் பின்புறமுள்ள கக்கூஸ் அறைக்குள் ஆறுமுகம் நுழைந்து, கதவைச் சாத்திக் கொண்டான். போலீஸ்காரன், வாசலில் துப்பாக்கியோடு நின்றான்.

கொஞ்ச நேரம் ஆயிற்று.

''டேய், உள்ளே என்னடா பண்ணுகிறாய்?''

பதில் இல்லை,

''டேய்'' என்று உறுமிக்கொண்டு கதவை ஓங்கி உதைத்தான், போலீஸ்காரன். கதவு 'டபக்' கென்று திறந்து கொண்டது, உள்ளே ஆளைக் காணோம்!

அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். மறு கணம் கூரையில்லாத சுவரின் கண்ணாடிச் செதில்களில் சிக்கிக் கொண்டிருந்த ஆறுமுகத்தின் சிவப்புக் கைக்குட்டை காற்றில் பட படத்துக்கொண்டு, 'பயல் தப்பித்துவிட்டான் போய்.. ய்!' என்று கொக்கரித்தது!

'பெப்பே..பே' என்று விழித்தான், அந்த ஏமாளிப் பிரெஞ்சு ஜவான்.

* * *

''கொக்கரக்கோ .. கோ..'' என்று கோழி கூவியது.

''அம்ம்..ம்மா!'' என்று கதறிக் கொண்டே குடிசைக்குள் நுழையப் போன ஆறுமுகத்தை, ''நில்! நன்றி கெட்டவனே! நில்லடா..நில்!'' என்று வழிமறித்தாள் சரோஜா.

''சரோஜா, நான் செய்ததெல்லாம் குற்றந்தான்! என்னை மன்னித்துக்கொள். 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை' என்பதை நன்கு புரிந்துகொண்டேன். தேசத் தாயைக் காப்பாற்ற என்னைப் போல் பல கோடிப் பேர்கள் உண்டு; ஆனால்...'' என்று புலம்பினான் ஆறுமுகம்.

''பாவி! தேசத் தாய், தேசத் தாய் என்று சொல்லிக்கொண்டு, ஆசைத் தாயை மறந்த படுபாவி! செத்த பிறகு புத்தி வந்து என்னடா பிரயோஜனம்!'' என்று கண்ணீரைப் பொழிந்தாள் சரோஜா.



# வாணசூரர் வலை

நீலம்

வாசுப்பிள்ளையின் வாணப் பட்டறையில் இரவு பகலாக வேலை நடந்துகொண் டிருந்தது.

போன வருஷம் நல்ல பேர் வாங்கியிருந்த வாணவெடிகளையெல்லாம் தூக்கி அடிக்கக் கூடிய புது ரகங்கள் தயாராயின. இதை அவருடைய மகன் முத்து தன் நண்பர்களிடம் முன்னதாகவே அறிவித்துவிட்டான்.

படிப்பில் தரம் குறைந்த பிள்ளை முத்து. ஆகவே அவனை அவன் வகுப்பிலுள்ள பையன்களெல்லாம், 'மொத்து' என்று கூப்பிடுவது வழக்கம். இப்போது அவர்களெல்லாம் முத்துவிடம் அலாதியாக அன்பு காட்டினார்கள்.

உபாத்தியாயரின் மகன் 'உண்டிக் கலயம்' மணி, பெரிய சந்தர்ப்பவாதி. எந்தப் பக்கமும் சாய்வான்.

தீபாவளி நெருங்க நெருங்க முத்து - உண்டிக் கலயத்தின் உறவும் நெருங்கிக் கொண்டு வந்தது. 'உண்டிக் கலயத்தின் உள்ளம் குளிர்ந்தால் உபாத்தியாயரின் உச்சி குளிரும்; பரீட்சையில் குண்டு அடிக்காமல் சுலபமாகத் தேறி விடலாம்' என்று முத்து நினைத்தான். 'புதுரக வாண வெடிகளைச் சுட்டுத் தள்ளலாம்' என்பது உண்டிக் கலயத்தின் மனக் கோட்டை! இது பல மாணவர்களுக்குச் சகிக்கவில்லை.

''வாத்தியாருக்குக் குல்லாய் போட 'மொத்து' வாண வலையை வீசியிருக்கான் டோய்!'' என்று 'பிரமாத' சுந்தரம் கூச்சலிட்டான்.

''இதைப் புஸ்வாணம் ஆக்கியே தீரவேண்டும்டா!'' என்று சாம்பு சபதம் செய்தான்.

''தீபாவளிச் சமயத்தில் அப்புறம் மலிவாக வாங்க முடியாதுடா'' என்று கவலையைக் கிளப்பி விட்டான் கைலாசம்!

"அது என்னடா பிரமாதம்?" என்றான் பிரமாத சுந்தரம். எதுவும் அவனுக்குப் 'பிரமாத'ந்தான்.

"இதற்கெல்லாம் ஏண்டா வீண் கலாட்டா? நாமெல்லாருமே சேர்ந்து வெங்காய வெடிகளைக் கட்டி, ஜமாய்த்து விட்டாலாச்சு!" என்று சொன்னான் பாஸ்கரன்.

இந்த மாதிரி அன்று மொட்டைக் கோபுரவாசலில் கூடியிருந்த மாணவ வாணர்களின் கூட்டத்தில் ஆளுக்கொரு யோசனை சொன்னார்கள். கடைசியில் பாஸ்கரன் யோசனை அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் வெங்காய வெடிகளைத் தயாரிப்பது எப்படி?

எப்படியாவது முத்துவைத் தாஜா செய்ய, அவனிடம் தூது போவதாகப் பாஸ்கரன் முன்வந்தான். வாண தூதன் முத்துவிடம் விஷயத்தைத் தெரிந்துகொண்டு வரும்வரையில் எல்லாரும் மொட்டைக் கோபுர வாசலில் காத்துக்கொண்டிருப்பதாக முடிவு ஆயிற்று.

மொட்டைக் கோபுரத்துக்கு அருகில்தான் வாணப் பட்டறை இருந்தது. அங்கே யாரும் அநுமதியில்லாமல் பிரவேசிக்கக் கூடாது என்று பெரிய நோட்டீஸ் போட்டிருந்தது. பட்டறையைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் முள் வேலி. வாண தூதன் முத்துவைத் தேடி வட்டமிட்டான். பூனைபோல்நடந்து பாஸ்கரன் வேவு பார்த்தான்.

எதிர்பார்த்தபடியே அங்கே 'உண்டிக் கலயம்', முத்துவின் தோளின் மேல் கையைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

வாசுப் பிள்ளைக்குத் தெரியாமல் பாஸ்கரன், 'நைஸா'கச் சீட்டியடித்தான். சீட்டிச் சத்தம் கேட்ட முத்துவும், உண்டிக் கலயத்தோடு வேலி ஓரம் வந்தான்.

முத்து அருகே நெருங்கியதும் அவசரம் அவசரமாகப் பாஸ்கரன் ஆரம்பித்தான்: "அடேய் முத்து! நாங்கள் மொட்டைக் கோபுரத்துக்கு மேலே யாருக்கும் தெரியாமல் வெங்காய வெடி கட்டப் போகிறோம். அதைச் செய்ய என்ன என்ன மருந்து வாங்க வேண்டும் என்பதை மட்டும் நீ எப்படியாவது விசாரித்துச் சொல்லு" என்று உருக்கமாக வேண்டிக்கொண்டான்.

"அது உங்களாலே ஆகாது, அப்பேன்! வெடிகளைக் கட்டுவது லேசில்லை. அந்த வேலைகள் ரொம்ப ரகசியமாக்கும்!" என்று முத்து பிகு செய்துகொண்டான்.

வாண தூதன் வெகுநேரம் தூது போனவன் திரும்பிவர நேரமானதைக் கண்ட கோபுர வாசல் தோழர்கள் எல்லாருமே கும்பலாகப் பட்டறைப் பக்கம் வந்து சேர்ந்தார்கள்.

வேலிக்கு வெளியே ஒரு சிறு கும்பல் முத்து அவர்களோடு வாக்குவாதம் செய்து கொண்டிருந்தான். பட்டறை வேலையில் மும்முரமாக இருந்த வாசுப் பிள்ளை இவற்றையெல்லாம் கவனித்து விட்டார். உடனே அவர் விழுந்து அடித்துக்கொண்டு வந்தார்.

வாசுப் பிள்ளை பட்டறைக்குப் பக்கத்தில் மொட்டைக் கோபுரம். அங்கே போய் இந்தக் கோபுர வஸ்துக்கள் ஏறிக்கொண்டு வெடி தயாரிப்பதில் இறங்கி, அது எங்கேயாவது வெடித்துத் தொலைந்தால் தம் பட்டறையே சாம்பலாகிவிடுமே என்று நினைத்தார் அவர்.

---

இந்தக் கட்டத்தில் அங்கு வந்து சேர்ந்தான் வாஞ்சி. "கிடக்கிறார்களடா சுண்டைக்காய்கள்! எல்லாம் நான் தெரிஞ்சிண்டு வந்தாச்சு. வேண்டிய சாமான் 'லிஸ்ட்' இந்தாங்கோ!" என்றான்.

அந்த ஜாபிதாவை ஒருவன் உரக்க வாசிக்கவே, வாசுப் பிள்ளைக்குப் பீதி அதிகரித்தது. 'விஷயம்

தெரிந்துவிட்டதால் வாணுசுரர்கள் இனிச் சும்மா இருக்க மாட்டார்கள்' என்று அவருக்கு நிச்சயப் பட்டு விட்டது.

''ஏய், வாலில்லாக் குரங்குகளா! 'மூஞ்சி' முகம் எல்லாம் வெந்து பொசுங்கிப் போய்விடும். ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தார்.

''ஓய், வாசுப் பிள்ளையாரே! ரொம்ப ஓட்டாதேயும்'' என்று 'ஏர் போர்ஸ்' மாதிரி சீறினுன் வாஞ்சி.

''ஏண்டா இவரோடு பிரமாதமா வெட்டிப் பேச்சு? அனுமார் வாலில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இலங்கையையே தீபாவளி பண்ணினுல் போச்சு'' என்ருன் 'பிரமாதம்.'

வாசுப் பிள்ளை வெலவெலத்துப் போனுர். 'பட்டறை பற்றி எரியாமல், தீபாவளி நல்லபடியாக முடிய வேண்டுமே! இல்லையானுல் நம் பட்டறையே தீபாவளியாவது நிச்சயம்' என்று முடிவுக்கு வந்தார்.

முத்துவைக் கூப்பிட்டார். உண்டிக் கலயத்தை முதலில் வீட்டுக்குத் துரத்தச் சொன்னுர். நின்ற அத்தனை வாணுசுரர்களின் பெயர்களையும் குறித்துக்கொள்ளச் சொன்னுர். இது முடிந்ததும் ''அப்பா! புண்யவான்களே! சகல விதமான வர்ண வெடிகளையும் ஒன்றுக்குப் பத்தாக, காசில்லாமலேயே நான் சப்ளை செய்து விடுகிறேன். தீபாவளிக்கு இரண்டு நாள் முன்னதாகவே இதோ இந்தக் கூப்பனைக் காட்டி விட்டு எடுத்துக்கொண்டு போங்கள்! வெங்காய வெடியை மட்டும் மொட்டைக் கோபுரத்தில் கட்ட ஆரம்பிக்காதீர்கள்!'' என்று கூபன்களை நீட்டினுர்.

தாங்கள் தேவலோகத்துக்கே போய் விட்டமாதிரி வாணுசுரர்கள் சந்தோஷப் பட்டார்கள். தீபாவளிக்கு இரண்டு தினத்துக்கு முன்னுலிருந்தே அந்தக் கிராமம் கிடுகிடாய்த்துப் போயிற்று.



# பலூன் வெடித்தது

'கனக்சபை'

"அப்பா, பலூன்..பலூன் அப்பா.." என்று கேட்டுக்கொண்டிருந்தான் குழந்தை குமார். லட்சாதிபதியான அவன் அப்பா தெருவில் விற்கும் அற்பக் காலணா பலூனையா வாங்கிக் கொடுப்பது! பலூன்காரன் பங்களா வாசலை விட்டு நகரவில்லை. 'கர் கர்' என்று சப்தம் எழுப்பிக் கொண்டே இருந்தான்.

"சமர்த்து! அழாமலிரு. நான் பெரிய பலூனா 'பாரிஸ் ஷாப்'பிலிருந்து வாங்கித் தருகிறேன். இது வேண்டாம். கண்ணோல்லியோ!" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார் அமிர்தலிங்கம். குழந்தையோ அந்தப் பலூன்தான் வேண்டுமென்று பிடிவாதமாக அழுதான்.

அந்தச் சமயத்தில் ஆயா மீனாக்ஷி



உள்ளேயிருந்து வந்தாள். அழுது கொண்டிருந்த குழந்தையைத் தூக்கி மெதுவாகச் சமாதானம் செய்யத் தொடங்கினுள்.

"மீனுக்ஷி! நேரமாச்சு. எனக்கு அவசரமா பாங்குக்குப் போகணும். குழந்தையைப் பாத்துக்கோ, ஜாக்கிரதை" என்று கூறி, காரில் சென்ருர் அமிர்தலிங்கம்.

"பலூன்தானே வேண்டும்? அழாமலிரு, கண்ணு! நான் வாங்கித் தருகிறேன்" என்று பலவித வர்ண ஜாலங்களுடன் பலூனில் இரண்டை வாங்கிக் குமாரிடம் கொடுத்தாள் மீனுக்ஷி.

பெரிதாக இருந்த அரையணு பலூன்களைக் கையிலிருந்து நழுவ விட்டுப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தான் குழந்தை குமார்.

மீனுக்ஷி பங்களாவின் வாசலிலிருந்த மரத்தடியில் பலூன்காரனிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு குழந்தையைத் தூக்கிக்கொண்டே பங்களாவினுள் நுழைந்தாள்.

* * *

அமிர்தலிங்கம் பெரிய தொழிற்சாலை வைத்திருந்தார். ஏராளமாக வரும்படி வந்துகொண்டிருந்தது. நல்ல மனிதர்.

ஆனல் வாழ்க்கையில் அவருக்கு நிம்மதியில்லை. அவர் மனைவி இறந்து மூன்று வருடங்களாகிவிட்டன. அப்பொழுது இரண்டு வயதுக் குழந்தை குமார். அவனை வளர்க்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது அவருக்கு. மறுமணம் செய்து கொள்ள அவர் மனம் இசையவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் வந்தாள் மீனுக்ஷி. தான் அநாதையென்றும், தன்னைக் காப்பாற்றவேண்டும் என்றும் கெஞ்சினுள். இரக்கம் கொண்ட அமிர்தலிங்கம், குழந்தையை வளர்க்கும் பொறுப்பை



அவளிடமே ஒப்புவித்தார். அவள் குழந்தையிடம் காட்டிய அன்பைக் கண்டு சந்தோஷித்தார். அவருக்கு நாளடைவில் அவளிடம் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டது. வீட்டு விவகாரங்களையெல்லாம் அவளிடமே விட்டுவிட்டார்.

அந்த வீட்டில் அவளுக்குத் தெரியாமல் ஒரு காரியமும் நடக்காது. குடும்பக் கவலை தம்மை விட்டு நீங்கியதும் நிம்மதியாக இருந்தார் அவர்.

* * *

ஒரு வாரமாகவே அவருக்கு உடம்பு சுகமில்லை. தொழிற்சாலைக்கும் செல்லவேயில்லை. அன்று விட்டால் அடுத்த இரண்டு நாட்களுக்கு பாங்க் கிடையாது. மறுநாள் தீபாவளிக்குப் போனஸ் கொடுக்கப் பணம் வேண்டும். ஆகவேதான் அவசரப் பட்டுக்கொண்டு புறப்பட்டுச் சென்ருர்.

கொஞ்ச நேரத்தில் பணத்துடன் திரும்பி, நேராக மாடி ரூமிற்குச் சென்று இரும்புப் பெட்டியில் தோல் பையுடன் அப்படியே வைத்துப் பூட்டினுர்.

பார்த்தார். அறைக் கதவையும் வழக்கம் போல் பூட்டி முன்னே யுள்ள ஹாலில் நுழைந்தார். அங்கேதான் குழந்தை குமார் தூங்கிக்கொண் டிருந்தான். அவன் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பலூன்கள் கட்டிலுக்கு மேலே சுற்றிக் கொண்டிருந்தன. குழந்தை சிரித்த வதனத்துடன் நிம்மதியாகத் தூங்கிக் கொண் டிருந்தான்.

அமிர்தலிங்கம் கண்களில் பலூன் கள் பட்டதும் கோபம் வந்தது அவருக்கு.

"ஏ, மீனுக்ஷி!"

"இம்மாதிரி அல்பத்தனமான சாமான்களையெல்லாம் வாங்கிக் கொடுக்காதே என்று எவ்வளவு தரம் சொல்லியிருக்கிறேன்?"

"இதெல்லாம் என்ன பழக்கம்?" என்று சொல்லிக்கொண்டே

## என்னைப் பார்!



பலூன்களை எடுத்தெறியக் கையை நீட்டினர் அமிர்தலிங்கம்.

"அதை எடுத்துப் போட்டுவிட் டால், காலையில் 'பலூன் எங்கே' என்று குழந்தை கத்துவான். எனக் காக விட்டுடுங்க" என்று கெஞ்சி னள் மீனுக்ஷி.

"மீனுக்ஷிக்குக் குழந்தையிடம் எவ்வளவு அன்பு?" என்று வியந்து தம் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டார் அவர். விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண் டாள் மீனுக்ஷி.

* * *

இரவு வந்தது. வீட்டில் எப் பொழுதுமே அவர் அதிகப் பணம் வைத்துக் கொள்வதில்லை. இன்று அவசரத்தை முன்னிட்டு வாங்கி வந்தார். இன்று ஒரு ராத்திரிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டு மென்று தீர்மானித்தார். மீனுக்ஷி யையும் கூப்பிட்டு உஷாரா யிருக் கச் சொன்னர்.

மறுபடியும் உள்ளே பெட்டி பூட்டப் பட்டிருக்கிறதா என்று பார்த்துக்கொண்டார்.

* * *

இரவு திடீரென்று சப்தம், "டபார் டபார்" என்று இரட்டை வெடி வெடிப்பது போல் கேட்டது. அமிர்தலிங்கம் திடுக்கிட்டு விழித் துக் கொண்டார். பரபரப்புடன் கத வைத் திறந்துகொண்டு ஹாலுக்கு ஓடிவந்தார். இருட்டாக இருந்த தால் மின்சார விளக்கைப் போட்டார்.

எதிரே கண்ட காட்சி....! அவருக்கே திகைப்பூட்டியது. மயக்கமே வந்துவிடும் போலிருந்தது. சந்தேகத்தினல் ஒரு முறை கண்களைக் கசக்கிவிட் டுக்கொண்டார்.

கையில் முப்பது ஆயிரம் ரூபாய் ரொக்கத்தைக்

கொண்ட தோல் பையுடன் ஹாலின் மத்தியில் பிரமித்துப் போய் வாயடைத்து நின்று கொண்டிருந்தாள் மீனுக்ஷி. அவள் கண்கள் பயத்தினுல் விரிந்து நிலை குத்திட்டு நின்றன. அவள் காலடியில் இரண்டு பலூன்களும் வெடித்துச் சுருங்கிக் கிடந்தன.

கால் மணியாயிற்று, அவர் பிரமை தீர. மீனுக்ஷியோ பேச வாயற்று, சிலைபோல் நின்ருள். அவர் மனம் உண்மையை உணரத் தொடங்கியது. "மீனுக்ஷி இவ்வளவு நாளும் குழந்தையிடம் அசாத்திய அன்பு காட்டுவதுபோல் நடித்து வந்திருக்கிருள். மொத்தமாகக் கொள்ளையடிக்கச் சமயம் கிடைத்தவுடன் உண்மைச் சொரூபத்தைக் காட்டிவிட்டாள், விஷமுள்ள நல்ல பாம்புபோல். அல்பத்தனமாக நினைத்த பலூன்கள் மீது அவள் தவறுதலாகக் கால்களை வைக்கவில்லை யானுல் பணத்தின் கதி?"

பணம் போவதைப் பற்றிக்கூடக் கவலைப்படவில்லை அவர். தீபாவளித் திருநாளைச் சந்தோஷமாகக் கொண்டாடத் தம்மையே நம்பியிருக்கும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை நினைத்துப் பார்த்தார். அவருக்குத் தாங்க இயலாத கோபம் வந்தது. போலீஸாரை வரும்படி தகவல் கொடுத்தார்.

"நீங்கள் நல்லவர். உங்கள் வேலைக்காரர்கள் அதிர்ஷ்டசாலிகள். என் புருஷனின் திட்டப்படி நான் அநாதைபோல் வந்து, தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடித்தேன். கடவுளுக்கே பொறுக்கவில்லை. என் புருஷனிடம் நான் வாங்கிக் கொடுத்த பலூன்களே எனக்கு எமனுக வந்தன. தண்டனை வேண்டியதுதான்" என்று அழுது கொண்டே கூறினுள் மீனுக்ஷி.

சிறிது நேரத்தில் போலீசாருடன் வாசல் மதிலுக்கருகில் நின்றுகொண்டிருந்த ஆளை உள்ளே தள்ளிக்கொண்டு வந்தார் சார்ஜெண்டு.

"என் வீட்டுக்காரர்தான் இவர். நான் பணப் பையுடன் வருவதை எதிர்பார்த்துத்தான் வாசலில் காத்திருந்தார்" என்று அந்த ஆளைப் பற்றிய சந்தேகத்தைத் தீர்த்து வைத்தாள் மீனுக்ஷி.

இருவரையும் விலங்கிட்டு அழைத்துச் சென்றனர் போலீசார்.

தான் அற்பமென்று நினைத்த வஸ்து எவ்வளவு மகத்தான உதவி புரிந்தது என்று வியந்தார் அமிர்தலிங்கம். தீபாவளிக்குப் பட்டாசு, மத்தாப்பு, வாணங்களுடன் நிறைய பலூன்களும் வாங்கி, குமாருக்குக் கொடுக்க வேண்டுமென்று உறுதி செய்துகொண்டார் அவர்.

## என் அழகைப் பார்!



போட்டோ: என். ராமகிருஷ்ண.

## அருமையான சம்பவம்

என் தம்பி வேணு என்னிடம் காபிக்கு இரண்டணா வாங்கிக்கொண்டு கடைவீதிக்கு விரைந்தான்.

வழியில் அங்கே ஒரு கடையில் தொகை ரூ. 10,000 என்று எழுதப்பட்டிருந்தது. கையிலுள்ள இரண்டணாவைக் கொடுத்து ஒரு கூப்பன் வாங்கினான். 1 வரிசைக்கு 4 அணா; 5 வரிசைக்கு 1 ரூபாய் என்று எழுதப்பட்டிருந்தது. வேணு, தன்னுடைய மாமா ஊருக்குப் போகும்பொழுது கொடுத்த இரண்டு ரூபாயில் ஒரு ரூபாய்க்கு 5 வரிசைகள் எழுதிப் பூர்த்திசெய்தான். பின்பு அதை ஒரு கவரில் போட்டு விலாசத்தை எழுதித் தபால்பெட்டியில் போட்டுவிட்டான். எப்பொழுது விடை வெளியாகும் என்று எதிர்பார்த்திருந்தான். இரண்டு வாரங்கள் கழிந்தன. ஒரு நாள் பேப்பரில் அந்தப் பரிசுப் போட்டியினுடைய விடை குறிப்பிட்டிருந்தது.

வேணு எழுதிய ஐந்து வரிகளில் ஒரு வரி ஒரு தப்புக்கூட இல்லாமல் சரியாக இருந்தது.

அவன் உடனே ஓடி, தன் தாயாரிடமும், எங்களிடமும் இந்த நற்செய்தியைப் பற்றிக் கூறி, சந்தோஷப்பட்டான். மறுநாள் காலை தபால்காரன் தெருக்கோடியில் வந்துகொண்டிருந்தான். தபால்காரனை வளைத்துக்கொண்டு ஏகக் கூட்டம். ''என்ன? எவ்வளவு?'' கேள்விமேல் கேள்விகள்.

தபால்காரன், ''இந்தாங்க! நீங்க போட்ட கவரில் ஸ்டாம்பு ஒட்டவில்லை. கவர் திரும்பி வந்துவிட்டது. இப்போ நீங்க நாலணா அபராதம் கொடுக்கவேண்டும்'' என்றான்.

வேணுவுக்குத்தான் எத்தனை அதிருஷ்டம்!

—பி. ஆர். வெங்கட்ராஜ்

## அம்புலுவின் ஐடியா!



# நீதிபதி சாங்கோ

பே. நா. அப்புஸ்வாமி



முன்னொரு காலத்திலே ஸ்பெயின் தேசத்தில் குவிக் ஸானு என்னும் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பழங்கால வீரர்களைப்போல் ஒரு வீர புருஷராக விளங்கவேண்டும் என்று ஆசை கொண்டார். துருப்பிடித்துக் கிடந்த மிகப்பழைய கவசத்தை எடுத்துத் துலக்கி வைத்தார். டான் குவிக்ஸாட் என்னும் பெயரைச் சூட்டிக்கொண்டார்.

அவர் கிராமத்திலே சாங்கோ பாஞ்சா என்னும் ஒருவன் வசித்து வந்தான். அவனை ஒரு மாகாணத்துக்கு அதிபதியாக்குவதாக ஆசை காட்டித் தம்மோடுகூட வரும்படி ஏற்பாடு செய்தார். அவனும் ஒப்புக்கொண்டான்.

பின்பு அவர் கவசத்தை அணிந்துகொண்டார். எலும்பும் தோலுமான ஒரு கிழட்டுக் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு சாங்கோபாஞ்சா தன் வீட்டுக் கழுதையின் மேல் பின்தொடர, வெளியே போய்க்கொண்டிருந்தார். மாலை வேளையில் தங்களுக்கு எதிரே ஒரு கோமகனும், கோமகளும், பரிவாரங்களுடன் வருவதைக் கண்டார்கள்.

அந்தக் கோமகனும் கோமகளும் இவர்களைப் பற்றி ஏற்கனவே கேட்டிருந்தார்கள். அவர்கள் குவிக்ஸாட்டை வரவேற்றனர்.

மறுநாள் காலையில் சாங்கோவுக்கு நல்ல ஆடைகளை அணிவித்து, அவனை ஒரு குதிரை மேல் ஏற்றி, பரிவாரங்கள் புடை சூழ, மேளதாளங்களுடன் பரதேரியத் தீவுக்கு அழைத்துச் சென்றார்கள், அவனுக்குப் 'பரதேரிய அதிபர்' என்னும் பட்டம் சூட்டப்பட்டது.

பின்பு, அங்கே ஒரு பெரிய மாளிகையில் ஓர் அழகான சபா மண்டபத்தின் நடுவில் அவனை வீற்றிருக்கச் செய்தார்கள்.

அப்போது ஓர் அமைச்சர் சாங்கோபாஞ்சாவை நோக்கி, ''இப்போது நீதி வழக்குகளைத் தீர்ப்பது உங்கள் முதல் வேலை'' என்றார். ''ஆகட்டும்'' என்றான் சாங்கோ.

முதலில் ஒரு குடியானவனும் ஒரு தையற்கார மேஸ்திரியும் வந்தார்கள்.

மேஸ்திரி, ''மகா கனம் அதிபதி அவர்களே, நேற்று இந்த ஆள் ஒரு துணியைக் கொண்டு வந்து, 'ஐயா! எனக்கு இந்தத் துணியில்

குல்லா தைத்துத் தரவேண்டும். துணி போதுமா?' என்ருர். நான் 'போதும்' என்றேன். அப்போது அவர், 'சரியாக அளந்து பாருங்கள். இரண்டு குல்லாய் தைக்க முடியுமா?' என்ருர். நான் அவருடைய மனப்போக்கைத் தெரிந்து கொண்டு, 'ஆகா, முடியும்' என்றேன். மறுபடியும், 'இதில் மூன்று குல்லாய் தைக்க முடியுமா?' என்ருர். அதற்கும் 'முடியும்' என்றேன். 'ஐந்து குல்லாய் வேண்டுமே' என்ருர்.

''அவர் சொல்லிய படியே நான் ஐந்து குல்லாய்களைத் தைத்தாய் விட்டது. அவரைக் கூலி கேட்டால், 'கொடுக்கமாட்டேன்' என்கிருர். 'என் துணியைத் திருப்பிக் கொடு; அல்லது, அதன் விலையைக் கொடு' என்கிருர்'' என்று தன் கைவிரலில் மாட்டியிருந்த ஐந்து சிறிய குல்லாய்களைக் காட்டினன்,

குல்லாய்களின் அளவையும், வழக்கின் விசித்திரத்தையும் கண்டு, அங்குள்ளவர்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''இந்த வழக்கில் முடிவு சொல்வதற்கு அதிக நேரம் ஆக வேண்டியதில்லை. பேராசைப்பட்ட குடியானவன்தான் துணியை இழக்கவேண்டும். தையற்காரனும் வேலை செய்த கூலியை இழக்கவேண்டும். இந்த ஐந்து குல்லாய்களையும் பரதேரிய நாட்டிலுள்ள ஏழைச் சிறுவர்களுக்குத் தானம் கொடுப்போம்'' என்ருன்.


தீர்ப்பைக் கேட்டுப் பலரும் மெச்சினுர்கள்.

அடுத்த வழக்கில் இரண்டு கிழவர்கள் சபையின் முன் வந்து நின்ருர்கள். ஒருவர் தம் கையில் ஒரு கோலை ஊன்றிக்கொண்டு வந்தார்.

கோலில்லாதவர் சாங்கோவை நோக்கி, ''அதிபதியவர்களே! சில காலத்துக்கு முன் நான் இந்தக் கிழவருக்குப் பத்துப் பொன் கடன் கொடுத்திருந்தேன். நான் கேட்கும் போது அதைத் திருப்பித் தரவேண்டும் என்றேன். சில காலம் வரையில் நான் அவரைக் கேட்கவில்லை. பிறகு பல தடவை கேட்டேன். அவர் நான் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்தாகி விட்டது என்று சொல்கிருர். அதிபதியவர்கள் நியாயம் அருள வேண்டும்'' என்ருர்.



அப்போது சாங்கோ, ''உங்களுக்கு யாராவது சாட்சியம் உண்டா?'' என்று கேட்டான். அதற்கு அந்தக் கிழவர், ''நான் கொடுத்ததற்குச் சாட்சியம் இல்லை; அவர் திருப்பிக் கொடுத்ததாகச் சொல்லுகிருரே, அதற்கும் சாட்சியம் இல்லை. ஆனல் அவர் உங்கள்



முன்னிலையில் சத்தியம் செய்தால் போதும்'' என்றார்.

அதற்கு அந்தக் கிழவர், ''ஐயா, கிழவனாரே! இந்தக் கம்பைச் சற்று வைத்துக்கொள்ளுங்கள்'' என்று தம் கையிலிருந்த கம்பை மற்றக் கிழவரின் கையில் கொடுத்தார். பிறகு, ''ஐயா, அதிபதி அவர்களே! நான் அவர் கையில் பணத்தைக் கொடுத்தது சத்தியம்'' என்றார்.

இதைக் கேட்ட முதல் கிழவர், ''அவர் என்னிடம் கொடுத்ததாக எனக்கு நினைவேயில்லை. ஆனால், அவர் சத்தியம் செய்கிறார். எனவே என்னை மன்னியுங்கள்!'' என்று சொல்லிவிட்டுக் கவலையோடு உட்கார்ந்திருந்தார்.

மற்றக் கிழவரும் அவருடைய கையிலிருந்த கம்பைத் திரும்ப வாங்கிக்கொண்டு, சபையை விட்டு வெளியே சென்றார். முதல் கிழவருடைய கவலையையும், கோளூன்றிய கிழவருடைய சந்தோஷத்தையும் சாங்கோ கண்டான். சட்டென்று கோளூன்றிய கிழவரைக் கூப்பிட்டு, ''ஐயா, பெரியவரே! அந்தக் கம்பைச் சற்று இங்கே கொடுங்கள்'' என்றான்.

சாங்கோ அதை வாங்கி, மற்றக கிழவரின் கையில் அதைக் கொடுத்து, ''ஐயா! நீர் இனிமேல் போகலாம். உமக்குப் பணம் கொடுத்தாகிவிட்டது'' என்றான்.

அதைக் கேட்ட அந்தக் கிழவர் விளங்காமல் விழித்தார்.

அதற்குச் சாங்கோ, ''அந்தக் கம்பு பத்துப் பொன் பெறுவிட்டால், என்னைப் போன்ற முட்டாள் இந்த உலகிலேயே கிடையாது'' என்று அந்தக் கம்பைப் பிளக்கச் சொன்னான். அவன் அப்படிப் பிளந்ததும் அதிலிருந்து கலகல என்று பத்துப் பொன்கள் சொரிந்தன. சபையிலுள்ளவர்கள் எல்லோரும் சாங்கோவை வியந்தனர்.

''நான் எளியவன்.. படிப்பில்லாதவன். ஆனால் தெய்வமே இவ்விரண்டு வழக்குகளிலும் நீதியைத் தெரிந்து கொள்ளும்படி எனக்கு அருள் புரிந்தது. நீங்களும் தெய்வத்தைப் போற்றி, நீதியாக வாழுங்கள்!'' என்றான் சாங்கோ.

# நல்ல வேளை

ஜாநீ

அன்று பள்ளியிலிருந்து வந்தவுடனே, "குழந்தைக்கு உடம்பு நெருப்பாகக் கொதிக்கிறது. டாக்டரிடம் எடுத்துப் போய் மருந்து வாங்கி வா" என்றாள் அண்ணி.

டாக்டர் ஆறு மணிக்குத்தான் வருவார் என்று எனக்குத் தெரியும். அங்கே போய் வீணுக்குக் காத்திருப்பானேன்? "சற்றுக் கழித்துப் போகிறேன், அண்ணி" என்றேன்.

"நான் சொன்னால் நீ எதுவும் செய்யமாட்டாய். நாலு குழந்தைகளை வைத்துக்கொண்டு நான் படும்பாடு யாருக்குத் தெரிகிறது? இன்னும் வீட்டைப் பெருக்க வேண்டும்; குழந்தைகளுக்குத் தலை வாரிப் பின்ன வேண்டும்; இரவுக்குச் சமைக்க வேண்டும். இந்த இரண்டு வயசுக் குழந்தையை எடுத்துப்போய் வருவதற்கு உனக்கு என்ன கஷ்டம்?"

"டாக்டர் வருவதற்குள் போய் விடுகிறேன், அண்ணி. அதுவரைக்கும் சற்றுப் படிக்கிறேனே?"

"ஏதாவது வேலை சொன்னால் உடனே படிக்க உட்கார்ந்து விடுவாய்" என்று படபடத்துக் கொண்டே அவள் உள்ளே போய், "இந்தப் பயல் வீட்டை விட்டுத் தொலைய வேண்டும். அப்போதுதான் . ." என்றாள்.

"அவன் எங்கே தொலைவான்? அப்பாவா, அம்மாவா, அவனுக்கு யார் இருக்கிறார்கள்? ஏன் எப்பொழுதும் அவனைக் கரிக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே வந்தார் அண்ணா. அவரே குழந்தையை டாக்டரிடம் எடுத்துக்கொண்டு போனார்.

அன்று இரவு நீண்ட நேரம் வரை அண்ணாவும் அண்ணியும் என்னைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். "எங்காவது தர்மப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுகிறேன்" என்று அவர் கடைசியில் சொன்னது என் காதில் விழுந்தது.

அப்போது எங்கள் ஊரில் ஒரு சர்க்கஸ் வந்திருந்தது.

எங்கள் வீட்டில் எல்லாரும் சர்க்கஸ் பார்க்கப் போனார்கள். என்னை யாருமே அழைத்துப் போகவில்லை. அண்ணாகூட வர வர என்னை எங்காவது வெளியில் அனுப்பிவிட்டால் நல்லது என்று நினைத்தார். இவ்வளவுக்கும் காரணம் அண்ணிதான். இதனால் என்னால் சரியாகப் படிக்கக்கூட முடியவில்லை.

ஒரு நாள் காலையில் அண்ணாவுடன் ஒரு புதிய மனிதர் வந்தார். அவர் பருமனும் உயரமுமாகவும் பயங்கரமாக இருந்தார்.

"இவர்தான் நம்முடைய மாமா. பல வருஷங்கள் வெளி நாட்டிலே இருந்து, இப்போதுதான் நம்மைப் பார்க்க வந்திருக்கிறார். உனக்காக நிறையத் துணிமணிகளும் புத்தகங்களும் வாங்கி வந்திருக்கிறார், பார்!" என்றார் அண்ணா.

துணிகளும் கதைப் புத்தகங்களும் கண்ணை மயக்கின. மாமா என்னை ஆசையோடு அழைத்து அணைத்துக்கொண்டார்.

மாமா மறுநாள் வந்து என்னை அழைத்துச் செல்வதாகச் சொல்லிக் காரில் போய்விட்டார்.

அன்று எனக்கு வீட்டில் பலமான வரவேற்பு நடந்தது. அண்ணி


தித்திப்பும் விறுவிறுப்புமான பட்சணங்கள் செய்து கொடுத்தாள். அண்ணு என்னிடம் வந்து குழைவுடன், "இனி உன் புத்தியால் நீ பிழைக்க வேண்டும். சமர்த்தாக இரு" என்று சொல்லிக் கண்ணீர் வடித்தார்.

பொழுது விடிந்ததுமே மாமா வந்தார்.

அண்ணுவிடம் அவர் ஒரு கற்றை நோட்டுக்களைக் கொடுத்து, "இதைச் செலவுக்கு வைத்துக் கொள்" என்ருர். நான் புதிய உடைகளை உடுத்துக்கொண்டு காரில் போய் அமர்ந்தபொழுது பெருமையாக இருந்தாலும், அந்த வீட்டைவிட்டுப் போக வருத்தமாகத்தான் இருந்தது. அண்ணுவும் அண்ணியுங்கூட நான் புறப்பட்ட போது கண்ணீர் வடித்தார்கள்.

கார் வேகமாய்ப் பறந்து, பல ஊர்களைத் தாண்டி, ஓர் இடத்தில் வந்து நின்றது. எதிரே பிரம்மாண்டமான கூடாரம் அடித்திருந்தது. குதிரைகளும் யானைகளும் ஒட்டகங்களும் வரிசை வரிசையாக நின்றன. அதோ, சிங்கத்தின் கூண்டும், புலிக்கூண்டுங்கூட இருக்கின்றனவே! எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

காரிலிருந்து இறங்கிய அந்த மாமா, "ஏ பயலே! இனிமேல் நான் சொல்கிறபடி கேட்க வேண்டும். இல்லாவிட்டால் இதனல் உன் முதுகுத் தோலைப் பிய்த்து விடுவேன்!" என்று ஒரு நீண்ட சாட்டையைச் சொடுக்கிஞர். எனக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது.



## 2

அந்த மாமா யார்? அவரிடம் பணம் வாங்கிக்கொண்டு என் அண்ணு என்னை இங்கே தள்ளி விட்டார்.

சர்க்கஸ் மானேஜர்தான் அவர். என்னை இப்படிக் குனியச் சொல்வார்; அப்படி நிமிரச் சொல்வார்; வில்லாக வளையச் சொல்வார். என் உடம்பு சொன்னபடி கேட்கவில்லையென்ருல், சாட்டையால் விளாசிவிடுவார். எனக்கு அழுகை அழுகையாக வரும். ஆனல் என் அழுகையை யார் கேட்கிருர்கள்?

நான் ஒரு கம்பியிலிருந்து அந்தரத்தில் இன்னெரு கம்பிக்குத் தாவ வேண்டும். தலை கீழாகச் சைக்கிள் விட வேண்டும். மற்றவர்

களோடு எட்டுக் கோண வடிவத்தில் நிற்க வேண்டும். வேடிக்கை பார்க்க வந்தவர்கள் என்னை மிகவும் பாராட்டினார்கள். மானேஜர் என்னைத் தனியே தட்டிக் கொடுப்பார்.

ஆனால் அவர் தட்டிக் கொடுப்பது அடுத்த ஆபத்துக்கு ஆரம்பம். ''சிங்கம் கூண்டிலிருந்து வெளியே வரும்போது, எதிரே இந்தப் பையனை நிற்கச் செய்து பழக்க வேண்டும்!'' என்று ஒரு நாள் சொல்லிவிட்டார்.


அவர் எதைச் சொன்னாலும் உடனே நிறைவேற்றிவிடுவார். ஆகையால், என்னை அச்சம் பிடித்துக்கொண்டது. சிங்கம் வெறியோடு எப்போதும் என் மேல் பாய்வதாகத் தோன்றிற்று. அன்று இரவு இரண்டாவது ஆட்டம் முடிந்து வெகு நேரம் ஆகியும் எனக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையிலிருந்து மெதுவாக எழுந்து வெளியே வந்து பார்த்தேன். எங்கும் ஒரே இருட்டு; வானத்தில் சில நட்சத்திரங்கள் மட்டும் கண்ணைச் சிமிட்டின.


அலுப்பில் எல்லாரும் தூங்கினார்கள். என் அறையில் இருந்த சின்னச் சைக்கிளை எடுத்துக் கொண்டு, கூடாரத்துக்குப் பின்புறமாக வந்தேன். சிறிது சந்தடி செய்தாலும், காவலாளிகள் பிடித்துக்கொள்வார்கள். பிறகு என்ன ஆபத்து நேரும் என்று சொல்ல முடியாது.

என் வழிக்கு நேரே ஒரு காவலாளி நின்றிருந்தான். நான் அரை மணி நேரம் நின்றேன். ஒரு மணி நின்றேன். அவன் அங்கிருந்து போகிறவனாகத் தோன்றவில்லை.

அப்போது வலது பக்கம் ஏதோ சலசலவென்று ஓசை கேட்டது. ஏதோ முயற்குட்டி போல வெண்மையாகத் தெரிந்தது. காவலாளி விர்ரென்று அதை நோக்கி ஓடினான். நான் மெதுவாகச் சைக்கிளை நகர்த்திக்கொண்டு நடந்தேன்.

சற்றுத் தொலைவு சென்றதும், வண்டியை வேகமாக விட்டேன். எனக்கு வழிதுறையே தெரியவில்லை. எங்கும் அடர்ந்திருந்த புதர்களுக்கும் மரங்களுக்கும்





நடுவே அகப்பட்டுக் கொண்டேன். விடியற் காலை நேரம் இருக்கும்; நான் ஒன்றும் தோன்றா மல் பிரமித்து நின்றேன்.

அப்போது எதிரே கண்ட காட்சி என்னைத் திடுக்கிட வைத்தது. துப்பாக்கியும் கையு மாக, ஒருவர் முன்னே வர, பின்னால் நாலைந்து ஆட்கள் ஒரு கலைமானைத் தூக்கிக்கொண்டு வந் தார்கள்.

என்னை டார்ச்சு விளக்கில் பார்த்த வேட்டைக்காரர், "யார் நீ? இங்கு எப்படி வந்தாய்?" என்றார்.

எனக்கு ஒன்றும் பேசவே வாய் வரவில்லை. புது மனிதர் தம் கையில் இருந்த பிளாஸ்கிலிருந்து எனக்குச் சூடான காபி கொடுத்தார். அதைக் குடித்துவிட்டு அவரைத் தொடர்ந்தேன். என் வரலாற்றைச் சுருக்கமாகச் சொன்னேன்.

## 3

வேட்டைக்கார வீரமுத்துத் தேவர் நான் நினைத்தபடி இல்லை. என் துன்பங்களுக்கு முடிவு கட்டவே தெய்வம் அவரை அனுப்பியிருந்தது. அவர் என்னைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று நாலைந்து நாள் வைத்திருந்தார். என் நிலைமையை அறிந்து, என்னை ஒரு தர்மப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து, இலவசச் சாப்பாட்டுக் கும் ஏற்பாடு செய்தார். நான் படிப்படியாகப் படித்து முன்னேறி, ஒரு கம்பெனியில் வேலைக்கு அமர்ந்தேன்.

அவர் செய்த உதவியை நான் மறக்கவே இல்லை. அடிக்கடி அவர் வீட்டுக்குப் போய் குசலம் விசா ரித்து வருவேன். அவரும் என்னி டம் மாறாத அன்போடு இருந்தார்.

அன்று காலையில் நான் ஆபீசுக் குப் புறப்படும் சமயம். தேவர் என்னைப் பார்க்க வந்தார்.

"இவரை உனக்குத் தெரி கிறதா?" என்று கேட்டார்.

அதற்குள், அவர் தாவி வந்து என்னை அணைத்துக்கொண்டார்.

"ராமு, ராமு, உன்னைத் துரத் தியதால் சாப்பாட்டுக்கும் வழி யின்றி, ஊரூராக வேலை தேடி அலை கிறேன். இந்த ஊரில் இவர் பெரிய உபகாரி என்று கேள்வியுற்று இவர் வீட்டுக்குப் போனேன்..."

"என் வீட்டுக்கு வந்ததனால் உன்னையே கண்டு பிடித்து விட்டார்" என்று பேச்சை முடித் தார் தேவர்.

தேவருடைய முயற்சியினால் அண்ணா இந்த ஊரிலேயே மீண்டும் ஜவுளி வியாபாரம் ஆரம்பித்தார். வியாபாரம் ஜோராக நடந்தது.

"ராமுவிடம் நாம் வந்த வேளை நல்ல வேளை" என்று அண்ணி என்னைப் பாராட்டாத நாளே இல்லை.

அண்ணாவின் வீட்டிலிருந்து நான் புறப்பட்ட வேளையும் நல்ல வேளை தானே!




மணியினால் ராமுவின் கொடிய குற்றச்சாட்டைப் பொறுக்க முடியவில்லை. அத்தையும் சிறிது தயங்கினாள். ஆனால் கையில் அகப்பட்ட சிட்டுக் குருவியை இம்சிப்பதுபோல ராமு மேலும் ஆத்திரத்துடன் குதித்தான். ''என்னடா, நாடக மேடை யல்லடா இது; ஒரேயடியாக நடிக்கிறாயே! நீ கொண்டுபோய் வைக்காமல் பூதம் கீதம் வந்து எடுத்துப் போய் உன் பெட்டிமேலே வச்சுதோ? உன் கை கிழிக்காமல் உங்க தாத்தா வந்து கிழிச்சுட்டுப் போனாரோ? எனக்கு அவமானமும் இடைஞ்சலும் பண்ணத்தானேடா நீ இந்த வீட்டுக்கு வந்திருக்கே. வேறு எதற்கு?'' என்று நாடக மேடை வில்லன் மாதிரி நரம்பு புடைக்கக் கத்தினான்.

இதற்குள் மணியின் மாமா வந்துவிடவே ஒரு கணநேரம் சத்தம் அடங்கியது. அவர், ''என்னடா இங்கே?'' என்று கேட்டுக்கொண்டே ஊஞ்சல் பக்கம் வந்தார். அத்தை உடனே எழுந்து, ''ஏதோ புஸ்தகம் இரவல் வாங்கிக் கொண்டு வந்து ராமு வச்சிருந்தானாம். அதை மணி கிழிச்சு வச்சிருக்கான். புஸ்தகத்தை எடுத்தா ஒரு கை சும்மா இருக்காதோ? . . அதைக் கிழிப்பானேன், கேடு!'' என்றாள்.

வெளியில் போய்விட்டு வந்ததுமே யாருக்கும் கலகலப்பாக இருந்தால்தானே பிடிக்கும்? சண்டையும் கூச்சலுமாக இருந்தால் எரிச்சல் வராமல் இருக்குமா? மாமாவுக்கு எரிச்சலும் கோபமும் தான் வந்தன.

''இங்கே வாடா, பயலே!'' என்று மணியைக் கூப்பிட்டார்.

மணி அருகில் வந்து பயத்தோடு நின்றான்.

''புஸ்தகத்தை எடுத்தியா?''

''இல்லே மாமா. எனக்கு. . நான் எடுக்கவேயில்லே, மாமா!''

''பொய்'' என்று ராமு கத்தினான்.

''எடுக்காமே உன் பெட்டிக்கு என்னமாடா வந்தது?'' என்றாள் அத்தை.

மாமா மணியின் கையை எட்டிப் பிடித்துக்கொண்டார். ''பயலே, பொய் வேறே சொல்றியா?'' என்று கர்ஜித்தார். மணியோ நடுநடுங்கிப் போய்விட்டான். மாமாவுக்குக் கோபம் வந்து அவன்

பார்த்ததேயில்லை. கோபம் வந்தால் என்ன செய்வாரோ என்றும் தெரியாது. அதனால் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு நின்றான்.

பொய் பேசுவதும், அதைச் சாதித்து ஜயித்துக்கொள்ள மாய் மாலம் செய்து அழுவதும்தானே உலகத்தில் பழக்கம்? அதைத்தான் மணியும் செய்கிறான் என்று மாமாவுக்குத் தோன்றியது. ''நான் தெரியாமல் எடுத்துவிட்டேன், கைத்தவறுதலாகக் கிழித்து விட்டேன்'' என்று ஒப்புக்கொண்டிருந்தால்கூட அவருக்குக் கோபம் வந்திராது.

''பயலே, பொய் சொன்னதும் இல்லாமே அழுது ஜயிக்கப் பாக்கிறியா? உம்..'' என்று அடித் துடையைப் பிடித்து ஒரு நிமிஷடு நிமிண்டினார்.

மணி, ஓவென்று அழுதான்.

''இல்லே மாமா..பொய் சொல்றான், மாமா!'' என்று அழுகையோடு சேர்ந்து கத்தினான்.

பளிச்சுப் பளிச்சு என்று கூடவே நாலு அடிகள் விழுந்தன.

''அஞ்சு ரூபாய் புத்தகம், அப்பா!'' என்று தணிந்து வரும் கோபத்தை, ராமு கிளறிவிட்டான்.

மணிக்கு அடி வாங்கியது எல்லாம்கூடப் பெரிதாகவே படவில்லை. தீர விசாரிக்காமலே அடிக்க வந்துவிட்டாரே! 'இவர் பிள்ளையாக இருந்தால் இப்படிச் செய்வாரா?' என்ற எண்ணமே அவனை வாட்டி வதைத்து விட்டது. கோபம் என்று வந்துவிட்டால் தன் பிள்ளை, பிறர் பிள்ளை எல்லாம் ஒன்றுதான் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

மணி ரோசம் தாங்கமாட்டாமல், ''என்ன மாமா, எனக்கு நாதியில்லை என்றுதானே இப்படி எல்லாருமாகச் சேர்ந்துகொண்டு என்னைக் கொல்லுகிறீர்கள்?'' என்று நிஷ்டூரமான ஒரு பெரிய வார்த்தையைச் சொன்னான்.

'இத்தனையூண்டுப் பயலா இவ்வளவு பெரிய வார்த்தையைப்



பேசுகிறுன்!' என்ற அதிசயம் மாமாவையும் அத்தையையும் அதிர்ந்துபோகச் செய்துவிட்டது.

சற்று நேரம் பொறுத்து அத்தை மெதுவாக, "வீட்டிலே வைத்துக் கொள்ளவும் சாதம் போடவும் தான் சொந்தம், பொல்லாத் தனத்தைக் கண்டிக்க நமக்குச் சொந்தம் இல்லையா? சிறிசா லட்சணமாகவா பேசுகிறுன்! சே சே! இதெல்லாம் நமக்கு வீட்டில் வைத்துக்கொள்ள லாயக்கு இல்லை!" என்றுள்.

மணி சின்னப் பையன்தானே? அவனுக்கு உடனே இல்லாத பயமெல்லாம் வந்துவிட்டது. எல்லாரும் போன பிறகு அவன் சாப்பிடப் போகாமலே ஒரு மூலையில் உட்கார்ந்தான். இருட்டில் கையில் வைத்துக்கொண்டிருந்த புத்தகம் அதுதான் என்பது நிச்சயமாகத் தெரிந்தது. ஆனல் அதை யார் அங்கே கொண்டுவந்து வைத்தார்கள்? அது எப்படி அவன் பெட்டிக்கு வந்தது? அதுதான் அவனுக்குப் புரியவில்லை. எல்லாரும் அவனுக்கு விரோதமாக வேண்டுமென்றே செய்வதுபோல் இருந்தது. அதை நினைத்ததும் அவன் அம்மாவின் ஞாபகம் வந்தது. 'அம்மா, என்னை இப்படி விட்டு விட்டுப் போய்விட்டாயே!' என்று நினைத்துக்கொண்டு தனியாக அழுதான். அழுகையை அடக்க மாட்டாமல் உடனே எழுந்து வெளியே போனுன்.

வெளியில் வந்ததுமே குளிர்ந்த காற்று அவனுடைய எரியும் உள்ளத்துக்கு ஜிலுஜிலுவென்று படும்படி வீசியது. தயங்காமல் அவன் குமார் வீட்டை நோக்கிச் சென்றுன். இந்த நேரத்தில் மணி அழைப்பதைக் கண்ட குமாருக்கு வியப்பாக இருந்தது.

ஆனல் நடந்ததையெல்லாம் அவனிடமிருந்து கேட்ட பிறகு, குமாருக்கு என்ன ஆறுதல் சொல்வது என்றே தெரியவில்லை.

"என்னை அடிச்சதுகூட எனக்கு வலிக்கல்லேடா! நான்தான் எடுத்துக் கிழிச்சேன் என்று எல்லாரும் விசாரிக்காமலே முடிவு கட்டி விட்டார்களேடா. நான் எடுக்கல்லேன்னு எப்படிடா ருசுப்படுத்துவேன்?" என்று மணி விக்கி விக்கிப் பொருமினுன்.

"மணி, இதுக்கெல்லாம் வருத்தப்படாதே. பேசாமல் வீட்டுக்குப் போ. வேண்டுமானுல் என் வீட்டிலேயே சாப்பிட்டுவிடு. எல்லாம் சரியாகிவிடும்" என்றுன் குமார். எவ்வளவோ வற்புறுத்தியும் மணி கேட்காமல் வீடு திரும்பினுன்.

அவன் மாமா அவனை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். "எங்கேடா போனே? போய்ச் சாப்பிடுடா, போ!" என்றுர்.

"பசியில்லை, மாமா. நான் சாப்பிடவில்லை!" என்றுன் மணி.

"அவன் இங்கே சாப்பிடுவானு? அவன் சிநேகிதன் குமார் வீட்டிலே சாப்பிட்டிருப்பான். எப்படிப் பசிக்கும் அவனுக்கு?" என்று நிந்தையாகச் சொல்லிவிட்டு, சாதம் போட வந்த அத்தை எல்லாவற்றையும் மூடி வைத்தாள்.

மணி படுக்கையில் படுத்துக் கொண்டு வேதனையால் துடித்தான். மனவேதனை வேறு; பசி வேதனை வேறு. கடிகாரம் ஒன்பது, பத்து, பதினென்று, பன்னிரண்டு மணி அடித்துவிட்டது.

திடீரென்று தாழ்வாரத்தில் பேச்சுக் குரல் கேட்டது. "நான் தாண்டா எடுத்தேன். நான் தாம்மா எடுத்தேன்..அவன் எடுக்கல்லேடா! இனிமே நான் புஸ்தகத்தைக் கிழிக்கல்லேடா!" என்று கீச்சுக் குரலில் கமலா கத்துவது கேட்டது.

(தொடரும்)

# பட்டு ரோஜா

'ஸேனு'

## 1

பூந்தோட்டம் என்றால் அந்த ஊரில் எல்லாரும் முத்துசாமிப் பிள்ளையின் வீட்டைத்தான் காட்டுவார்கள். பாலைவனத்தின் நடுவில் பசுந்திட்டு மாதிரி, களர் மண் நிறைந்த அந்தப் பட்டிக்காட்டில் அவருடைய மனை ஒன்றில் தான் மரமும் செடியும் கொடியும் ஏராளமாக இருந்தன; எப்போதும் பூத்துக் குலுங்கின. ஏதாவது பச்சிலை வேண்டுமென்றால் அங்கே போனால் நிச்சயமாகக் கிடைக்கும்.

அவரும் அவர் மனைவியுந்தான் அந்த வீட்டில். அவர்களுக்குக் குழந்தை குட்டி எதுவும் இல்லை. வயசோ ஆகிவிட்டது. அதனால் மரஞ்செடிகளையே தங்கள் குழந்தைகளைப் போல் அருமையாகக் கவனித்து வந்தார்கள். அதுவும், பூஞ்செடி என்றால் பிள்ளைக்கு உயிர். இரண்டு பேருமாகக் கிணற்றிலிருந்து நீர் சேந்தியாவது அவைகளுக்குக் கொட்டாமல் இருக்க மாட்டார்கள். தப்பித் தவறி வேலி ஓரம் யாராவது ஒரு கொடியையோ மரக்கிளையையோ ஒடித்துவிட்டால் பிள்ளைக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிடும். வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டுவார். அவர் வாயே வேலியாக இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு நாள் ஏதோ வெளியூருக்குப் போய் வந்தார். கையோடு ஒரு சிறு மண் தொட்டியில் பட்டு ரோஜா நாற்று ஒன்றைக் கொண்டு வந்தார். அதைத் தோட்டத்தின் ஒரு பக்கம் செம்மண், எரு எல்லாம் போட்டு நட்டார். அது வாடாமல் நன்றாக வளர்ந்து வந்தது. ஒரு நாள் அந்தச் செடியில் மொட்டுக் கண்டிருந்தது. பிள்ளைக்கு ஒரே குதூகலம்! அது பூக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்.

மரஞ் செடிகளுக்கு அடுத்தபடியாகக் குழந்தைகள் என்றால் அவருக்கும் அவர் மனைவிக்கும் ரொம்ப ஆசை. அடிக்கடி ஊர்க்



குழந்தைகளை அழைப்பார்கள். லட்டு முதலிய தின்பண்டங்களைக் கொடுப்பார்கள். அப்போதும் குழந்தைகள் செடிகளை நெருங்காத படி பார்த்துக்கொள்வார் பிள்ளை. அந்தக் குழந்தைகளிலும் வள்ளி யைக் கண்டால் அவருக்கு ரொம்பப் பிடிக்கும். வள்ளி ஊர்க் கருமானின் நாலாங் குழந்தை; முகம் துறு துறுவென்று இருக்கும். வயசு நாலுதான். பிள்ளை அதைத் தூக்கிக் கொஞ்சவேண்டும் என்று வரும்போது அது வெளியே ஓடிப் போய்விடும். அவர் கையில் சிக்கவே சிக்காது.

ஒரு நாள் காலை பட்டு ரோஜாச் செடி முழுவதும் செக்கச் செவேல் என்று பூத்திருந்தது; அந்தக் காட்சி யைக் கண் கொட்டாமல் பார்த்த படி பிள்ளை மெய்ம்மறந்து இருந் தார். அன்று ஊர்க் குழந்தைகளை அழைத்துத் தின்பண்டம் வழங் கினர். ஒவ்வொன்றின் கையிலும் ஒரு பட்டு ரோஜாவைக் கொடுத் தார். குழந்தைகளுக்கு அன்று ஒரு பெரிய திருவிழா நாள் மாதிரி இருந்தது.


முன்னைவிடக் கண்ணுங் கருத்து மாகப் பிள்ளை அந்தச் செடியைக் கவனித்து வந்தார். ஒவ்வொரு நாளும் மொத்தம் எத்தனை மொட்டு என்று எண்ணிப் பார்ப் பது அவருக்கு ஒரு பொழுது போக்கு. ஆனல், ஒரு நாள் விடியற் காலை அவர் எழுந்து வந்து பார்த்தபோது, ஒரு பூவைக் கூடக் காணவில்லை; ஏதோ அரை குறையாக மலர்ந்த இரண்டொரு மொட்டுக்கள்தான் இருந்தன.

அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "யாரோ திருட்டுப் பயல் 'பொழுது விடிவதற்கு முன்னு லேயே வந்து திருடிக்கொண்டு போய்விட்டான்! - இருக்கட்டும். நாளைக்கு அவனைச் சும்மா விடு கிறேனு பார்!" என்று சொல்லிப் பல்லை நறநறவென்று கடித்தார்.

## 2


அன்று இரவு வாசல் பக்கம் வெகு நேரம் தூங்காமல் காவல் காத்துவந்தார் பிள்ளை. கையில் தயாராக டார்ச் விளக்கும் குறுந் தடியும் வைத்திருந்தார். ஆனல் பொழுது விடிய ஒரு மணி நேரத் துக்கு முன் அவரையும் மீறித் தூக் கம் கண்ணை அழுத்தியது. சற்று நேரத்துக்கெல்லாம் அவர் மனைவி அவரைத் தட்டி எழுப்பி, "அதோ ஓசை கேட்கிறது, செடியண்டை!" என்றுள் மெதுவாக.

பிள்ளை திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். டார்ச் விளக்கின் பித்தானை அழுத்தினர். ஆனல் அது எரிந்தால்தானே? பிள்ளை எழுந்திருக்கப் பார்த்தார். காலில் ரத்தம் கட்டிக்கொண்டு மரத்து விட்டது. எழுந்திருக்க முடிய வில்லை. எரிச்சலோடு, கையில் இருந்த குறுந்தடியை ரோஜாச் செடியின் பக்கம் ஓங்கி வீசினர்.



"பாத்த மாதிரி இருக்கு. சட்டுனு ஞாபகத்துக்கு வறலே."

"வராதுதான். நமக்கெல்லாம் ஞாபகசக்தி அதிகம்னு சொல்லிச் சொல்லி நாம் இப்படி ஆயிட் டோம்."



உடனே, ''யம்மாடீ!'' என்று ஒரு கீச்சுக் குரல் கேட்டது. பிள்ளை திகிலுடன் டார்ச் விளக்கின் பித்தானை மறுபடியும் அழுத்தினர். இந்தத் தடவை பளிச்சென்று வெளிச்சம் வீசியது. பிள்ளையின் மனைவி அங்கே ஓடிப்போனுள்; ''ஐயோ! ஏதோ குழந்தை!— அடாடா! நம்ம பொன்னன் பெண் வள்ளி! சுருண்டு விழுந்தூட்டுதே!'' என்று கதறினுள்.

அதற்குள் பிள்ளையும் தள்ளாடிக் கொண்டே அங்கே வந்தார்; பட்டு ரோஜாப் பூ இரண்டு மூன்று கீழே கிடந்தன. அருகில் வள்ளியின் தலையில் அதே அளவுக்கு, அதே நிறத்தில் ரத்தம் கசிந்துகொண்டிருந்தது! குழந்தை மூர்ச்சையாகிக் கிடந்தது.

தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டார் பிள்ளை. அவருடைய மனைவி கண்ணில் நீர் ததும்ப, ''உங்க பட்டு ரோஜா பட்டுப் போக! சீக்கிரம் தண்ணி எடுத்து வாங்க. குழந்தை முகத்தில் தெளிக்கலாம்!'' என்றுள்.

அவர் ஓடிப் போய் அப்படியே கொஞ்சம் நீரை எடுத்துவந்து அதன் முகத்தில் தெளித்தார். ''காயத்தைக் கவனி....இதோ பிளாஸ்கிலே கொஞ்சம் பால் இருக்கிறது. குழந்தைக்குக் கொடு. மூர்ச்சை தெளியும். நான் போய்ப் பொன்னனை இட்டு வருகிறேன்'' என்று தலை தெறிக்க வெளியே ஓடினர்.

அதற்குள் அவர் மனைவி பிளாஸ்கிலிருந்து பால் கொண்டுவந்து குழந்தையின் வாயைத் திறந்து ஊற்றினுள். பால் இன்னும் சூடாகவே இருந்தது. காயம் அப்படி ஒன்றும் அதிகம் இல்லை. ஈரத்துணியால் அதைத் துடைத்துக் கட்டினுள். குழந்தை அப்போது கண்ணை விழித்துச் சுற்று முற்றும் பார்த்தது.

அதற்குள் பிள்ளையும் பொன்னனேடு வந்து சேர்ந்தார். குழந்தை கண் கொட்டுவதைப் பார்த்ததும் அவர் அதனருகில் ஓடி வந்து, ''என் கண்ணே! பாவி உன்னைக் கொல்லப் பார்த்தேனே!'' என்று தேம்பித் தேம்பி அழத் தொடங்கினர்.

குழந்தை சற்றே சிரித்தது. அப்போது பொன்னன், ''ஏண்டி சிறுக்கி! பூத் திருடப் போனுயோ இல்லையோ? சரியான தண்டனை!'' என்றுன் சிரித்துக்கொண்டே.

''நல்ல வேளை! அதிகக் காயம் இல்லை'' என்றுள் பிள்ளையின் மனைவி.

''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டார் பிள்ளை; ''பொன்னு, இனிமேல் அவள் உன் பெண் இல்லை. எங்க பெண்தான். இது அவள் வீடு. ஜாக்கிரதை! அவளை இங்கே திட்டாதே!'' என்றுர், பொய்க் கோபத்தோடு. பிறகு, ''தினம் பிடிக்கப்போனுல் ஓடிவிடுவாயே! இப்போ தாத்தா கிட்ட அகப்பட்டுக் கிட்டாயே!'' என்று சொல்லிக் குழந்தை வள்ளியின் முகத்தில் முத்தமிட்டு அதைத் திணற அடித்துவிட்டார்.




[சிறுவர் சிறுமிகள் நாடகம் நடிக்கிறார்கள். வைத்திய அறை. நர்ஸ் உட்கார்ந்திருக்கிறாள்.]

நர்ஸ்: பூம்பூம் பூம்பூம் பூம்பூம் என்றே
போட்டது சத்தம் மோட்டார் ஹாரன்
டக்டக் டக்டக் டக்டக் என்றே
டாக்டர் வந்தார் வேக மாக
எழுந்து நின்று புன்னகை பூத்தேன்
மருந்துப் பெட்டியை வாங்கி வைத்தேன்
புன்னகை பூத்து வருக என்றேன்.

டாக்டர்: என்னைப் பார்க்க
எவரேனும் உண்டா?

நர்ஸ்: ஏனோ அறியேன் டாக்டரே!
இன்று யாரும் இல்லையே.
தேனோ டளித்த மருந்துகள்
செய்த விந்தை யோ இது?
குளிரும் இல்லை வலியும் இல்லை.
குடைச்சல் குத்தல் இல்லையே
சளியும் இல்லை சுரங்கள் ஒன்றும்
சற்றும் இல்லை யார்க்குமே!

டாக்டர்: எள்ள ளவும் சலன மின்றி
எதிலும் பொறுப்புச் செலுத்திடாப்
பள்ளிச் சிறுவர் சிறுமி யர்கள்
பலபேர் வருவார் பார்த்திரு!

**புட்டி நிறைய டிஞ்சர் மருந்தும்**
**புதிய பஞ்சு பிளாஸ்டரும்**
**கட்டுப் போடத் துணியும் ஜலமும்**
**கவன மாக எடுத்து வை!**

[டாக்டர் உள்ளே போகிறார். கண்ணன் வருகிறான்.]

கண்ணன்: **ஐயோ! தலையை வலிக்குதே!**
**ஐயோ! ஐயோ வலிக்குதே!**

நர்ஸ்: **கண்ணா உனக்கு என்ன?**

கண்ணன்: **நண்பன் அழைத்தான், ஓடினேன்**
**நாற்காலி மேல் மோதினேன்!**
**மண்டை உடைந்து போச்சுதே!**
**மருந்து வேண்டும் தருவீரே.**

நர்ஸ்: நடக்கும் வழியில் தடுக்கி விழச் செய்யக்கூடிய எந்தப் பொருளையும் வைக்காதே, கண்ணா. உள்ளே போ. டாக்டர் காயத்துக்குக் கட்டுக் கட்டுவார்.

[கண்ணன் உள்ளே போகிறான்; லலிதா வருகிறாள்.]

லலிதா: ஆ! அப்பா! ஐயோ!

நர்ஸ்: என்ன அம்மா லலிதா?

லலிதா: **வத்தி ஒன்றைக் கொளுத்தினேன்**
**வாரிக் குவித்த குப்பையில்**
**பத்தி எரிந்தது தீயினால்**
**பாழாய்ப் போச்சே கையெலாம்.**



நர்ஸ்: லலிதா, நெருப்புப் பற்றவைக்கும்போது கவனமாய் இருக்கவேண்டும். வீட்டில் எந்த இடத்திலும் குப்பை கூட்டி வைக்காதே. உள்ளே போ. டாக்டர் காயத்துக்குக் கட்டுக் கட்டுவார்.

[லலிதா போகிறாள்; ஜக்கு வருகிறான்.]

ஜக்கு: இடுப்பெல்லாம் ஒடிந்து போய்விட்டதே! ஐயோ!

நர்ஸ்: என்ன ஜானு!

ஜக்கு: **மாடிப் படியின் நடுவிலே**
**மறந்து வைத்தேன் பொம்மையை**
**ஓடி வந்து விழுந்தேனே**
**ஒடிஞ்சு போச்சு இடுப்புமே.**

நர்ஸ்: எல்லோரும் நடக்கும் மாடிப்படியில் வழியின் நடுவில் எதையும் வைக்காதே. உள்ளே போ. டாக்டர் காயத்துக்குக் கட்டுக் கட்டுவார்.

[ஜக்கு போகிறான்; மாலினி வருகிறாள்.]

மாலினி: ஐயோ! நான் நொண்டியாகி விட்டேனே!

நர்ஸ்: என்ன மாலினி! உனக்கு என்ன?

மாலினி: **தரையில் கிடந்த சோப்பினைச்**
**சற்றும் கவனி யாமலே**
**விரைவாய்க் குளிக்கச் சென்றேனே**
**விழுந்தேன் காலும் போனதே!**

நர்ஸ்: குளிக்கும் இடத்தை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். சோப்பைத் தரையில் போட்டு வைக்காதே. உள்ளே போ. டாக்டர் காயத்துக்குக் கட்டுக் கட்டுவார்.

நர்ஸ்: **பாவம் இந்தப் பசங்க ளெல்லாம்**
**மறதியினாலே**
**பட்டபாடு காணப்பரி தாப மாகுதே.**

கொஞ்ச நேரம் கழித்து டாக்டரின் அறையிலிருந்து குழந்தைகள் வருகிறார்கள். கண்ணனின் தலையிலே பலத்த கட்டு. லலிதாவின் கையை முழுவதும் மறைக்கும் 'பாண்டேஜ்'. ஜக்குவின் இடுப்பிலும் முதுகிலும் பெரிய கட்டு. கையிலே நீண்ட கோலை ஊன்றி ஊன்றி வருகிறாள்.

[குழந்தைகள் எல்லோரும்]

**எச்சரிக்கை யாயிருக்கும்**
**வழிகளை நீங்கள்**
**இன்னபடி என்றறியும்**
**வகையைக் காட்டினோம்**
**மெச்சும்படி ஜாக்கிரதை**
**யாயி ருப்பதால்**
**வேதனைஎல் லாம் ஒழியும்**
**இன்பம் ஓங்குமே.**

(திரை விழுகிறது.)

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.




## அம்மா குழந்தைகளுக்குக் கதை சொல்கிருள்

அருமையான கதைகள், சொல்லச் சொல்லத் தித்திக்கும் தீங்கதைகள், கருத்தைக் கவரும் **கண்ணன்** கதைகள், குழந்தைகள் விரும்பும் கதைகள்:

சின்னராஜா
பவழவல்லி
ஜக்கு
விளையும் பயிர்
சமர்த்து மைனு
விஞ்ஞானம் பேசுகிருர்!
மின்னல் அரக்கன்
ஏரிக்கரை மாளிகை
தவளையும் காளையும்
கழுகும் கிளியும்
குளிகைத் தீவு
மாஸ்டர் பாலகுமார்
பார்வதியும் சித்திரக்குள்ளர்களும்
வால் அறுந்த குரங்கு
தங்கத்தின் பந்து
கோழி விதைத்த நெல்
என் பேர் என்ன?

கண்ணன்

**எல்லாம் தேன்போல் இனிக்கும் கதைகள்**

விவரங்களுக்கு:

**கண்ணன் காரியாலயம்**

மயிலாப்பூர் : : சென்னை-4.

FS. 8707 (Rev.)

# 501

## சலவை சோப்புகள் வீட்டுச் சலவை வேலையை சுலபமாக்குகின்றன

501 சோப்புகளின் செழுமையான நுரை துணிமணிகளுக்குள் ஊடுருவிச் சென்று, அழுக்கையெல்லாம் மாய மாய் வெளியேற்றுகிறது. இந்தசோப்புகள் வீட்டுச் சலவை வேலையை உங் களுக்கு அதிக சுலப மும் சிக்கனமுமாக்கு கின்றன.




A TATA PRODUCT

இந்திய மூலதனத்தைக்கொண்டு, இந்திய நிர்வா கத்தில், இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிட்.,